www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
UK-PRICE-90 P
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ஜூலை.30–ஓக.05,1995
ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 112

# ஆயுதக் கொள்வனவுகள் அடுத்த கட்டம் என்ன?

## சர்வதேச நிர்ப்பந்தமும் பேச்சு வார்த்தையும்



ரசிகன் தரும் கிரைம் திரில்லர்

படம் ஒன்று ஷொட் இரண்டு

வித்தியாச சினிவிசிட்

# ஜிகாத்-ஜிகாத் அபுஜிகாத்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## ஏன்... ஏன்... ஏன்?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

முன்னூறு மனித உயிர்கள்
அத்தனை பேரும் சாதாரண மக்கள்
கொல்லப்பட்டதும் ஏதோ
தற்செயலாக மோதலில் சிக்கியுமல்ல.
குண்டுவீச்சுக்களால், ஷெல் அடிகளால்!

அதைச் சொன்னால் போதும்
அய்யய்யோ....இனவாதம் என்கிறார்கள்.

புலிகளை நினைத்துக்கொண்டு
பொதுமக்களுக்கோ 'ஷெல்' பூசை?
என்று ஆதாரத்தோடு கேட்டாலும்
புலிகளுக்கு வக்காலத்தா?
என்று பொங்கி எழுகிறார்கள்.

விபரம் தெரியாமல் பேசினால்
விளக்கம் சொல்லலாம்.
நிலவரம் தெரியாமல் பொங்கினால்
நியாயத்தை எடுத்து விளக்கலாம்.

ஆனால், பேசுகிறவர்கள் யார்?
பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள்
மற்றும் பொறுப்புக்களில் இருப்பவர்கள்!
அதனால்-தூங்குவது போல பாசாங்கு
என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

தெற்கில் ஜே.வி.பி. கிளர்ச்சி
இரண்டுமுறை பயங்கரமாக வெடித்தது.

இரண்டுமுறையும் அதேபயங்கரத்தோடு
அந்தக் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது.
ஒடுக்கப்பட்ட பின்னர்தான்
ஒளித்திருந்த புத்திஜீவிகள்
வெளியே ஓடிவந்து பார்த்தனர்.

அய்யகோ! இது என்ன கொடுமை!!
ஜே.வி.பி ஒழிப்பு என்று அப்பாவிகளை
அழித்துவிட்டார்களே என்று
ஆவேசப்படத் தொடங்கினார்கள்.

பொதுஜன முன்னணி ஆட்சிக்கு வந்த சூட்டோடு
சூரியகந்த புதைகுழி தோண்டப்பட்டது.
எலும்புக்கூடுகளை வைத்து
குற்றவாளி யார்-சுத்தவாளி யார்
என்றோ விசாரணை நடத்த முடியும்?
ஆயினும் அவையாவும் அப்பாவிகளின் எலும்புக்கூடுகள்
என்றே முத்திரை குத்தப்பட்டது.

நல்லது, களைகளை பிடுங்குவதாக
வெளியே சொல்லிக் கொண்டு
பயிர்களை நாசமாக்கியதை
யார் வேண்டுமானாலும் சொல்லட்டும்.
எடுத்துக்காட்டி நியாயம் கேட்கட்டும்
அப்படியானால்தான்
இனி ஒரு தவறு-அநியாயம் நிகழாமல் தடுக்கலாம்.
ஆகவே, அதனை வரவேற்கலாம்!

ஆனால், இதே கண்ணோட்டத்தை
வடக்கு-கிழக்கு விவகாரத்தில்
செலுத்தத் தவறுவது ஏன்?
அதுதான் கேள்வி!

முன்னேறிப் பாய்தலில்
முன்னூறு மனித உயிர்கள்
மண்ணில் உதிர்ந்தன.
ஐநூறுக்கு மேற்பட்டோர்
காயமடைந்தனர், அங்கவீனமாகினர்.
இது புலி எதிர்ப்பாகப் படவில்லை-
பொதுமக்கள் அழிப்பாக இருக்கிறதே
என்று சொன்னால்....
அய்யய்யோ.....இனவாதம் என்கிறார்களே,
ஏன்-எப்படி-எதற்கு?

பேசும் மொழியில் வேறுபாடு இருக்கலாம்
சிந்தும் இரத்தத்தில் இருக்கமுடியாதே!
குற்றமற்ற மக்கள் குருதி சிந்தும்போது
மனித உரிமையில் அக்கறையுடையவர்களின்
கொதிப்பும், குமுறலும்
பொதுவாகத்தானே இருக்க வேண்டும்?!
ஆனால்-அப்படி நமக்கு தெரியவில்லையே!
ஏன்....ஏன்....ஏன்?

போர் என்றால் இழப்புக்கள்
இருக்கத்தான் செய்யுமாம்!
பொதுமக்கள் பாதிப்பும்
தவிர்க்க முடியாததுதானாம்!

நல்லது, நண்பர்களே!
இதே வாதத்தை தெற்கில்
ஜே.வி.பி. கிளர்ச்சி
ஒடுக்கப்பட்டபோது-
அப்பாவிகள் பலியான விடயத்தில்
நீங்கள் அங்கீகரிக்கவில்லையே..
அது ஏன்? எப்படி?

புரிகிறது, தெற்கில் உள்ள
சில சக்திகள் தேனொழுகப்பேசுவது
மனிதாபிமானத்தில் அல்ல
இன அபிமானத்தில்! அதுதான்
நாம் இனவாதிகளாகத் தெரிகிறோம்!
நாம் சொல்லும் உண்மைகள்
இனவாதமாகத் தெரிகிறது
அதற்கு நாம் என்ன செய்வது?

இன உரிமைகளைப்பற்றி பேசுவது
ஒரு புறமிருக்கட்டும்,
இன்னுயிர்கள் பலியாகுவது பற்றி
பேசுவதே இனவாதம் என்று
எடுத்துக்கொள்ளப்படுமானால்
இந்த நாடு-இன ஒற்றுமைக்கான
கடைசி நம்பிக்கையையும்
இழந்து கொண்டிருப்பதாகவே அர்த்தம்!

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை- என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்



## நித்திய வீடு

எதிர்காலத்தைப் பற்றி எந்த ஒரு எதிர் பார்ப்பையும் கொள்ள முடியாத திக்கற்ற வாழ்வை நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்கு எமது வாழ்வை அமைத்துக் கொள்வது என்று அங்கலாய்க்கிறோம். எமக்கு வேதாகமம் தரும் ஆறுதல் வார்த்தைகள்: "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கை வேலையில்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டு" (11 கொரிந்தியர் 5:1)

உலகில் நமது வாழ்க்கை ஒரு யாத்திரைக்கு ஒப்பானது, வீண் பதற்றங்களை விடுத்து ஒவ்வொரு நாளையும் இறைவனுக்குப் பிரியமான, மனிதர்களுக்குப் பிரயோசனமான வகையில் கழிக்க எத்தனிக்க வேண்டும். இக்கட்டான எந்த சூழ்நிலையிலும் எமக்கு நிரந்தரமான நித்திய வீடு உண்டு என்று விசுவாசித்து, கடவுளின் துணையோடு, அவர் சித்தம் அறிந்து, அதன்படி வாழ்வோம்.

செ.கீதாஞ்சலி-கொழும்பு-06.

## அண்ணல் நபியவர்களின் அருள் மொழிகள்

* பொறாமையும், சந்தேகமும் சமுதாயத்தை குலைத்து விடும் தீய சக்திகள்.
* பலவீனர்களின் பால் அன்பாக இருப்பவர்களை இறைவன் தன் நிழலின் கீழ் அமர்த்தி சொர்க்கத்திற்கு அனுப்புவான்.
* வயது முதிர்ந்த தன் பெற்றோருக்கு பணிவிடை செய்யாதவன் சுவர்க்கம் செல்ல மாட்டான்.
* நீங்கள் எவர்களிடம் கல்வியறிவு பெறுகிறீர்களோ அவர்களுக்கு மரியாதை செலுத்துங்கள்; நீங்கள் எவர்களுக்கு கல்வி கற்பிக்கின்றீர்களோ அவர்களையும் மரியாதையுடன் நடத்துங்கள்.
* நீ இவ்வுலகில் புரியும் நன்மைகளே உனது உண்மையான செல்வம்.
* மனிதன் தனக்குப் பயன்படாத பேச்சை விட்டு விடுவது அவன் மார்க்கத்திற்கு அழகு.
* உங்களிடம் ஒருவன் நோய்விசாரிக்க வரவில்லையாயினும், நீங்கள் அவனிடம் நோய் விசாரிக்க செல்லுங்கள்.
* உங்களுடைய மேலான செயல் தொழுகை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

எஸ்.தாஜுன்நிஸா றஹ்மான்-பிலியந்தலை.

## கவிதைப்போட்டி இல-109

### பரிசுக்குரிய கவிதை

### இளங்கன்று

சிரிப்பிலோ கள்ளமில்லை!
மனசிலோ குள்ளமில்லை!
பொய்க்குதிரை மீதமர்ந்து
குதூகலிக்கும் சிறுமிக்கோ,
இனவாத வெறியினாலும்,
போர் வெறி மிகுதியாலும்,
மனிதவுயிர் பறிபோகும்
பாவச் செயல் புரிவதெங்கே?

சி.வி.பி.மாணிக்கம்-சாகாமம்-தம்பிலுவில்.

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**மரத்துப்போன சமாதானம்**

சந்தோச மகிழ்ச்சியிலே
சமாதானக் குதிரையேறி
சவாரி செய்கின்ற
சின்னஞ்சிறு மலரே-இன்று
எம்தேச சமாதான(மு)ம்
நின் மரக்குதிரை, போலானதம்மா!

பாண்டியூர்-பொன் நவநீதன்.

**கற்பனை**

மரக்குதிரை மீதமர்ந்து
மனவாசல் தனைத்திறந்து
காற்றுவெளி கரைந்து
கனவுலகம் விரைகையில்
அரும்பிவள் நெஞ்சம்
அருவியாய்க் கொஞ்சிட.
அணிந்தாள் புன்னகை
ஆனந்த சிந்தனையில்.

நீர்கொழும்பு-நிலா ஸ்நேகி.

**"பிஞ்சுமனம்"**

பிஞ்சுமனம்
பயமறியுமா...?
பரியின் குணம்
தான் அறியுமா...?

ஏ.கயல்-ஆரையம்பதி-02.

**சொந்தம்**

தேசம் துரத்தியதால்
தேடிக்கொண்ட
சொந்தம்.

ஸலீம்.மு.கடாபி-ஹொறவ்பொதானை.

**குதிரை ஓட்டம்**

சாதனைக்காய் குதிரை(ச்)
சவாரி செய்யும் பாலகியே-கல்வி(ச்)
சோதனையில் மட்டும் நீ
குதிரை ஓட்ட நினைக்காதே!

ச.மகாலிங்கம்-வெளிமடை.



**எப்போதுவரும்?**

சின்னஞ்சிறு உன்முகத்தில்
சிதறும் இந்த புன்னகைபோல்
எப்போது எம்மண்ணில்
தவழ்ந்துவரும் சமாதானம்?

மெ.கோவிந்தராஜா-நமுனுகுல.

**பவனிவரும் பாவை**

விண்மீதும் மண்மீதும்
விடிவில்லா போர்நாளில்
பரிமீது இவள் ஏற ஆசையுண்டோ
பவனிவர பயமில்லா பாதையுண்டோ.

தெ.வோஜனா-கொழும்பு-15.

**அச்சமில்லை**

வேகமுடன் வந்து விழும்
நாசகாரக் குண்டுகளும்
ஷெல் வெடிகள் தோட்டாவின்
தொல்லை தரும் ஓசைகளும்
காதில் வந்து மோதிடினும்
கலக்க மின்றிப் புன்னகையில்
ஆவியில்லாக் குதிரையின் மேல்
ஆடி நிற்கும் பாவையன்றோ"

முஸ்தபா-இர்ஷாத்-ஏறாவூர்-01.

**ஏன்?**

மதியிலார் போரின் வெம்மை
மாசெலாம் துடைப்பதற்கா,
குதிரையில் ஏறி நீயும்,
குவலயம் சுற்றுகின்றாய்?

செல்வி.இரா.குலமணி,கிண்ணியா.

**புதுப் பயணம்**

சிர் புரவி மீதமர்ந்து
சிரிக்கும் புதுமலரே
போர் இல்லா உலகுக்கா
பூக்கு முன் புதுப் பயணம்

சோ. அருளானந்தன், மட்/கல்லடி.

**பங்கருக்குள் பதுங்கம்மா!**

அச்சமடி, அச்சமடி
நாட்டு நிலை அச்சமடி
அடுத்த 'ஷெல்' விழும்வரையில்
ஆடும் வரை ஆடிவிட்டு
அம்மா அப்பா கூட நீயும்
பங்கருக்குள் பதுங்கம்மா!

கனகசிங்கம் நிஜந்திகா-மட்டக்களப்பு.

**சின்னக்குயில்**

பொய்க்குதிரை மேலேறி,
பஞ்சுக்குட்டி நாய்கொண்டு
சந்தோஷச் சவாரி செய்யும்
சின்னக்குயில் இவள்தானோ?

நஸபியா பஹுர்தீன்-புத்தளம்.

**வேண்டாம் வளர்ச்சி**

எனக்கு எல்லாமே புரிகிறது
யுத்தம் பிரிவு,
வேற்றுமை, வேதனை
மரணம்......
எல்லாமே எனக்கு வலிக்கிறது
இறைவா!
சிரிக்கும் குழந்தையாய்
எனையும் மாற்றிவிடு.

சசிகலா சுப்பையா-கிழக்குப்பல்கலைக்கழகம்.

**மகிழ்ந்தே ஆடாதோ?**

சினம் நிறைந்த மனங்களெல்லாம்
கணம் சினத்தை மறக்காதோ?
மனம் நிறைவாய் மகிழ்விங்கு
மண்ணில் எங்கும் தவழாதோ?
மழலை என்போல் மனிதகுலம்
மகிழ்ந்தே துள்ளி ஆடாதோ?

தர்சிக்கா கனகசிங்கம்-மட்டக்களப்பு.

**துயர்**

நம்
போர் தேசத்து
நிலவொன்று
போரை வெறுத்து
போகப்போகிறதோ
சமாதானம் தேடி!

சி.ஸ்ரீரவி-இரத்தினபுரி.

## கவிதைப் போட்டி இல-112



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 05.08.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 112
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

## வாசகர் சாலை

ராஜேஸ்குமாரின் ஒரு நிமிஷ நிசப்தம் பீடிகை போடத்தொடங்கியிருப்பது சஸ்பென்ஸ். வரப்போவதை முன்கூட்டியே தெரிவித்து காத்திருக்க வைக்கத்தானே?

ஜெ.ரவிகரன்-வவுனியா.

□□




'லைலா காலித்' போன்ற உண்மையான சம்பவங்களை முரசு தனது பாணியில் தருவதை மேலும் எதிர்பார்க்கிறோம்.

ஆர்.தெய்வேந்திரன்-திருக்கோணலை.

□□

என்னைக் கவர்ந்த தினமுரசே!

அரசியல் கட்டுரை என்னை மிகவும் கவர்ந்தது. உண்மையை அப்படியே கூறுகின்றது. எந்தப் பக்கமும் சார்பு இல்லை; முன்பே நடக்கப்போவதை நாடிபிடித்துக் கூறுகின்றது. கவிதைப் போட்டிகள், வர்ணம் பூசுதல் போட்டிகள் எல்லாம் படுசுப்பர்தான். ஆசிரியரின் கருத்து என்னை மிகவும் கவர்ந்துள்ளது. புகார் பெட்டி கொஞ்சம் வளர்க்கப்படலாம். அதனால் மக்களின் பிரச்சனைகள் வெளிக்கொண்டுவரலாம்.

பி.எஸ். குகனேஸ்வர சர்மா, வன்னியூர்.

□□

முரசிற்கு வந்தனம்.

செய்திகளை உடனுக்குடன் நடுநிலைமையோடு தருகின்றாய். நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட்-உள்ளே நடப்பதை அப்படியே வெளியே காட்டுகின்றது. இலக்கிய நயம் தரும் ரசிகன் விஞ்சிவிட்டார் தரும் விதத்தில். மற்றும் அனைத்து பகுதிகளும் அருமை. நவரசங்களும் இருக்க ஒரு ரசம் குறைவதேன்? விளையாட்டு பகுதிக்கும் ஒரு இடத்தை தினமுரசில் அளித்தால் என்னவாம்.

என்.எஸ்.அரவிந்த்-கொழும்பு-06.

□□

அன்பின் தினமுரசே!

உன் (16.07.95) முகம்கண்டுதான் எங்கள் மனங்கள் மலர்ந்தன. எக்ஸ்ரே ரிப்போட்டின் மூலம் நெஞ்சினில் பால்வார்த்தாய்!

பிரேமானந்தன், சேகர்-கல்முனை-01.

'லைலா காலித்' தொடர், அட்டகாசமாக தந்த முரசுக்கும் ரசிகனுக்கும் நன்றி. இன்னும் தொடர்ந்திருக்கலாம்.

ஏ.ஹாரீப்-புத்தளம்.

கிரைம் சக்கரவர்த்தியின் தொடரும்-தாய் நாவலும் போதும் முரசுக்கு முத்தம் தர!

கே.உதயா-கண்டி.



20ம் பக்க அழகில் மூழ்கியிருக்கும் இந்த முத்தின் பெயர் பா.அனோஜிதன் மட்டக்களப்பு.



படிப்பகம்

www.padippakam.com

# பலாலியில் படைகள்-ஆயுதங்கள் குவிப்பு!

# கிழக்கிலிருந்து வடக்கே நகரும் படையணிகள்

(நமது விசேட செய்தியாளர்)

**வடக்கில் மற்றொரு பாரிய இராணுவ நடவடிக்கைக்கு படையினர் தயாராகி வருவதாக நம்பத்தகுந்த தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. யாழ்ப்பாணத்தில் புலிகளும் தமது செய்தியில் "படையெடுப்பு அபாயம் நீங்கவில்லை" என்று தெரிவித்துள்ளனர். இதேவேளையில் சமீபத்திய இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்றுள்ளனர்.**

## மீண்டும் நடவடிக்கை

'முன்னேறிப் பாய்ச்சல்' நடவடிக்கையின் தற்போதைய நிலை குறித்து உண்மையான தகவல்களை வெளியிட முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. கைப்பற்றிய பகுதிகளில் இருந்து விரைவாக பின்வாங்க வேண்டி ஏற்பட்டதாலேயே அதனை உடனடியாக தெரிவிப்பதில் தயக்கம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

மேலும் அதிக ஆளணி, ஆயுதபல வசதிகளோடு முன்னேறிப்பாய்ச்சலின் இரண்டாம் கட்டத்தை நடத்த படைத்தரப்பு யோசித்து வருகிறது. அதன்மூலம் முன்னேறிப் பின்னர் பின்வாங்கிய பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விடலாம் என்றும் படைத்தரப்புக் கருதுவதாகக் கூறப்படுகிறது.

வடபுலப் போரில் தாம் ஓரங்குலமும் பின்வாங்கவில்லை என்று அரசு கூறிவருகிறது. அக் கூற்று பத்திரிகைகளால் சந்தேகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

எனவே, மீண்டும் முன்னேறிச் சில பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவது மூலமாக தனது பிரசாரத்தை நம்பகமானதாக்கும் தேவை அரசுக்கு ஏற்பட்டுள்ளதாக இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## புலிகளின் செய்தி

இதேவேளையில் புலிகள் தமது செய்திகளில் படையினர் கைப்பற்றிய சகல பகுதிகளும் மீண்டும் தமது கட்டுப்பாட்டில் வந்துவிட்டதாகவும், படைகள் தமது பழைய நிலைகளுக்கு செல்ல வைக்கப்பட்டதாகவும் கூறிவருகின்றனர்.

ஆனால், முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கை மூலமாக படையினர் கைப்பற்றிய பகுதிகளில் அளவெட்டி படையினரது கட்டுப்பாட்டில் இருக்கிறது. இங்கு புலிகள் தாக்குதல் நடத்தியபோதும் படையினர் தமது நிலையைப் பலப்படுத்தியுள்ளனர்.

எனினும், முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கைக்கு முன்னரும் அளவெட்டியில் ஒரு குறிப்பிட்ட பகுதி படையினர்வசம் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அளவெட்டியில் படையினர் நிலை கொண்டிருப்பதை நேரடியாக தெரிவிக்காமல், படையினர் அபாயகரமான பொருட்களை விட்டுச் சென்றிருப்பதால் அங்கு பொது மக்கள் செல்ல வேண்டாம் என்று 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்து வருகிறது.

இதனால் அளவெட்டிப் பகுதியில் புலிகள் ஒரு தாக்குதலை நடத்தக்கூடும் என்று கருதப்படுகிறது.

## படைகள் வடக்குக்கு

கிழக்கு மாகாணத்தில் படை முகாம்கள் பல மூடப்பட்டு வருகின்றன. புலிகளது கெரில்லாத் தாக்குதல்கள் காரணமாக சிறு முகாம்கள் மூடப்பட்டு வருகின்றன. எனினும் முழுக் காரணம் அதுவல்ல என்று கூறப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் மூடப்படும் முகாம்களில் இருந்த படைகள் வடக்கு நோக்கி அனுப்பப்பட்டு வருவதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது.

வடக்குக்கு அனுப்பப்படுவதற்காகவே கிழக்கில் படை முகாம்களது எண்ணிக்கை தேவைக்கும் அதிகமாக குறைக்கப்பட்டு வருவதாக தெரிகிறது.

## 25 ஆயிரம் வீரர்கள்

குறைந்தது 25 ஆயிரம் படைவீரர்களை யாழ் குடாநாட்டில் இராணுவ நடவடிக்கையில் இறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக முரசுக்கு கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. பல முனைகளில் இருந்து ஒரே நேரத்தில் யாழ் குடாநாட்டுக்குள் முன்னேறிச் செல்லும் வகையில் வியூகம் வகுக்கப்படலாம் என்று நம்பப்படுகிறது.

படையினரின் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கக்கூடும் என்று நம்பப்படுவதால் இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்தப் பகுதிகளுக்குச் சென்று குடியேற அஞ்சுகிறார்கள்.

இதனையடுத்து புலிகளது பிரமுகர் தமிழ் செல்வன் ஒரு அறிக்கை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது: "சிறீலங்கா அரசின் எந்த வொரு படையெடுப்பையும் சந்திக்க விடுதலைப் புலிகள் தாயராக இருக்கிறார்கள். வதந்திகளை நம்பி மக்கள் இடம்பெயர்ந்து அல்லல்பட வேண்டாம். அளவெட்டி தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு மக்கள் செல்லலாம்" என்று அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# போராளிகளைத் தருமாறு புலிகள் கோரிக்கை!

## மாணவர்களுக்கும் இயக்கத்தில் சேர அழைப்பு

'முன்னேறிப் பாய்ச்சல்' இராணுவ நடவடிக்கையை அடுத்து தமது ஆளணிகளைப் பெருக்க வேண்டிய அவசியம் குறித்து புலிகள் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

யாழ் குடாநாட்டில் இருந்து வெளிவரும் மூன்று பத்திரிகைகளும் புலிகள் இயக்கத்தில் ஆட்பலம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஆசிரியத் தலையங்கங்களைத் தீட்டியுள்ளன.

புலிகளது 'ஈழநாதம்' தினசரி தனது ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளது: "இராணுவ நடவடிக்கை மூலமான அனர்த்தங்கள் நிறுத்தப்பட வேண்டுமானால் இராணுவ முகாம்கள் அப்புறப்படுத்தப்படவேண்டும். இது குடாநாட்டிற்கானது மட்டுமல்ல, தமிழர் தாயகம் முழுவதற்கும் பொருந்தும்.

இதனை விடுதலைப் புலிகளின் தலைமை தனது போர் உத்தி மூலமோ, அன்றி ஆற்றல் மூலமோ மட்டும் நிறைவேற்ற முடியாது.

மக்கள் தான் ஆள் பற்றாக்குறையை நிறைவு செய்ய போராளிகளை இயக்கத்திற்கு வழங்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளது.

"ஈழநாடு" பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் கூறியிருப்பதாவது: "குடா நாட்டைக் கைப்பற்ற மீண்டும் போரிடப் போவதாக அரசு கூறியுள்ளது. அரசு அவ்வாறு செய்யாது என்று நாம் எண்ணுவது முட்டாள்தனம்.

முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கையில் 75 க்கு மேற்பட்ட மாணவர்கள் பலியாகியுள்ளனர். இதில் க.பொ.த. உயர்தர மாணவர்கள் 20 பேர், ஆண்டு 1 முதல் 10 வரை உள்ள மாணவர்கள் 6 பேர், மற்றவர்கள் பல்கலைக்கழகம் மற்றும் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள்.

படையினர் தாக்கும் போது மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் என்று வேறுபடுத்திப் பார்க்கமாட்டார்கள். ஆகவே குண்டுபட்டு, ஷெல்பட்டு அநியாயமாக உயிரிழப்பதைக் காட்டிலும் போராட்டத்தில் இணைவது சாலச் சிறந்தது." என்று தெரிவித்துள்ளது.

'வெண்தாமரை இயக்கம்' மூலம் இராணுவத்தினருக்கு ஆட்திரட்டப்படுவதாக புலிகள் அமைப்பினர் கூறிவருகின்றனர். தமது ஆட்திரட்டலின் அவசியத்தை வெளிப்படுத்தவே அதனை உதாரணமாகக் காட்டி வருகின்றனர்.

# லொறிகளில் ஆயுதங்கள்!

## நடந்ததும்-வதந்தியும்

புலிப்பாய்ச்சல் இராணுவ நடவடிக்கையின் போது புலிகளால் இரண்டு லொறிகளில் ஆயுதங்கள் அள்ளிச் செல்லப்பட்டதாக கொழும்புவரை ஒரு வதந்தி பரவியிருந்தது.

14.07.95 அன்று புலிப்பாய்ச்சல் நடவடிக்கையின்போது இராணுவத்தினரிடமிருந்த முட்கம்பிகள், பெரும்தொகையான சாக்குகள் என்பவையும், இராணுவ அரண்கள் அமைப்பதற்கான உபகரணங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றிய பகுதிகளில் இராணுவ அரண்களை உருவாக்கவே படையினர் அவற்றைக் கொண்டு சென்றனர்.

புலிப்பாய்ச்சலால் இராணுவத்தினர் பின்வாங்கும்போது அவற்றை புலிகள் கைப்பற்றிக்கொண்டனர். கைப்பற்றிய அந்தப் பொருட்களை இரண்டு மூன்று லொறிகளில் ஏற்றி புலிகள் கொண்டு சென்றனர். அச் சம்பவம்தான் புலிகள் ஆயுதங்களை எடுத்து லொறிகளில் கொண்டு சென்றனர் என்று வதந்தியாகப் பரவியது.

புலிப்பாய்ச்சல் நடவடிக்கையின் போது இராணுவத்தினரிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பறியதாக புலிகள் தெரிவிக்கவே இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# குழிக்குள் பிணம்-உடமைகள் சேதம்

சங்கானைப் பகுதியில் மலசல குழிக்குள் இருந்து இளைஞர் ஒருவரின் பிணம் மீட்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் திரும்பிச் சென்ற பின்னர் தமது வீடுகளுக்கு மக்கள் திரும்பிச் சென்று வருகின்றனர். வலிகாமம் பகுதியில் மட்டும் 4 வீடுகள் தரைமட்டமாகிய நிலையிலும், 200 விடுகள் பலத்த சேதமடைந்தும் காணப்படுகின்றன.

சில வீடுகளில் கதவு திறந்தவுடன் வெடிக்கக்கூடிய நிலையில் வைக்கப்பட்டிருந்த கைக்குண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கைக்குண்டின் முனையில் (கிளிப்பில்) நூலால் கட்டி வீட்டுக்கதவின் உட்புறத்தில் மாட்டிவிட்டால் கதவு திறக்கும் போது நூல் இழுபட கிளிப் விடுபட்டு கைக்குண்டு வெடித்துவிடும். இவ்வாறு பல வீடுகளில் வெடிக்கும் நிலையில் இருந்த கைக்குண்டுகள் அகற்றப்பட்டன. புலிகளது உதவியோடுதான் இக்கைக்குண்டுகள் அகற்றப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டைப் பகுதியில் இருந்த இந்துக்கோயில்கள் பல சேதமாக்கப்பட்ட நிலையில் இருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல வீடுகள் உடைக்கப்பட்டு தொலைக்காட்சிப்பெட்டிகள், வானொலிப் பெட்டிகள் உட்பட பெறுமதியான உடமைகள் பல காணாமல்போயிருப்பதாக தமது வீடுகளுக்கு திரும்பிச்சென்றுள்ள மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

# காட்டுப் பகுதிகளில் குண்டு வீச்சு!

## வாகனங்கள் கடத்துவதில் புலிகள் தீவிரம்!

## இரு தரப்புக்கும் மத்தியில் பொதுமக்கள் அவதி

(ஏறாவூர் நிருபர்)

கடந்த 21.07.95 காலை மட்டுமாவட்டத்தின் காட்டுப் பகுதிகளில்-1990 ம் ஆண்டுக்குப் பின் முதற் தடவையாக விமானம் மூலம் குண்டுகள் போடப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அதிகப்படியான இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன. இவ்விதம் இராணுவம் வெளியேறிய உன்னிச்சை அடைச்சகல் பகுதியிலேயே இரு குண்டுகள் போடப்பட்டிருக்கின்றன. இதனால் பொது மக்களுக்கு இழப்புக்கள் ஏற்பட்டதாகத் தகவலில்லை.

இது இவ்விதமிருக்க, கிழக்கில் அரச மற்றும் தனியார் வாகனங்களை எடுத்துச் செல்வதில் புலிகள் தீவிரமாக இறங்கியுள்ளார்கள்.

இ.போ.ச.மட்டு டிப்போ பஸ் ஒன்று ஆயித்தியமலையிலும், தனியார் பிக்அப் வாகனம் திமிலைதீவிலும், பிபிலை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிக்அப் வாகனம் பதுளை வீதி தம்பானம் வெளியிலும், கரடியானாறு கமநல சேவைகள் நிலையத்தின் உழவு இயந்திரம் தம்பானம்வெளியிலும், சர்வோதய நிலையத்தின் மோட்டார் சைக்கிள் ஏறாவூரிலும், செங்கலடி றெட்பானா உதவி நிறுவனம் உடைக்கப்பட்டு அங்கிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும், மற்றும் வந்தாறுமூலை ஸ்ரீ மஹாவிஷ்ணு மகா வித்தியாலயத்தின் ரூபா 10 ஆயிரம் பெறுமதியான தட்டச்சு இயந்திரங்கள் என்பன புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இச்சம்பவங்கள் இம் மாதம் 10ம் திகதிக்குப்பின் நடந்தன. புலிகளால் மட்டு இ.போ.ச பஸ்களிலிருந்து டீசல் எடுக்கப்பட்டதாலும் மேற்படி பஸ் கடத்திச் செல்லப்பட்டதாலும் உறுகாமம், உன்னிச்சை, பிபிலை பஸ் சேவைகள் செங்கலடி-பதுளை வீதியில் இடம்பெறவில்லை. தனியார் வாகனங்களும் பாதுகாப்புப் பிரச்சனை காரணமாக பதுளை வீதியில் செல்லவில்லை. இதனால் இப்பகுதிகளிலுள்ள மக்கள் தமது அத்தியாவசியப் பொருட்களை நகர் பகுதிக்கு வந்து வாங்கிச் செல்வதிலும், பயணம் செய்வதிலும் சொல்லோண்ணாச் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள்.

மட்டுநகருக்கு வர 45-60 கிலோ மீற்றர் தூரத்தை அவர்கள் நடந்து வந்தே முடிக்கவேண்டியிருக்கிறது.

பதுளை வீதியிலிருந்து ஆறு இராணுவ முகாம்கள் கடந்த 10ம் திகதிக்குப் பின் அகற்றப்பட்டன.

இராணுவம் வெளியேறியுள்ள பகுதிகளில் பஸ்சேவைகள் நடைபெறாததால் அப்பகுதிகளிலுள்ள மக்கள் பயணம் மேற்கொள்ள அதிக தொல்லைப்படவேண்டியுள்ளது. அப்பகுதிகளில் பஸ்சேவைகளை நடாத்துமாறு பல தொண்டர் அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் தமக்கு வேண்டுகோள்களை விடுத்திருப்பதாக மட்டு.இ.போ.ச. நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.எஸ். சந்திரசேகரம் தெரிவித்தார்.

புலிகளால் எடுத்துச் செல்லப்பட்ட பஸ் சேற்றில் புதைந்திருப்பதாகவும் பஸ் கடத்தப்பட்ட பின் பதுளை-செங்கலடி வீதியில் பஸ் சேவை நடைபெறாததால் மக்கள் புலிகளிடம் விசனத்தை தெரிவித்ததாகவும் இதன் பின்னர் புதைந்து கிடக்கும் பஸ்சை வந்து எடுத்துச்செல்லுமாறு புலிகளால் அறிவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது ஒரு புறமிருக்க, தமது பாவனைக்காக இராணுவத்தினர் பஸ்களை எடுத்துச் சென்றதன் நிமித்தம் மட்டு டிப்போவுக்கு செலுத்தவேண்டிய பாக்கிப் பணம் ரூபா 17 இலட்சம் இருப்பதாகவும் நாளொன்றுக்கு ஒரு பஸ்சுக்கு ரூபாய் இரண்டாயிரம் இராணுவத்தினரால் தரப்படுவதாகவும் தெரிவித்த டிப்போ பணிப்பாளர், அப்பாவிப் பொது மக்களின் நலன்களுக்கு ஊறுவிளைவிக்காது சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

# அரசியல் தீர்வு மேலும் தாமதமாகும்!

## தீர்வோடு சேர்ந்து யுத்தமும் தொடரும்!

அரசியல் தீர்வுத் திட்டம் ஜூலை மாத இறுதிக்குள் முன்வைக்கப்படுவது நிச்சயம் என்று ஆருடங்கள் கூறப்பட்டுவந்தன.

முரசுக்கு கிடைத்துள்ள தகவலின்படி ஜூலை மாத இறுதிக்குள் அரசியல் தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைக்கக்கூடிய நிலையில் இல்லை என்று தெரிகிறது.

எனினும் அரசியல் தீர்வுத் திட்டம் எப்போது முன்வைக்கப்படும் என்பது குறித்து ஜனாதிபதி அறிவிப்பார் என்று தெரியவந்துள்ளது.

அரசியல் தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதற்கு முன்னர் யாழ்குடாநாட்டில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதா, அல்லது அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை அறிவித்த சூட்டோடு சூடாக இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதா என்பது குறித்து அரசு ஆலோசித்து வருவதாகவும் நம்பப்படுகிறது.

# இறுதிப் போரை எதிர்கொள்ள புலிகள் தயார்!

## யாழ்ப்பாணத்தில் புலிகளின் 'இன்சைட் ரிப்போர்ட்' தெரிவிப்பு!

யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகளால் மாதாந்தம் வெளியிடப்படும் ஆங்கிலப் பத்திரிகை 'இன்சைட் ரிப்போர்ட்'. அதன் ஜூலைமாத வெளியீடு 24.07.95 அன்று வெளிவந்துள்ளது.

'முன்னேறிப்பாய்ச்சல்' நடவடிக்கையை அடுத்து புலிகளின் நிலை குறித்து அதில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.யாழ் குடாநாட்டின் பாதுகாப்புக்காக விடுதலைப் புலிகளின் தாக்குதல் படையணிகள் பூரண உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

சிறீ லங்காவின் முப்படைகளும் மேற்கொள்ளக் கூடிய எந்தவொரு தாக்குதலையும் எதிர்கொள்ளக்கூடிய விதத்தில் புலிகளின் தாக்குதல் படையணிகள் உள்ளன. எதிரியின் எந்தவொரு அடக்குமுறைகளையும் எதிர்த்துத் தோற்கடிக்கக்கூடிய விதத்தில் வலுவுள்ள விடுதலைப் படையைத் தாம் கொண்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் உறுதியாக நம்புகின்றது.

புலிப்பாய்சல் நடவடிக்கையின் வெற்றிகள் விடுதலைப் புலிகளது படையணிகளின் போர் ஓர்மத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. விடுதலைப் புலிகளின் ஆண், பெண் போராளிகள் ஆயிரக்கணக்கில் நகர்த்தப்பட்டு, போர் ஆயத்தத்துடன் எந்த இறுதிக்கட்டத்தையும் எதிர் கொள்ளத் தயாராக நிலையெடுத்துள்ளனர். யாழ் குடா நாட்டின் மீதான எந்தவொரு தாக்குதலையென்றாலும் ஆரம்பிக்க படைகள் துணியுமானால் நாங்கள் கடும் பதிலடி கொடுக்கத் தயாராகவுள்ளோம்.

அரச படைகளோடு போர் புரிவதற்குரிய ஆட்பலம், ஆயுதபலம், மனப்பலம், என்பன எம்மிடம் உள்ளன. 'முன்னேறிப் பாய்தல்' இன அழிப்பு நடவடிக்கை மூலம் சிறீலங்கா படைகள் மேற்கொண்ட அட்டூழியங்கள் சிறீலங்கா அரசுக்கெதிராக கோபமும், போர்க்குணமும் கொள்வதற்கு யாழ்ப்பாண மக்கள் சமூகத்தைத் தூண்டியுள்ளன.

உறுதியான முறையில் மக்கள் எங்களுக்குப் பின்னால் நிற்கிறார்கள். பெரும் எண்ணிக்கையில் இளைஞர், யுவதிகள் எம்முடன் இணைந்துகொண்டு வருகின்றனர். அரசாங்கத்தினுடைய இராணுவ அணுகுமுறை மக்கள் மத்தியிலான எமது நிலையை மேலும் பலப்படுத்தியும், உறுதிப்படுத்தியும் உள்ளது. விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதோ, அல்லது யாழ் குடா நாட்டைக் கைப்பற்றுவதோ சிறீலங்கா இராணுவத்திற்கு சாத்தியமில்லாத விடயமாகும். என்று புலிகளது ஆங்கில இதழான 'இன்சைட் ரிப்போர்ட்' தெரிவித்துள்ளது. இது புலிகளது உத்தியோக பூர்வமான மாத வெளியீடு என்பது குறிப்பிடத்தக்கது.

# மலையக மக்களிடம் பணம் கறக்கும் தரகர்கள்! பிறப்பு சான்றிதழ் பெறுவதில் பெரும் சிக்கல்!

பதுளை மாவட்ட தோட்டப்பகுதியில்-அப்புத்தளை, பண்டாரவளை, பல்லாகெட்டுவ, நமுனுகுல, பசறை, மடுல்சீமை, ரோபெரி, ஹாலி எல, அல்தமுல்ல ஆகிய பகுதி தோட்டங்களில் பிறந்தவர்கள் அனைவரும் பதுளை பிரதேச செயலகத்திலே பிறப்புச் சான்றிதழ்களைப் பெறவேண்டியுள்ளது. தோட்ட பகுதி பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு என்று பதுளை பிரதேச செயலகத்தில் தனியாக ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு தமிழ் உத்தியோகத்தரோ தமிழ் தெரிந்த உத்தியோகத்தர்களோ இல்லை.

இப்பகுதி தோட்டங்களில் அண்மையில் அரசசார்பற்ற நிறுவனமொன்றினால் (N.G.O) மேற்கொண்ட ஆய்வில் தோட்டப் பகுதியில் 35 வீதமானவர்கள் பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்களாகவே இருக்கின்றனர் என தெரிய வந்துள்ளது.

இவர்களுடைய பிறப்பு சம்பந்தமான தோட்டங்களிலும் குறிப்புக்கள் இல்லை.

தற்பொழுது தேசிய அடையாள அட்டை எடுப்பதற்கு பிறப்புச் சான்றிதழ் தேவைப்படுவதால் தோட்டப்பகுதி மக்கள் அனைவரும் கச்சேரிக்கு படைஎடுத்தவண்ணம் உள்ளனர். ஆனால் அங்கு பிறப்புச் சான்றிதழ் விண்ணப்ப படிவம் இல்லை. அதனையும் தாங்களே தயார் செய்ய வேண்டியுள்ளதுடன் ஒரு பிறப்புச் சான்றிதழ் எடுப்பதற்கு 300/- ரூபாய் செலவு செய்யவேண்டியுள்ளது. தற்பொழுது பதுளை கச்சேரியில் பிறப்புச்சான்றிதழ் எடுத்துத்தருவதற்கான தரகர்களும் பெரிகிவிட்டனர்.

அத்தரகர்களில் கூடுதலானவர்கள் தொழிற்சங்கவாதிகளாகவே இருக்கின்றனர். இவ்விடயம் சம்பந்தமாக இப்பகுதியில் இருக்கின்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் அலட்சியமாக நடந்து கொள்ளுகின்றனர். இதனால் சாதாரண ஏழைமக்கள் பெரும் கஸ்டப்படுவதுடன் சொல்லொணாத் துயரங்களுக்கும் ஆளாகின்றனர்.


## கவனிக்கப்படாத கடிகாரம்

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று என்னும் கிராமத்தில், மார்க்கட் சந்தியில் உள்ள மணிக்கூட்டு கோபுரம் முன்னாள், ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது இக்கோபுரம் தொடர்ந்து இரண்டு மாதங்கள் மட்டும் சரியான நேரம் காட்டியது.

இப்பொழுது ஒருவருட காலமாக சரியான நேரம் காட்டத் தவறுகின்றனது. நான்குபக்கமும் உள்ள கடிகாரம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நேரத்தைக் காட்டுகின்றது. இதை பலமுறை அறிவித்தும் பிரயோசனம் இல்லை. இதனால் இங்கு வரும் உல்லாசப்பிரயாணிகளுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் பெரும் சங்கடமாக உள்ளது. இதனைத் திருத்துமாறு இது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

க.முகுந்தன்-அக்ரைப்பற்று-07.

## காட்டூன் மூலை




'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கையின்போது கொழும்பிலிருந்து வெளிவரும் 'திவயின' பத்திரிகை வெளியிட்டுள்ள காட்டுண் இது.



## ஜூலை 9

### இரத்த ஞாயிறு

ஜூலை 9ல் 'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையின்போது விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட மக்களில் ஒருபகுதியினர்.

இடிபாடுகளோடு காட்சியளிப்பது நவாலி சென்பீற்றர்ஸ் ஆலய சுற்றுப்புறப் பகுதி வீடுகள்!

(படமும்-தகவலும்)-நமது யாழ் நிருபர்-வர்மா


## வீதிகளுக்கு வந்துள்ள சோதனை

கல்முனைக்குடியில் உள்ள பெரும்பாலான வீதிகள் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறாகவும் வாகன ஓட்டிகளுக்கு வீதி விபத்துக்களை ஏற்படுத்தக் கூடியனவாகவும் உள்ளன.

இவற்றுள் சாஹிறாக் கல்லூரி வீதி, காசிம் வீதி, ஹனீபா வீதி, சாகிபு வீதி, பீச் வீதி, பிச்சிப் பிலாவடி வீதி, செயிலான் வீதி போன்றவை படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வீதிகளாகக் காட்சியளிக்கின்றன.

இப்பகுதியில் இரவு நேரங்களில் அடிக்கடி அணையும் மின்சாரத்தால், பாதைகளில் உள்ள படுகுழிகள் தெரியாமல் பாதசாரிகள் அவற்றுள் விழுவதையும் வாகனங்கள் வந்த வேகத்தில் முட்டி மோதி விபத்துக்களை ஏற்படுத்துவதையும் நாம் காணக் கூடியதாகவுள்ளது.

எம்.சி.கலீல்-




BRIGHT இன் 1995

ஆண்டு 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பயிற்சி

வெற்றிப்படிகளை எட்டிப்பிடிக்கும் BRIGHT மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குகிறது என்பது, மாணவர்கள் பெறும் சித்தியின் மூலம் (பரீட்சைப் பெறுபேறுகளினால்) நிரூபிக்கப் படுகிறது.

1994 ஆம் ஆண்டு BRIGHT ன் முன்னோடிப் பயிற்சியில் கலந்து கொண்ட300 மாணவர்களுள் 92 பேர் புலமைப் பரிசிலுக்கு தெரிவாகியுள்ளனர்.



எமது மாணவர்களுள் பதுளை தமிழ் மகளீர் வித்தியாலயத்தைச் சேர்ந்த *செல்வி. வித்யா கணேசன்* என்னும் மாணவி (BSE/188/94) மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று ஜப்பான் நாடு சென்று வரத் தெரிவாகியுள்ளார் என்பதை BRIGHTபெருமையுடன் அறியத் தருகின்றது. இவருக்கும் பரீட்சையில் சித்தியெய்திய ஏனையோருக்கும் BRIGHT வெகுமதியும் நற்சான்றிதழும் வழங்கி கௌரவித்துள்ளது. இத்தோடு இரு மாணவர்கள் றோயல் கல்லூரி அனுமதியும் பெற்றுள்ளனர்.

1995 புலமைப் பரிசில் முன்னோடிப் பயிற்சி, தபால் மூலம் நடைபெறுகின்றது.

மிகச் சிறந்த பாடசாலையைத் தெரிவு செய்யவும், புலமைப் பரிசில் பெறவும் உகந்த வழி - BRIGHT ன் முன்னோடிப் பயிற்சியே.

இதில் இணைய விரும்புவோர் பயிற்சிக்கட்டணம் 250/= ரூபா காசுக் கட்டளையை The Director-BTC எனும் பெயருக்கு Sea Srteet SPO இல் பெறக்கூடியதாக பெயர்,முகவரி கொண்ட விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பி இணைந்து கொள்ளவும்.

இவற்றோடு BRIGHT இன் வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| ★ பொது விவேகம் பாடநூல் | 75.00 | ★ பொது விவேகம் செயல் நூல் | 60.00 |
| ★ மாதிரி வினாவிடை ஆண்டு 5 | 100.00 | ★ மாதிரி வினாவிடை ஆண்டு 4 | 100.00 |

வெற்றிக்கனி

BRIGHT ன் கல்வி வெளியீடு

பிரதி மாதந்தோறும் வெளிவரும் வெற்றிக்கனி மாணவர்களின் வெற்றியை நிச்சயப்படுத்தும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR, P. O. BOX 162,
COLOMBO CENTRAL SUPPER MARKET COMPLEX
COLOMBO-11 (T.P: 434770)





அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,434831 344832.
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,3336.
FAX 0094523093 EXT 28


## இருப்பதையும் கெடுப்பதோ?

தம்பலகமத்தில் 1990 ஜூலை கலவரத்தையடுத்து அகதிகளாவிருந்த அனைத்துக்குடும்பங்களும் இப்போது அவரவர் இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டுவிட்டார்கள். அதில் சென்ற 15.04.95 அன்று இறுதியாகக் குடியேற்றப்பட்ட கல்விமேடு, சிப்பித்திடல் ஆகிய இரண்டு இடங்களிலும் கோவில் புனரமைப்பு, பாதை திருத்தவேலை, கிராம முன்னேற்றச் சங்கங்கள் அமைத்தல், கூட்டுறவுச் சங்கக்கடைகள் புனரமைப்பு முதலான பொதுப்பணிகள் தம்பலகமம் பிரதேச செயலாளர் அலுவலக பணிப்பின் பேரில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் குறிப்பிடத்தக்க ஒரு குறைபாடு என்னவென்றால் முன்னர் கல்பதித்து தார் ஊற்றி தார் றோட்டாக இருந்த கள்ளிமேடு-சிப்பித்திடல் இரண்டுக்குமான பாதைகளும் இடைப்பட்ட கால பராமரிப்பு இல்லாமலிருந்த காரணத்தால் மிகவும் மோசமான நிலையில் இருந்தன.

அந்த றோட்டுகளுக்கு மீண்டும் கல்போட்டு தார் ஊற்றி புனரமைப்பு செய்வதை விடுத்து இப்போது அவைகளுக்கு கிறவல் போட்டு தார் றோட்டை கிறவல் றோட்டாக மாற்றிவிட்டார்கள்.

கிராம அபிவிருத்திப்பணிகள் எனப்படும்போது இப் பணி கிராம முன்னேற்றத்திற்கா? அல்லது கிராமப் பின்தள்ளலுக்கா? என இப்பகுதி மக்கள் சந்தேகம் கொள்கிறார்கள்.

எம்.நடேசன்-தம்பலகமம்.


சுவிஸ்/ டென்மார்க்/ இத்தாலி/ ஜேர்மன்/ ஃபிரான்ஸ்/ அவுஸ்திரேலியா/நோர்வே நாடுகளுக்கான

தினமுரசு வாரமலர் சந்தா விபரம்

ஒரு வருடத்திற்கு—தபாற் செலவு உட்பட ரூபா 2250/= (52 வாரங்கள்)

ஆறு மாதங்களுக்கு—தபாற் செலவு உட்பட ரூபா 1130/= (26 வாரங்கள்)

மூன்று மாதங்களுக்கு—தபாற் செலவு உட்பட ரூபா 590/=

| மத்திய கிழக்கு நாடுகள் | அமெரிக்கா/கனடா |
|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா 1865/= (52 வாரங்கள்) US $ 38 | ஒரு வருடத்திற்கு ரூபா 2790/= (52 வாரங்கள்) US $ 57 |
| ஆறு மாதங்களுக்கு ரூபா 975/= (26 வாரங்கள்) US $ 20 | ஆறு மாதங்களுக்கு ரூபா 1420/= (26 வாரங்கள்) US $ 29 |
| மூன்று மாதங்களுக்கு ரூபா 485/= (13 வாரங்கள்) US $ 11 | மூன்று மாதங்களுக்கு ரூபா 730/= (13 வாரங்கள்) US $ 16 |

பெயர் சுயமுகவரி ஆகிய விபரங்களை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி

THINAMURASU VAARAMALAR
P.O. BOX. 1772
COLOMBO.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பப் படிவங்கள் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.



நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.





www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

'முன்னேறிப் பாய்ச்சல்' முதல் கட்டத்தை நிறைவேற்றி விட்டதாக அரசு அறிவித்துள்ளது.

தமது 'புலிப்பாய்ச்சல்' நடவடிக்கை படைத்தரப்பை 'பின்னோக்கி பாய்ச்சல்' நிலைக்கு செல்ல வைத்தது என்று புலிகள் கூறியிருக்கிறார்கள்.

'அளவெட்டி' தவிர தாம் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து தமது முன்னைய நிலைகளுக்கு படைத்தரப்பு திரும்பிவிட்டது.

இதனை வெளியே தெரிவிக்க முடியாமல் அரசும், படைத்தரப்பும் தடுமாறிக் கொண்டிருக்கின்றன.

இராணுவ நடவடிக்கையில் மட்டுமல்ல, பிரசாரப் போரிலும் சுற்றிவளைத்து தமது விளக்கங்களை சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறது அரசு.

இதற்கு காரணம், ஒன்றை ஒன்பதாகச் சொல்லும் பிரசார முறைகள் தான்.

'முன்னேறிப் பாய்ச்சல்' ஆரம்பித்த சூட்டோடு சூடாகவே நிச்சயமான வெற்றி தான் என்று அமோகமான பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

இதன் ஒரு கட்டமாக, அராலித் துறையை கைப்பற்றிக் கொள்வது. யாழ் நகரைக் கைப்பற்றி தமது பலத்தை நிரூபித்து விட்டு திரும்புவது என்றெல்லாம் பிரசாரம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

இத்தனைக்கும் கொழும்பில் பத்திரிகையாளர் மகாநாடு நடத்திக் கொண்டிருந்தவர்களுக்கு வடபுலப்போர் முறை நிலவரம் முழுதும் தெரிந்திருக்கவில்லை.

பொன்னாலைப் பாலத்தை படைகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த போது பண்ணைப் பாலத்தை பிடித்து விட்டதாக பத்திரிகையாளர் மகா நாட்டில் சொல்லப்பட்டது.

பண்ணைப் பாலம் யாழ் நகரில் இருக்கிறது. யாழ் நகருக்கும், தீவுப் பகுதிகளுக்குமான தரைப் போக்குவரத்துக்கான பாலம் அது. தற்போது அது உடைக்கப்பட்ட நிலையில் இருக்கிறது.

பத்திரிகையாளர் ஒருவர்தான் பண்ணைப்பாலம் எங்கேயிருக்கிறது என்று விளக்க வேண்டியிருந்தது.

ஆக, பூரண விளக்கம் இல்லாமலேயே போர்க்கள நிலவரங்கள் வெளியே சொல்லப்பட்டன.

புலிகளது பதிலடி ஒன்று ஏற்படக் கூடும் என்று எதிர்பார்த்து அவ்வாறான பதிலடியின்போது யுத்த முறை நிலவரங்கள் மாறக்கூடும் என்ற கணிப்புக்கூட இல்லாமல் போயிருந்தது.

வடபுலப் போரில் என்ன நடக்கிறது என்பது அமைச்சரவை மட்டத்தில் கூட சரியாகத் தெரியவில்லை.

கொழும்பில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் அஷ்ரப் தனது சந்தேகத்தைக் கேட்டிருக்கிறார். படைகளை உள்ளே செல்ல அனுமதித்துவிட்டு புலிகள் தாக்கலாம் அல்லவா? என்று அவர் கேட்டிருக்கிறார். அப்படியெல்லாம் செய்வது சுலபமான காரியமல்ல என்பது போல பதில் சொல்லப்பட்டதாக ஒரு தகவல்.

எந்தவொரு யுத்தத்திலும் எதிரியின் பலம்-பலவீனம், தந்திரங்கள் என்பவற்றை கணிப்பிடுவது முக்கியமான அம்சம்.

வடபுலப் போரில் படைத்தரப்பின் பலம், பலவீனம் குறித்து புலிகள் மதிப்பிடுமளவுக்கு, புலிகளது பலம், பலவீனம் குறித்து படைத்தரப்பு மதிப்பிடவில்லை.

ஆட்பலத்தில் தமது பலம் அதிகம் என்னும் ஒரே ஒரு கணிப்பை மட்டுமே வைத்து போர்த்திட்டம் வகுக்கப்பட்டது.

ஆட்பலத்தில் குறைவாக இருந்தாலும் கெரில்லா தாக்குதலில் புலிகளது திறன் உயர்ந்த நிலையில் இருப்பதை மதிப்பிட்டிருந்தால் தமது வெற்றி குறித்தோ, நோக்கம் குறித்தோ அதிகளவில் அலட்டிக் கொள்ளும் நிலை படைத் தரப்புக்கு ஏற்பட்டிருக்காது.

தூங்கும் எதிரியைவிட தூங்குவது போல பாசாங்கு செய்யும் எதிரி ஆபத்தானவன். கெரில்லாக்கள் தூங்குவது கிடையாது. தூங்குவது போல பாசாங்கு செய்வார்கள்.

இதனை படைத்தரப்பு உணரவில்லை என்பதுதான், ஒரு பொய்யில் ஆரம்பித்து ஒன்பது பொய்களை தமது பிரசாரத்தில் சொல்ல வேண்டிய நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

புலிகள் தமது எதிரி குறித்து தெளிவாக இருக்கிறார்கள். மூன்று நாட்களுக்கு பல்லைக் கடித்துக்கொண்டு படைகள் விழித்திருந்தால் நான்காவது நாள் தூங்கியாக வேண்டும்.

தூங்கமாட்டோம், தூங்கவில்லை என்று பாசாங்கு செய்து கொண்டே எதிரி எப்போது தூங்கத் தொடங்குவான் என்பது புலிகளுக்கு தெரியும். அப்போதுதான் புலிகளது தாக்குதல் ஆரம்பமாகும்.

உண்மையில் ஆட்பலத்தில் கூடிய படைக்கு நேரடிச் சமர்கள் சாதகமாக இருக்கும். ஆனால் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நீண்டகால செயற்பாடு சுலபமான விசயமல்ல.

பரந்த நிலப்பரப்பில் நிலைகொண்டுள்ள படைமீது தாக்குதல் நடத்துவது கெரில்லாக்களுக்கு வசதி. ஏதாவது ஒரு முனையை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்தால் கூட பெரியதொரு இழப்பை உருவாக்கிவிட்டு கெரில்லாக்கள் திரும்பி வந்துவிட முடியும்.

இதனால் படைத்தரப்பின் மனோபலத்திலும் உடைவுகளை ஏற்படுத்தி அவர்களது எதிர்க்கும் ஆற்றலை முனைமங்கச் செய்துவிடலாம்.

உதாரணமாக, கிழக்கு மாகாணத்தில் படை முகாம்களுக்குள் தூங்காமல் வெளியே தூங்கவேண்டிய நிலை படைகளுக்கு ஏற்பட்டுள்ளது.

வெற்றிகரமாக நடந்த சில கெரில்லாத் தாக்குதல்களின் காரணமாக அங்கு படைத்தரப்பின் மனோபலம் குன்றிவருகிறது.

இதனால், புலிகள் தாக்குதலை ஆரம்பித்தவுடன் முகாம்களைவிட்டு படைகள் விலகிச் சென்றுவிடுகிறார்கள். இதனால் 'புலிகள் தாக்கினார்கள், இழப்புக்கள் இல்லை' என்று படைத்தரப்பு செய்தி வெளியிட முடிகிறது.

இதனை சிலர் வேறுவிதமாக விளங்கிக் கொள்ளுகிறார்கள். அரச படைகளுக்கு திறமை காணாது; அல்லது தளபதிகள் சரியாக இல்லை; அதுவுமில்லாவிட்டால் ஆயுத தளபாடங்கள் போதாது என்று வியாக்கியானங்கள் செய்யப்படுகின்றன.

இதனால் தோல்விகளின் பொறுப்பை படை உயரதிகாரிகள் சிலரது தலையில் போட்டுவிடும் சுலபமான விமர்சனங்களும் செய்யப்படுகின்றன.

ஆனால், உண்மையில் இலங்கை அரச படைகளை முற்றாக வாபஸ் வாங்கிவிட்டு வல்லரசு நாட்டு படையொன்றை வடக்கு-கிழக்குக்கு அனுப்பிவைத்தாலும் கூட இதே விளைவுகள்தான் ஏற்படும்.

24 மணிநேரமும் தாக்குதலுக்காக என்று தருணம் பார்த்துத் திரியும் கெரில்லா அணிகள் உயர்ந்த திறனோடு வளர்ந்துள்ளன. இந்த நிலையில் பகிரங்கமாக தெரியக்கூடிய நிலைகளில் இருக்கும் படைகள் தாக்குதலுக்கு உள்ளாவது தவிர்க்க முடியாது.

இந்தியப் படை வடக்கு கிழக்கில் சந்தித்த அனுபவமே போதும் நிலவரத்தை மதிப்பிட.

வியட்நாமில் அமெரிக்கப் படைகள் பெற்றிருந்த ஆட்பலமும், ஆயுத பலமும் வியட்நாம் போராளிகளோடு ஒப்பிடும் போது மலையளவு உயரம். ஆனால் முடிவு வியட்நாம் போராளிகளின் வெற்றியில் முடிந்தது.

எதிரி அழிக்கப்படுவது, எதிரியின் எதிர்க்கும் ஆற்றல் அழிக்கப்படுவது என்பது மூலமே யுத்தத்தில் நிரந்தர வெற்றியை நிறுவிக்கொள்ள முடியும்.

வடக்கு-கிழக்குப் போர் முறையில் படைத்தரப்பு தனது எதிரியை அழித்தொழிப்பது என்பது சுலபமான காரியமல்ல.

ஏனெனில், புலிகள் மக்களுக்குள் இருந்து போராடுகிறார்கள். அவர்களது முகாம்கள், பதுங்குமிடங்கள் அடையாளம் கண்டு தாக்கக்கூடிய நிலையில் இல்லை.

மக்களோடு பரிச்சயமாகாத படையால் மக்களது ஆதரவைப் பெறுவது முடியாத காரியம். மக்களது ஆதரவைப் பெற வேண்டுமானால் குடியிருப்புக்கள் மத்தியில் யுத்தம் நடத்த முடியாது. குடியிருப்புக்கள் மத்தியில் கெரில்லாக்கள் இருப்பதால் அங்கு போரிட்டே தீரவேண்டிய நிலை படைகளுக்கு ஏற்படும்.

அவ்வாறு போரிடும் போது பொது மக்களது இழப்புக்கள் ஏற்பட்டே தீரும். எனவே, பாதிக்கப்பட்ட மக்கள் புலிகளை நோக்கியே செல்வார்கள்.

அரச படைகள் பிறிதொரு இனத்தைச் சேர்ந்தவர்களை கொண்டதாக மட்டுமே இருப்பதால் படைத்தரப்பு விடும் ஒவ்வொரு தவறும் 'அந்நியப்படை' என்ற உணர்வை ஏற்படுத்துவதும் தவிர்க்க முடியாதது.

ஜே.வி.பி. கால கட்டத்தில் படைகள் கடுமையாக நடந்து கொண்டபோதும் சொந்தப் படைவிடும் தவறுகளாகவே சிங்கள மக்களால் கருதப்பட்டது. முக்கியமாக ஆட்சியில் இருந்த கட்சியின் உத்தரவுகள் தான் காரணம் என்று கருதப்பட்டதே தவிர படையினரை அந்நியர்களாக, எதிரிகளாகப் பார்க்கும் நிலை தோன்றவில்லை.

ஆனால், ஜே.வி.பி.யை ஒழிக்க இந்தியப் படைபயன்படுத்தப்பட்டிருந்தால் இந்தியப் படை தொடர்பான கண்ணோட்டம் வேறு விதமாக அமைந்திருக்கும்.

இவையெல்லாம் மனித உணர்வுகள் சம்பந்தப்பட்டவை. இவற்றை இனவாதம் என்று மட்டும் விளக்கம் சொல்ல முடியாது.

எனவே, வடக்கு-கிழக்குப் போரில் அரச படைகள் நடத்தும் போருக்கு அரசு என்ன தான் விளக்கங்கள் சொன்னாலும் போர் முனை நிலவரங்கள் அவற்றையெல்லாம் தவிடு பொடியாக்கிவிடுகின்றன.

தமிழ் மக்களை புலிகளிடம் இருந்து மீட்கவே முன்னேறிப் பாய்ச்சல் என்று அரசு அறிவித்தது.

நவாலியில் தேவாலயம் மீது விழுந்த ஆறு குண்டுகளோடு அரசு சொன்னது அனைத்துமே விழலுக்கு இறைத்த நீராகப் போனது.

படைகள் தமது மூர்க்கத்தனமான அதிரடி மூலம் புலிகளை அச்சுறுத்த நினைப்பது உண்மையில் மக்களையே அச்சுறுத்துவதாகவே முடிந்திருக்கின்றது.

இதன்மூலமாக அரசும், படைகளும் தாம் எங்கு போரிடவேண்டியிருக்கிறதோ அங்குள்ள மக்களது நம்பிக்கையை இழந்திருக்கிறார்கள்.

பொது ஜன முன்னணி அரசாங்கத்திற்கு எதிராக புலிகளால் கூட செய்ய முடியாத பிரசாரத்தை 'முன்னேறிப் பாய்ச்சல்' நடத்தி முடித்திருப்பதுதான் கண்ட பலன்.

இனி அடுத்தது என்ன?

"எதற்கு யுத்தத்தை தொடர வேண்டும்? போரை நிறுத்திவிட்டு பேச்சை ஆரம்பிக்கலாமே" என்று ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது.

இது அந்த வாதத்தை முன்வைப்பவர்களின் மனநிலையே தவிர, உண்மையான கள நிலவரம் அதற்கு இடம் கொடுக்காது.

'முன்னேறிப் பாய்ச்சல்' வெற்றி என்று அரசு தொடர்ந்து கூறிவருகிறது. தாம் பின் வாங்கிய செய்தியைச் சொல்லக்கூட அரசு தயங்கிக் கொண்டிருந்தது.

நீண்டகாலத்திற்கு உண்மையை மறைக்க முடியாது என்று அரசுக்குத் தெரியும். ஒன்றில் உண்மையைச் சொல்ல வேண்டும். அல்லது தாம் சொல்வதை உண்மையாக்க வேண்டும்.

மற்றுமொரு இராணுவ நடவடிக்கை மூலமாக யாழ்நகரை எப்படியாவது கைப்பற்றி தமது பலத்தை நிரூபித்தேயாக வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.

தற்போதைய நிலையில் இரு தரப்புமே சம பலத்தில் இருப்பது போலவே இராணுவ நிலைகள் இருக்கின்றன.

இரு தரப்பில் எந்தவொரு தரப்பும் சமரசப்பேச்சுக் குறித்து நினைத்துக் கூடப் பார்க்கும் நிலை இன்றில்லை. அதற்கு நேரமும் இல்லை.

அரசு யுத்தத்தை நிறுத்திவிட்டு பேச்சை ஆரம்பிக்கலாம் என்று கூறுபவர்கள் புலிகள் பற்றி மூச்சே விடுவதில்லை. ஆனால் தற்போது யுத்தத்தை நிறுத்த புலிகளே தயாராக இல்லை என்பதுதான் போர்முனை நிலவரம்.

அரசின் இராணுவ நடவடிக்கை மூலம் தமக்கு கிடைத்துள்ள வாய்ப்புக்களை யெல்லாம் அறுவடைசெய்து கொள்வதில் புலிகள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

புலிகளால் முடியாதென்று மக்களிடம் நிரூபித்து அவர்களது அரசியல் பலத்தை உடைப்பதுதான் முன்னேறிப் பாய்ச்சலின் நோக்கம் என்று இராணுவ பேச்சாளர் சரத் முனசிங்கா கூறியிருந்தார்.

புலிகளால் முடிகிறதோ முடியவில்லையோ தம்மைப் பாதுகாக்க புலிகளைத் தவிர வேறு யாருமில்லை என்பதை சொல்லாமல் சொல்வதாகவே படைத்தரப்பு நடவடிக்கைகள் அமைந்துவிட்டன. இது புலிகளுக்கு சாதகம்.

வெளியுலகிலும் புலிகள் தம்மை நியாயப்படுத்த நிறைய சாட்சியங்களை பெற்றுக் கொள்ளவும் முடிந்திருக்கிறது.

தமது யுத்தத்தை மேலும் விரிவுபடுத்தவும், தீவிரமாக்கவும் புலிகள் எதிர்பார்த்த சாதக மான அம்சங்கள்தான் மேற்கண்ட இரண்டு அம்சங்களும்.

இனிமேல், தமது அணிகளை விரிவு படுத்துவதில் புலிகள் ஈடுபடுவார்கள்.


படைத்தரப்பு புதிதாக ஆயுதங்களை வாங்க ஆட்களை அனுப்பிவிட்டு காத்திருக்கிறது.

ஆட்பலம், அதற்கேற்ப ஆயுதபலம். இரண்டையும் வைத்து புலிகளை ஒரு கை பார்த்துவிட வேண்டியதுதான். அப்படியானால்தான் தெற்கில் புஜத்தை உயர்த்திக் காட்டலாம்; எதிர்க்கட்சியையும் தோளில் தட்டி 'இப்போது தெரிகிறதா? எம்மைப் பற்றி?' என்று கேட்க முடியும். ஜனாதிபதி ஆட்சிமுறை பற்றிய எதிர்க்கட்சியின் கண்டனங்களை அமுக்கும் விதமாக வெற்றிச் சங்கொலியை ஓங்கி ஒலிக்கச் செய்ய முடியும்.

இதெல்லாம் அரசின் கனவுகள்தான். கனவுகைப்பட வேண்டுமானால் யாழ்நகர் கைப்பற்றப்பட்டால் மட்டும் போதும் என்று அரசு நினைப்பது தான் முதல் தவறு.

யாழ்நகர் கைப்பற்றப்படுவதாக வைத்துக்கொண்டாலும்கூட, அந்த வெற்றியைப் பற்றி அரசு வாய்திறக்கமுன்னர் புலிகளது பதிலடி அரசின் வாயை மூடச் செய்யும் நிலை தோன்றக்கூடும். ஆனாலும் இவற்றையெல்லாம் நினைத்து அரசு தனது முயற்சியில் தளர்ந்துபோகும் என்று சொல்வதற்கில்லை.

யுத்தமும் ஒரு சூதாட்டம் மாதிரித் தான். வெற்றி பெற்றுவிடலாம் என்ற எதிர் பார்ப்புத்தான் தொடர்ந்து போரிட வைக்கும். போரைத் தவிர அரசுக்கு வேறு மார்க்கமும் இல்லை.




## பேச்சா போரா?

போரை நிறுத்துவதானால் புலிகள் கேட்பதைக் கொடுக்க- குறைந்தபட்சம் சமஷ்டிக்கு என்றாலும் அரசு தயாராக இருக்க வேண்டும். அது சாத்தியமில்லை.

புலிகளைப் பற்றி அரசு தற்போது செய்துவரும் பிரசாரங்கள் இனி அரசே விரும்பினாலும் புலிகளுடன் கைகுலுக்கி புன்னகைக்க சமீபகாலத்தில் சாத்தியமில்லாமல் செய்துவிட்டன.

இதற்கிடையே சர்வதேச நிர்ப்பந்தங்கள் இருக்கவே செய்கின்றன. போர் வேண்டாம் என்பதே பொதுவான சர்வதேச அபிப்பிராயம்.

ஆகவே-இரு தரப்பும் சர்வதேச சமூகத்தை நோக்கி தனித்தனியே ஒருமுறையீடு செய்ய வேண்டியிருக் கிறது. "அவர்கள்தான் போர் செய்ய நிர்ப்பந்திக்கிறார்கள்!" என்பதுதான் இருதரப்புமே தங்களுக்குள் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டும் முறையீட்டின் பொதுக்கருத்து.

இதனை நிரூபிக்க இருதரப்பும் சில காரியங்களை செய்யவேண்டியுள்ளது.

அரச தரப்பை பொறுத்தவரை இனப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வுத் திட்டத்தை ஏதாவது ஒரு வடிவில் முன்வைக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

ஆக, அரசியல் தீர்வுத் திட்டம் என்பது புலிகளை வெற்றிகொள்ளும் போருக்கு சர்வதேச அபிப்பிராயத்தை திரட்டும் உத்தியாகவும் அமையப்போகிறது.

அரசு முன்வைக்கும் அரசியல் தீர்வுத் திட்டம் ஏனைய தமிழ் கட்சிகளை திருப்திப்படுத்தாவிட்டால் அதுவே புலிகளுக்கு பெரிய பிடியாகிவிடும்.

இருதரப்பும் தமது பலத்தை போரில் மேலோங்கச் செய்வதற்கு இருக்கக்கூடிய வாய்ப்புக்களைத் தேடுவதே தற்போதைய நிலவரம்.

இந்நிலையில் சமரசப் பேச்சு வெகு தூரத்திற்கப்பால் சென்றுவிட்டது.

இருதரப்பும் சமபலநிலையில் உள்ள போது சமரசம் என்பதை விட இருதரப்பில் ஒரு தரப்பு மேலோங்குவதற்கான சமர் மட்டுமே சாத்தியம்.

---

## அதிரடி அய்யாத்துரை



முன்னோக்கிப் பாயும் போது பாராட்டிய ஆங்கில-சிங்கள பத்திரிகைகள் ரெண்டு எழுத்தார் பாய்ந்தவுடன் படைத்தரப்பை கன்னாபின்னாவென்று கிழித்தெறிந்து விமர்சித்து தள்ளியிருக்கிறார்கள். ஒரு விசயத்தை மட்டும் தெளிவாக கவனிக்க முடியுது பாருங்கோ! சனம் பிணமானாலும் பரவாயில்லை எண்டு கடந்து போய் யாழ்ப்பாணத்தை கப்பென்று அமுக்கினா அந்தப் பத்திரிகைகள் விழுந்து விழுந்து பாராட்டத் தயார். சனத்துக்கு நடந்த பாதிப்பு பற்றி அலட்டிக் கொள்ளாமல் இருந்தது மூலம் அது தெரிந்து போச்சு.

பொம்பிளைகள் மாதிரி வந்து தூண்டில் போடுற ஆட்கடத்தல் கோஷ்டி தலை நகரில் நடமாடுதாம். அதுக்காக பொம்பிளையளோ இல்லையோ எண்டு உற்றுப்பார்த்து இசகு பிசகா வாங்கிக் கட்டிக்கொள்ளக் கூடாது. அளவுக்கதிகமா ஜொள்ளுவிடாமல் மனதைப் பத்திரமாக வைச்சுக்கொண்டால் ஆற்றிலை மிதக்காமல் இருக்கலாம். ஆயுளையும் விருத்தி செய்யலாம்.

கொழும்பிலை கடத்தப்பட்ட மாணவரை விடுற நேரத்திலை கடத்தினவை கேட்டவையாம், "நீ என்ன பெரிய ஆளோ? கனபேர் சிபாரிசு செய்திருக்கினம்" எண்டு. சிபாரிசு செய்த விஷயமெல்லாம் கடத்தினவைக்கு தெரிஞ்சிருக்கு. இதன் மூலம் அறியப்படும் விஷயம் என்னவென்றால் கடத்தினவை சாதாரண ஆட்களில்லை. பலபக்கத் தொடர்புகள் உள்ள ஆட்கள். விவகாரம் பெரிசாகும் என்று தெரிஞ்சவுடனே ஆளை அவிழ்த்துவிட்டுப் போட்டினம். ஆட்களைப் பிடிச்சு வைச்சுப் போட்டு பிடிக்கப்பட்டவரை யார் தேடுகினம்? தேடுகிறவையின் தகுதி தராதரம் எல்லாம் அறிஞ்சு போட்டுத்தான் ஆற்றிலே போடுறதோ? அவிழ்த்துவிடுறதோ? என்று முடிவெடுக்கினம். ஆக, திட்டமிட்ட நடவடிக்கை.

கடலில் நடந்த சண்டையிலை 17 பேர் பலியென்றுதான் முதலில் ரெண்டு எழுத்தார் அறிவிச்சவை. ஆனால் ஒருவர் கடலில் தவறி விழுந்து நீந்திப் போயிருக்கிறார். நீரடி நீச்சல் தாக்குவதற்கு மட்டுமில்லை; தப்பிக் கொள்ளவும் கைகொடுத்திருக்கு. வீரவணக்கம் செலுத்தி முடிச்சபிறகு அவர் உயிரோடு வந்ததைக் கண்ட ரெண்டு எழுத்தாருக்கு அதிர்ச்சி ஒருபக்கம்: சந்தோசம் மறு பக்கமாம்.

கூட்டான கட்சி நீலமானவர்தான் தீர்வுத்திட்டம் தயாரிக்கும் விஷயத்திலை சில ஐடியாக்கள் கொடுத்தவராம். ஐடியா கொடுக்கிறது, பிறகு இந்தப் பூனையும் பால் குடிக்குமோ? என்று நினைக்க வைக்கிற மாதிரி தமிழ் பேப்பர்களிலை அதிரடியான அறிக்கைகள் விடுறது. இந்த சாணக்கியம் எல்லாம் தம்பிமாருக்கு விளங்காது என்று அண்ணாச்சிமார் நினைக்கிறது தான் முசுப்பாத்தி.

பேருந்துகளில் சோதனை நடத்தும்போது பெரும்பான்மை இனத்தவர்களை கீழே இறக்கிவிட்டு ஏனையோரை உள்ளே இருக்கவைத்து சோதனை நடக்குது. கௌரவம் கொடுக்கப்படுகுதாக்கும் எண்டு பக்கத்திலை இருந்தவரிடம் நான் அபிப்பிராயம் சொல்ல, அவர் எரிக்கிற மாதிரிப் பார்த்துப் போட்டு, "பாய்ஞ்சு ஓடாமல் தடுக்கத்தான் இந்த ஏற்பாடு" என்று போட்டார் ஒரு போடு.

தென்னிலங்கையில் நடந்த கலவரத்திலை சிறுபடையினர் பாரபட்சமாக நடந்துகொண்டது பளிச்சென்று தெரிஞ்சு போச்சாம். ஆஸ்பத்திரியிலை காலில் சூடுபட்ட ஒருவரை அனுமதிச்சவையாம். காயப்பட்டவரின் காதில் விழுகிற மாதிரியே 'காலைக் கழட்ட வேணும்' எண்டு சொல்லப்பட்டதாம். அதிர்ச்சியிலே காயப்பட்டவருக்கு இதயம் நின்று போச்சு. முஸ்லிம் மக்கள் அந்தப்பகுதியில் வெறுத்தும் போயிருக்கினம்.

வடக்கு-கிழக்கு சபை நடத்திய விழாவிலை முஸ்லிம் சமூகம் புறக்கணிக்கப்பட்ட விடயத்தை விழாவில் கலந்து கொண்ட பெரியவர்கள்கூட கண்டுகொள்ளவில்லை. அதுதான் வருத்தமான விஷயம்.

தலைநகரில் எப்போதாவது எட்டிப்பார்த்துவிட்டு எக்கச்சக்கமாக புழுங்கவைக்கிறது வான் நிலை. இந்த நேரத்தில் ஆசையாக எதிர்பார்க்கும் மழை பற்றி ஒரு கவிதை:

"இயற்கை அன்னை
மின்னலாய் நெளிந்தாள்.
இடியாய்த் துடித்தாள்!
சற்று நேரத்தில்
மழைக் குழந்தை ஜனனம்.!"

(குமரி அமுதன்)


படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர்

# அத்துலத் முதலியின் அறிவிப்பு! -பதிலடியாக புலிகள் எழுதிய கடிதம்!

37

அற்புதன்

### பிரபாவின் செய்தி

இலங்கை அரசு தேசியப் பாதுகாப்பு நிதியை ஆரம்பித்ததுடன் புலிகள் 'தமிழீழ தேசிய பாதுகாப்பு' நிதியை ஆரம்பித்தது பற்றி சென்ற வாரம் கூறியிருந்தேன்.

அதனை முன்னிட்டு வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு பிரபா விடுத்த செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

"தமிழீழ அரசியல் வரலாற்றில் என்றுமில்லாத ஒரு சோதனையான நெருக்கடியான காலகட்டத்தை நாம் எதிர்நோக்கிய வண்ணம் இருக்கின்றோம்.

கொடுங்கோன்மையான இராணுவ ஆட்சி எம்மீது திணிக்கப்பட்டிருக்கிறது. ஆயுத பலாத்காரத்தை கட்டவிழ்த்து விட்டு மக்களின் அரசியல் அபிலாஷைகளை கொன்றுவிட அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கிறது.

அடக்குமுறை எந்தளவிற்கு தீவிரமாகிறதோ அவ்வளவிற்கு மக்களிடம் புரட்சி புணர்வு பிறக்கிறது: விடுதலை வேட்கை எழுகிறது: விழிப்புணர்வு தோன்றுகிறது.

எமது ஆயுதப்போராட்டத்தை எதிர்கொள்ள முடியாத அரசு தனது ஆவேசத்தை அப்பாவி மக்கள்மீது கட்டவிழ்த்து விடுகிறது.

பொதுமக்களை போராளிகளுக்கு எதிராக திருப்பிவிடலாமென்பதே அரசின் நோக்கம். இதனை நாம் நன்கறிவோம். அதே வேளை இந்தச் சிக்கலைத் தவிர்த்துக் கொள்ள நாம் ஆயுதப் புரட்சிப் போரை ஒத்திப் போடுவதும் அசட்டுத்தனமாகும்.

இராணுவ அடக்குமுறையால் தமிழினத்தை ஒதுக்கிவிட முடியாது என்பதை உணர்த்த, இராணுவத்தை சதா பயங்கொள்ளச் செய்து பதற்ற நிலையில் வைத்திருக்க வேண்டும்.

எமது போராட்டத்தில் நாம் தனித்து நிற்கவில்லை. தமிழக மக்களின் ஒன்றுதிரண்ட மாபெரும் சக்தி எமக்கு பக்கபலமாக இருக்கிறது.

அகில இந்திய மக்களின் அனுதாபமும் எமது பக்கமே இருக்கும். எனினும் எமது விடுதலையைப் பெற்றுக்கொள்ள நாமே போராடியாக வேண்டும்."

தனது செய்தியில் உயிரழிவுகள் குறித்து பிரபா கூறியது இது:

"அழிவுகள் ஏற்படாத போராட்டங்களே இல்லை. அழிவிலிருந்தே ஆக்கம் பிறக்கிறது. நாம் சுதந்திரமாக-நிம்மதியாக வாழ வேண்டுமானால், தனியரசை அமைத்து வாழ வேண்டுமானால் தியாகங்களுக்கு தயாராக இருக்க வேண்டும்."

என்பதுதான் பிரபாவின் செய்தி. தற்போதைய நிலவரத்தோடு பிரபாவின் மனப்போக்கைப் புரிந்து கொள்ளவும் மேற்கண்ட செய்தி உதவுமல்லவா?

### சந்திரகாசன் அழைப்பு

தந்தை செல்வநாயகத்தின் மைந்தன் எஸ். சந்திரகாசன் ரெலோ அமைப்போடு தொடர்பாக இருந்தது பற்றி முன்னர் கூறியிருந்தேன்.

84 இறுதியில் என்று நினைக்கிறேன். திரு.சந்திரகாசன் மூன்று தமிழ் அமைப்புக்களுக்கு அவசர அழைப்பொன்றை விடுத்திருந்தார்.

இந்திய அரசு தெரிவித்த முக்கியமான செய்தியொன்றை தெரிவிக்க வேண்டியிருக்கிறது. எனவே உடனடியாகத் தன்னை சந்திக்குமாறு அவர் செய்தியனுப்பினார்.

ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈரோஸ் ஆகிய மூன்று அமைப்புக்களும் கூட்டமைப்பாக செயற்பட்டுக் கொண்டிருந்த நேரம் அது.

அந்த மூன்று அமைப்புக்களுக்குமே அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

சந்திரகாசன் என்ன சொல்லப்போகிறார் என்று அறிந்துவர மூன்று அமைப்புக்களது பிரதிநிதிகளும் சென்னையில் உள்ள சந்திரகாசனின் அலுவலகத்திற்குச் சென்றனர்.

ரெலோ சார்பாக சிறீ சபாரத்தினம், மதி: ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாக பத்மநாபா, ரமேஷ், ஈரோஸ் சார்பாக பாலகுமார், முகிலன் ஆகியோர் அச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

"இந்திய அரசு ஒரு திட்டத்தை தயாரித்திருக்கிறது." என்றார் சந்திரகாசன்.

"என்ன திட்டம்?"

"இலங்கை படையினரைத் தோற்கடித்து தமிழீழத்தை உருவாக்குவதற்கு தேவையான ஆயுத உதவிகள் மூன்று தமிழ் அமைப்புக்களுக்கும் வழங்கப்படும்.

தமிழீழம் உருவாகிய பின்னர் அதனை இந்திய அரசு அங்கீகரிக்கும். அத்தோடு தமிழீழம் உருவாகிய பின்னர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான பொருளாதார உதவிகளை இந்தியா வழங்கும்."

என்று சொன்ன சந்திரகாசன் மூன்று அமைப்புக்களது பிரதிநிதிகளிடம் கேட்டது இது:

"எவ்வளவு ஆயுதங்கள் தேவை என்ற விபரத்தை என்னிடம் தெரிவியுங்கள். நான் அதை அங்கு தெரிவிக்கிறேன்."

தமிழ் அமைப்புக்களது பிரதிநிதிகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ரெலோ தலைவர் சிறீ சபாரத்தினம் ஒரு கேள்வி எழுப்பினார்.

"நாமும் இந்திய அரசோடும் அதன் உளவு நிறுவனங்களோடும் தொடர்புகளை வைத்துக்கொண்டு தான் இருக்கிறோம். அப்படியிருக்கும் போது உங்கள் மூலமாக இந்திய அரசு நம்மோடு எதற்காக தொடர்பு கொள்ள வேண்டும்?"

"அதுதானே!" என்று சிறீயின் கருத்தை ஆமோதித்தனர் ஏனைய பிரதிநிதிகள்.

இறுதியாக சிறீ தெரிவித்தது இது:

"இந்திய அரசுக்கு ஏதாவது யோசனை இருந்தால் எம்மோடு நேரடியாக பேசுமாறு கூறுங்கள். இடையில் யாரும் தேவையில்லை."

அத்தோடு அந்தச் சந்திப்பு முடிவுற்றது.

### இன்றுவரை புதிர்

சந்திரகாசனுக்கு அந்த யோசனையை யார் தெரிவித்தார்கள்? ஏன் தெரிவித்தார்? அல்லது தமிழ் அமைப்புக்களிடம் தனது செல்வாக்கை நிலைப்படுத்த அவராகவே அவிழ்த்துவிட்ட திட்டமா என்பது இன்றுவரை புதிர்தான்.

ஆனால், சந்திரகாசனுக்கு 'றோ' எனப்படும் இந்திய ஆய்வு-பகுப்பாய்வுப் பிரிவோடு நல்ல தொடர்பு இருந்தது.

இலங்கை விவகாரத்தை 'றோ' உளவு நிறுவனம் மூலமாகவே இந்திய அரசு கையாண்டது. றோவில் முக்கிய அதிகாரியாக இருந்தவர் உன்னிகிருஷ்ணன்.

உன்னிகிருஷ்ணனுக்கும் சந்திரகாசனுக்கும் நல்ல நெருக்கம்.





மலையகத்தில் இரத்தினபுரியில் தமிழர்களுக்குச் சொந்தமான இரு கடைகளும், ஹட்டனில் இரு கடைகளும் எரிக்கப்பட்டன. பதுளையிலும் தமிழர்கள் தாக்கப்பட்டனர். 7.12.84 அன்று இச் சம்பவங்கள் நடந்தன.

### சுவரொட்டிகள்

இதேவேளை கறுப்பு- நீல வர்ணங்களில் கிழக்கு மாகாணத்தில் திருக்கோணமலையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

அச் சுவரொட்டிகளில் காணப்பட்ட வாசகம் இது:

"தமிழீழம் கோருபவர்கள் ராஜதுரோகிகள். துரோகிகள் யாவரும் திருமலையில் இருந்து துரத்தப்பட வேண்டும்.

சிங்களவர்கள் யாழ்நகரில் வேலை பார்க்க முடியாது என்றால் தமிழர்கள் எவ்வாறு திருக்கோணமலையில் வேலைபார்க்க முடியும்?

இச் சுவரொட்டிகள் திருமலைத் தமிழ் மக்களிடம் அச்சத்தை ஏற்படுத்தின.

அச்சத்தை நியாயப்படுத்தும் விதமாக திருமலை மாவட்டத்தில் ஒரு சம்பவமும் நடந்தது.

திரியாயிலுள்ள விளையாட்டு மைதானம் ஒன்றுக்கு வருமாறு கிராம மக்கள் இராணுவத்தினரால் அழைக்கப்பட்டனர்.

அப்போது ஊரடங்கு உத்தரவும் அமுலில் இருந்தது. விளையாட்டு மைதானத்திற்குச் சென்ற தமிழ்க் குடும்பங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. கிட்டத்தட்ட நூறுபேர் படுகாயங்களோடு மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரிய குளத்திலும் இது போல் ஒரு கோரச் சம்பவம்- வீடுகளில் இருந்து வெளியே அழைக்கப்பட்ட தமிழர்களில் 20 பேர்வரை இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

84 நவம்பர் மாதத்தில் திருக்கோணமலையில் 'தென்னைமரவாடி' என்னும் கிராமம் தாக்குதலுக்கு உள்ளாகியது. அக் கிராமத்தைச் சேர்ந்த தமிழ்க் குடும்பங்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகச் சென்றனர்.

### நடந்ததும்—செய்தியும்

வடக்கில் நடைபெற்ற கைதுகள் குறித்து ஜே.ஆர். அரசு வெளியிட்ட பொய்கள் கலப்படமில்லாதவை.

யாழ்ப்பாணம் கைதடியில் தனியார் கல்வி நிறுவனங்களில் இருந்து மாணவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

திடீரென்று அங்கு வந்த இராணுவத்தினர் மாணவர்களில் 200 பேரைக் கைது செய்து சென்றனர்.

இதனையடுத்து அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு பின்வருமாறு பொய் சொன்னது:

"யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதிகளின் மூன்று முகாம்களில் இருந்து துப்பாக்கிகள், துண்டுப்பிரசுரங்கள் என்பவை கைப்பற்றப் பட்டன. அங்கிருந்த பயங்கரவாதிகளும் கைது செய்யப்பட்டனர்."

இதேவேளை தேசியப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலி, ஒரு அறிவிப்புச் செய்திருந்தார்.

"பயங்கரவாதத்தை கைவிட்டு சரணடைய வேண்டும்" என்று தமிழ் போராளிகளை அவர் கோரியிருந்தார்.

### புலிகளின் கடிதம்

இதனையடுத்து புலிகளால் லலித் அத்துலத் முதலிக்கு பகிரங்க கடிதம் ஒன்று எழுதப்பட்டது.

அக் கடிதத்தில் சில முக்கிய பகுதிகள் இவை;

"திரு.அத்துலத் முதலி அவர்களே! அப்பாவி மக்களுக்கு எதிராக இனவாத யுத்தம் நடத்துகிறீர்கள். கிட்லரையும் வெல்லக் கூடிய முறையில் இனக் கொலைக் கலையில் நீங்கள் மிக வல்லவராயிருக்கிறீர்கள்.

ஓரின மக்களின் வரலாற்றில் பக்கத்துக்கு பக்கம் இரத்தமும், கண்ணீரும் காணப்படுவதற்கான பழியையும், பாவத்தையும் சுமக்கப் போகிறீர்கள்.

நீங்கள் 'பயங்கரவாதம்' என்று குறிப்பிடுவது ஒடுக்கப்படும் மக்களின் புரட்சிகர எதிர்ப்பேயன்றி வேறல்ல.

அரச பயங்கரவாதம் பெற்றெடுத்த குழந்தையே தமிழீழத்தில் தோன்றியுள்ள ஆயுதப் போராட்டமாகும். இதை உருவாக்கியவர்கள் நீங்களே.

இராணுவரீதியாக இதை நீங்கள் முறியடித்துவிட முடியாது. எம்மை 'பயங்கரவாதிகள்' என்பதால் தமிழர் பிரச்சனை தீர்ப்போவதில்லை.

உங்கள் இராணுவத் தீர்வு உங்களுக்கே அழிவை ஏற்படுத்தும்.

எங்களை நீங்கள் கண்டுகொள்ளவோ, அடையாளம் காணவோ முடியாது. ஏனெனில் நாம் எவ்விடத்திலும் இருக்கிறோம். மக்கள் கூடவுடன் சங்கமித்து இருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் மக்களே நாம்தான்.

எவ்வளவு சக்தி வாய்ந்த அரசாக இருந்தாலும் மக்களுக்கு எதிரான போரில் அது வெற்றிவாகை சூடியதில்லை.

எத்தனை இன்னல்கள், இடர்பாடுகள் எதிர்ப்படினும் அவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து எமது தமிழீழ நாட்டை அமைத்தே தீருவோம்.

இறுதியில் உலக மக்களின் மனச்சாட்சியில் நீங்கள் ஒரு குற்றவாளி ஆக்கப்படுவீர்கள்."


# இராணுவ அணிக்குள் சிக்கிய புலிகளின் தளபதிகள்!

அந்த உன்னிகிருஷ்ணன் பின்னர் சிறையில் அடைக்கப்பட்டார்.

அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனத்தின் (சி.ஐ.ஏ) கையாளாக 'றோ'வில் இருந்து செயற்பட்டவர் என்று கண்டுபிடிக்கப்பட்டு சிறையில் தள்ளப்பட்டார் உன்னிகிருஷ்ணன்.

உன்னிகிருஷ்ணன் மூலமாக தமிழ் போராளிகள், போராளி அமைப்புக்கள் பற்றிய விபரங்கள் சி.ஐ.ஏ. உளவு நிறுவனத்திற்கு சென்றிருக்கலாம்.

சி.ஐ.ஏ. மூலமாக அந்தத் தகவல்கள் யாவும் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டிருக்கலாம் என்று அப்போது நம்பப்பட்டது.



இராணுவ வாகன அணிக்குள் கிட்டு, ரஞ்சன்லாலா



வாகன அணிக்குள் இருந்து தப்பும் முயற்சி

### தூதர் வந்தார்.

அமெரிக்க அரசு ஜே.ஆர் அரசுக்கு சகல வழிகளிலும் உதவிக்கரம் நீட்டியே வந்தது.

10.12.1984 அன்று அமெரிக்காவின் விசேஷ தூதுவர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்தார். அவரது பெயர் ஜெனரல் வோல்டர்ஸ். அப்போது அமெரிக்க அதிபராக இருந்தவர் றீகன். அவரது தூதுவராகவே ஜெனரல் வோல்டர்ஸ் வந்திருந்தார்.

இவர் வந்த தினத்தன்றுதான் வடபகுதியில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த 42 மணி நேர ஊரடங்கு முடிவடைந்தது.

42 மணி நேர ஊரடங்கு அமுலில் இருந்த போது வீடு வீடாக இராணுவ சோதனை இடம்பெற்றது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் மட்டும் 800 பேர்வரை விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணம் காரைநகர், காங்கேசன் துறை, பருத்தித்துறை, போன்ற பகுதிகளில் 10 பேர்வரை பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதேவேளையில் கொழும்பிலும் மலையகத்திலும் தமிழர் விரோத உணர்வுகள் தலைதூக்க ஆரம்பித்தன.

### வழிமறிப்பு

84இல் இலங்கை இராணுவத்தினர் தமிழ் அமைப்புக்களின் உறுப்பினர்களை தேடி தீவிர வேட்டை நடத்திக் கொண்டிருந்தனர்.

அப்போது நடைபெற்ற ஒரு சம்பவம் இது:

மோட்டார் சைக்கிள் ஒன்றில் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் மூன்று பேர் சென்றுகொண்டிருந்தனர்.

அதில் இரண்டு பேர் முக்கியமானவர்கள், ஒருவர் கிட்டு. அவர்தான் மோட்டார்சைக்கிளை செலுத்திக்கொண்டிருந்தார். பின்னால் இருந்து சென்றவரில் ஒருவர் ரஞ்சன்லாலா.

இருவருமே யாழ் மாவட்டத்தில் புலிகளது பிரதான தளபதிகள்.

யாழ்-பருத்தித்துறை வீதி வழியாக அச்சுவேலி நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர்.

அச்சுவேலி பஸ் நிலையத்தை சென்றடைய முன்பாக வசாவிளான் வீதிச் சந்தி இருக்கிறது. அங்கு இராணுவத்தினர் நின்றனர்-சோதனை நடவடிக்கையில்.

மோட்டார் சைக்கிள் இராணுவத்தினரால் மறிக்கப்பட்டது. கேள்விகள்-தப்பிக்கொள்ளும் பதில்கள். கிட்டுவின் சட்டைப் பையில் சயனைட் குப்பி இருந்தது.

சயனைட் குப்பி இராணுவத்தினரின் கண்ணில் பட்டுவிட்டது.

அப்போது சயனைட் குப்பி பிரபலமாகாத காலம். எனவே, "இது என்ன?" என்று கேட்டனர் இராணுவத்தினர்.

"தொய்வு நோய்க்குப் பயன்படுத்தும் மருந்து!"

என்று பதில் சொன்னார் கிட்டு. இராணுவத்தினருக்கு ஏதோ ஒரு சந்தேகம்.

மூவரில் ஒருவரை தமது 'ட்றக்' வண்டியில் ஏறுமாறு கூறினார்கள். மற்றைய இருவரையும் மோட்டார் சைக்கிளில் தமது வாகன அணிகளின் மத்தியில் வருமாறு கூறிவிட்டு புறப்பட்டனர்.

### வீதியில் விபரீதம்

இராணுவ வாகன அணிக்கு மத்தியில் மோட்டார்சைக்கிளில் கிட்டுவும், ரஞ்சன் லாலாவும்.

அச்சுவேலி-வசாவிளான் பாதையில் வாகன அணி சென்றுகொண்டிருக்கிறது.

அந்தப் பாதையில் 'மக்கோண' என்று அழைக்கப்படும் சிறுவர் சீர்திருத்தப் பள்ளி இருக்கிறது. அதன் அருகே ஒரு ஒழுங்கையும் இருக்கிறது.

வாகன அணி மத்தியில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை திடீரென்று அந்த ஒழுங்கைக்கு திருப்புகிறார் கிட்டு.

இராணுவ வாகனங்கள் சட்டென்று நிறுத்தப்பட்டன.

மோட்டார் சைக்கிள் 50 யார் தூரம்வரை சென்று விடுகிறது.

அப்போதுதான் அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

'ஒப்பரேஷன் முன்னேற்றப் பாய்ச்ச'லின் வேகம், எல்.ரி.ரி.ஈயினரின் 'புலிப்பாய்ச்சல்' என்ற தாக்குதல் நடவடிக்கையின் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கக் காணப்படுகின்றது.

ஜூலை மாத முழுநிலவில் கடந்த 13ந் திகதி எல்.ரி.ரி.ஈயினர் அளவெட்டி, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களுக் கூடாக ஊடுருவி ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சலில் முன்னேறி வந்த துருப்புகள் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இத்தாக்குதல், முன்னேற்றப்பாய்ச்சல் துருப்புக்களை சிதறடித்துள்ளதுடன்,

ஆரம்பித்துவிட்டால் 'கண்கடை' தெரியாது உயிரிழப்புக்கள் பெருகி விடுகின்றன. இதில் எதுவுமறியாத அப்பாவிகளே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

விமானக் குண்டுவீச்சுக்கள், ஆட்டிலறித்தாக்குதல்கள் என்பனவே இன்றைய யுத்தத்தில் மிகவும் அபாயகரமானவையாக இருக்கின்றன.

உலகில் இன்று யுத்தங்கள் இடம்பெறும் பிரதேசங்களை எடுத்து நோக்குகையில், இந்த இரண்டு விதமான தாக்குதல்களுமே பெருமளவிலான சேதங்களை உண்டுபண்ணியுள்ளன.

ஏனெனில் இத்தாக்குதல்கள்மூலம் கச்சிதமாக இலக்குத்தவறாமல்

இன்று பொஸ்னியாவில் இடம்பெறும் தாக்குதல் நடவடிக்கை குறித்த படமொன்றை இலங்கையில் யாழ்குடாநாட்டில் இடம்பெறும் தாக்குதல் நடவடிக்கையென விபரித்து பி.பி.ஸி. தொலைக்காட்சி செய்தி வெளியிட்டிருந்தது.

இதனையடுத்தே பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர்அத்தொலைக்காட்சிப் படம் குறித்து தமது கண்டனத்தை வெளியிட்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் மலைகளோ அடர்ந்த காடுகளோ இல்லை. ஆனால் பி.பி.ஸி.யில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மலைகள், காடுகள் இருப்பதுபோல

**அலசுவது–இராஜதந்திரி**

நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் நிறுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

எல்.ரி.ரி.ஈயினருக்குகெதிராகவே யுத்தம் புரிவதாக ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். எல்.ரி.ரி.ஈ நிலைகளையே தாக்கிவருவதாக அறிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் அப்பாவிப் பொது மக்களே தாக்குதல்களுக்கு முகங் கொடுக்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சல் இராணுவ நடவடிக்கையின் போது சிறுவர்கள், மாணவர்கள், பெண்கள், முதியோர் எனப்பலதரப்பட்டவர்களும் உயிரிழந்துள்ளனர்.

# 'முன்னேற்றப்பாய்ச்சலை' எதிர் கொண்ட 'புலிப்பாய்ச்சல்'

## பொது மக்களையும்-புலிகளையும் வேறுபடுத்த முடியாத விமானக் குண்டுவீச்சு!

## அந்தகார வேளையில் அரசியல் தீர்வுபற்றி பேசுவதில் அர்த்தமில்லை!



தொடர்ந்தும் முன்னேற முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்ட பகுதிகளிலேயே படையினர் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எல்.ரி.ரி.ஈயினர் ஒப்பரேஷன் புலிப் பாய்ச்சல் துருப்புகள்மீது நடத்திய பதில் தாக்குதலில் ஒரு புக்காரா குண்டு வீச்சு விமானமும் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதுடன், கடற்படையினரின் ஆணையிடும் கப்பலொன்றும் காங்கேசன்துறையில் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சல் ஆரம்பிக்கப்பட்டதும் படையினரின் முன்னேற்றம் வேகமானதாக இருந்தது.

என்றுமில்லாதவாறு பெருமளவு யுத்தத் தளபாடங்கள், ஆளணிகளுடன் படையினர் முழுக் குடாநாட்டையுமே தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துவிடுவது என்ற நோக்கத்துடன் முன்னேறியிருந்தனர். ஆனால் யாழ் குடாவை முற்றிலுமாகக் கைப்பற்றுவது அவ்வளவு இலகுவான காரியமல்ல என்பதனை எல்.ரி.ரி.ஈயினரின் 'புலிப் பாய்ச்சல்' என்ற பதில் தாக்குதல் நடவடிக்கை புலப்படுத்துகின்றது.

முப்படைத்தளபதிகள் உட்பட, பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கேர்ணல் அனுருத்த ரத்வத்தவும் முன்னின்று முன்னேற்றப்பாய்ச்சலை மேற்பார்வையிட்டிருந்தனர்.

எல்.ரி.ரி.ஈயினரின் பிடியிலிருந்து யாழ்குடா நாட்டு மக்களைப் பாதுகாப்பதே 'முன்னேற்றப்பாய்ச்சல்' நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும் என்று கொழும்பில் ஆட்சியாளர்கள் கூறியிருந்தனர்.

ஆனால் ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சலின் ஆரம்பமே, அப்பாவிப் பொதுமக்களைப் பலியெடுப்பதாக இருந்தது.

வானத்தைநோக்கி சிலுவையுடன் காணப்பட்ட யாழ் குடாநாட்டின் நவாலி சென் பீட்டர் தேவாலயம் மீது கூட விமானக் குண்டுகள் வீழ்ந்தன. இதனால் எதுவுமறியாத அப்பாவி மக்கள் அத்தலத்திலேயே துடி துடித்து மாண்டனர்.

இந்நிலையில் யாழ் குடாநாட்டு மக்களை யுத்தத்தை முன்னெடுத்துப் பாதுகாக்க முடியாதென்பதனையே 'ஒப்பரேஷன் முன்னேற்றப் பாய்ச்சல்' நடவடிக்கை மட்டுமல்ல, அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளும் புலப்படுத்துகின்றன.

ஆதிகாலத்தில் யானை, தேர், குதிரை என்பவற்றுடன் யுத்தங்கள் இடம்பெற்ற போது போர்க்களம் சென்று போர்வீரர்கள் போரிட்டனர். அப்போது போரிட்டவர்களே மடிந்தார்கள். அப்பாவி மக்கள் காப்பாற்றப்பட்டார்கள்.

ஆனால் இன்றைய உலகில் போர்க்களமென்றோ, அல்லது யுத்ததர்மம் என்றோ எதுவுமில்லை. எனவே யுத்தம் என்று

தாக்குவதென்பது பெரும்பாலும் சாத்திய மற்றதாகவே இருக்கின்றது.

ஆட்டிலறிப்பீரங்கியில் குண்டைப் போட்டு ஏவிவிட்டால் அது போய் வீழ்ந்து வெடிக்கும் இடத்தில் ஏற்படுகின்ற சேதம் மோசமானதாகவே இருக்கின்றது.

யாழ்குடா நாட்டில் இன்று, நேற்று மட்டுமல்ல கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து இராணுவ நடவடிக்கைகளின் போதும், விமானக்குண்டு வீச்சுக்கள், ஆட்டிலறி, மோட்டார் ஷெல் தாக்குதல்கள் என்பனவே பெருமளவு உயிர்ப்பலியை எடுத்துள்ளன.

இந்தியப்படையினர் யாழ் குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கு மேற்கொண்ட தாக்குதலின்போது கூட ஆட்டிலறி ஷெல் பிரயோகத்தையே தமக்கு உறுதுணையாகக் கொண்டிருந்தனர்.

இந்தியப் படையினரின் ஆட்டிலறி ஷெல் பிரயோகம் பலமடைந்ததும் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்து



பாதுகாப்பான இடத்தை நாடி ஓடிச்சென்ற சிறுவன் ஒருவன் மண்டையில் ஷெல் அடிபட்டு துடி துடித்து இறந்திருந்தான்.

அத்துடன் வயோதிபர் ஒருவர் தமது வீட்டின் சமையலறைக்குச் சென்று சோற்றுப்பானையைத் துளாவிச் சாப்பிடுவதற்குத் தயாரானபோது சமையலறை ஜன்னல் வழியாக 'விர்ரென்று' சீறிவந்த ஷெல் வெடி அவரது உயிரைக் கவ்விச்சென்றது.

எனவே இத்தடவை யாழ்குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சல் நடவடிக்கையின்போது கூட வண்டிலொன்றில் பாதுகாப்பான இடத்தை நாடிச்சென்ற குடும்பமொன்று கூட, ஷெல் வெடியினால் முற்றாக அழிந்துள்ளது. வண்டியில் கட்டப்பட்டிருந்த காளைமாடுகளும் பலியாகியுள்ளன.

கடந்தவாரங்களில் பி.பி.ஸி. செய்திச் சேவையின் தொலைக்காட்சிப்படமொன்று சர்ச்சைக்குரியதாக விளங்கியிருந்தது. இலங்கை அரசு அத்தொலைக்காட்சிப்படம் குறித்து தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தது.

காட்டப்பட்டதாக இலங்கைத்தூதுவர் தமது கண்டனத்தில் குறிப்பிட்டிருந்தார்.

பி.பி.ஸி.யும் இக்கண்டனத்தையடுத்து தனது தொலைக்காட்சி தொழில் நுட்பப்பிரிவில் ஏற்பட்ட தவறு காரணமாகவே பொஸ்னியா, யாழ்குடாநாடு எனக்காட்டப்பட்டதாகக் கூறியிருந்தது.

மலையும், மலைப்பாங்கான பிரதேசங்களுடன் பொஸ்னியாவை, யாழ்ப்பாணக்குடாநாடு என்று காட்டியது தவறுதான். ஆனால் அங்கே இடம்பெறும் மோதல்கள் எவ்வகையிலும் யாழ் குடாநாட்டு நிலவரத்துக்கு சளைத்தவையல்ல.

சீறிச் செல்லும் ஷெல் வெடிகள், இடிபாடுகளுடன் கூடிய கட்டிடங்கள், அழுது புலம்பித் திரியும் அகதிகள், கொல்லப்பட்ட சடலங்கள், காயமடைந்தவர்கள் என்று காணப்பட்ட பொஸ்னிய நிலவரம் போன்றே யாழ்குடாநாட்டிலும் அபாயகரமான சூழ்நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் யாழ்குடாநாட்டில் பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டுமானால் இராணுவ

ஆனால் யாழ்குடாநாட்டில் எல்.ரி.ரி.ஈயினரையும், அப்பாவிப் பொதுமக்களையும் ஆட்டிலறித்துப்பாக்கிகளைப் பிரயோகிப்பதன் மூலமும், விமானக்குண்டுவீச்சுக்களை நடத்துவதன் மூலமும் வேறுபடுத்த முடியாது.

கடந்த 10 வருடகால யுத்த அனுபவம் எல்.ரி.ரி.ஈ யினரை ஒரு சிறந்த கெரில்லா இயக்கமாக மாற்றிவிட்டுள்ளது.

பதுங்க வேண்டிய இடத்தில் பதுங்கி, தாக்கவேண்டிய இடத்தில் தாக்கும் தந்திரங்களை அவர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள்.

இதனை ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சல் துருப்புக்கள்மீது தாம் தொடுத்த புலிப்பாய்ச்சல் நடவடிக்கை மூலமாகவும் புலிகள் நிரூபித்துள்ளார்கள்.

எனவே எத்தகையதொரு தாக்குதலுக்கும் தாக்குப்பிடித்து பின்னர் தம்மைச் சுதாகரித்து பதில் தாக்குதல்களை மேற்கொள்ளும் பக்குவத்தை எல்.ரி.ரி.ஈயினர் நன்கு கொண்டுள்ளனர்.

மேலும் நூற்றுக்கணக்கானவர்கள் உடல் உறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாகியுள்ளனர்.

எனவே ஆட்சியளர்கள் தாம் குறிப்பிட்டது போல யாழ்குடாநாட்டு மக்களை பாதுகாக்க வேண்டுமானால், முதல்படி நடவடிக்கையாக இராணுவத்தாக்குதல்களையே நிறுத்த வேண்டும்.

கடந்த 09ம் திகதி முதல் இடம் பெற்ற மோதல்களினால் ஏற்பட்ட இழப்புக்கள், அவலங்களுக்கு நிவாரணமளிக்கும் நடவடிக்கைகளையே முன்னெடுக்க வேண்டும்.

அகதிகளாக உள்ள மக்களுக்கு உரிய நிவாரண வசதிகளை விரைந்து வழங்க வேண்டும். இதன் மூலமே இதுவரை பாதிக்கப்பட்ட மக்களை ஆசுவாசப்படுத்துவதுடன், யுத்த பீதியையும் அவர்களின் மனங்களிலிருந்து நீக்க முடியும்.

இதைவிடுத்து யாழ்குடாநாட்டு மக்கள் கதிகலங்கிப்போயுள்ள இத்தருணத்தில், இராணுவ நடவடிக்கைகளையும் முற்றுமுழுதாக நிறுத்தாமல், அரசியல் தீர்வுத் திட்டம் பற்றிப் பிரஸ்தாபிப்பதால் எதுவித பிரயோசனமும் ஏற்பட்டு விடப்போவதில்லை.

அகதிகளாகவும், அநாதரவான நிலையிலும் இருந்து கொண்டு ஆட்சியாளர்களின் அரசியல் தீர்வை வடக்கு–கிழக்கு மக்கள் வரவேற்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

இத்தகைய இக்கட்டான நிலையில் அரசுமுன்வைக்கும் எத்தகையதொரு தீர்வுத்திட்டமும் அதன் சொந்த நலன்களை முதன்மைப்படுத்தியதாகவே இருக்குமே தவிர எவ்வகையிலும் வடக்கு–கிழக்குப் பிரஜைகளின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்கமாட்டாது.



படிப்பகம்

www.padippakam.com

## தருவது-ரசிகன்



**க**லீல் அல்-வாஸீர் தனது வாழ்க்கையில் மிக உயர்ந்த சோகத்தை சந்தித்தது அன்றுதான்.

அந்த சோகத்தைச் சந்தித்தபோது கலீல் அல்-வாஸீருக்கு 13 வயது.

சோகம்-இஸ்ரேல் என்றொரு நாட்டை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்தால்! அது நடந்தது 1948ல்.

மாணவனாக இருந்த அல்-வாஸீர் படிப்பில் படு சுட்டி. படிப்பு-தன்னைச் சுற்றி நடப்பதை அறிவோடு ஆராயக் கற்றுக்கொடுத்தது.

'நமக்கிருந்த நாட்டில், நாடோடிகளாக வந்தவர்களுக்கு ஒரு நாடு! விளைவு-நமது மக்கள் நாதியற்ற அகதிகள். இதென்ன நியாயம்? அதெப்படி ஐ.நா. சபையும் அதற்கு ஆமாம் போடுகிறது?'

"புறப்படு வாஸீர்! நாம் போக வேண்டும்.....?"

தாயார் சொன்னாள். நிமிர்ந்து பார்த்தான் வாஸீர். அவன் விழிகளில் இருந்து உருண்டு வந்த கண்ணீரில் ஒரு துளி வாஸீரின் முகத்தில் பட்டு, உதட்டில் கலந்து உப்புக் கரித்தது. அது இரத்தத்தோடு சேர்ந்துவிட்டது.

"எங்கே போகிறோம்?"

"காஸாவுக்கு!"

அல்-வாஸீரின் வீடு இஸ்ரேல் தலைநகரமான ரெல் அவிவ் நகருக்கு அருகே இருந்தது. அங்கிருந்து காஸாவுக்கு புறப்பட்டார்கள். புறப்பட்டார்கள் என்பது தவறு, 'போய்விடுங்கள்' என்று விரட்டப்பட்டார்கள்.

காஸாவிலும் இஸ்ரேலியர்களின் தொல்லைகள் தொடர்ந்தன.

'நாட்டை இழந்தோம்; நம் கௌரவம் இழந்தோம்; நம்மையே இழந்தோம். இனி மீட்சியே இல்லையா? ஏன் இல்லை, எழ வேண்டும்! எரிந்த சாம்பலில் இருந்து மீண்டும் எழுமாமே ஃபீனிக்ஸ் பறவை! அதுதான்-அதேபோலத்தான் எழ வேண்டும்... எழுந்து கொண்டேயிருக்க வேண்டும். இழந்தது யாவும் மறுபடி எமக்கேயாக-எழ வேண்டும்!"

காஸாவிலும் இருந்து நெஞ்சில் நெருப்பு வளர்த்த போது அல்-வாஸீருக்கு வயது 18.

18 வயதில் இயல்பாகவே இரத்தம் சூடாக இருக்கும். இழந்தவைகளை எண்ணியபோது இள இரத்தம் மேலும் தகித்தது.

□□

**அ**வர்கள் கூடியிருந்தார்கள். அனைவரும் இளைஞர்கள்; அல்-வாஸீரின் நண்பர்கள்.

சொந்த பூமியை இழந்த கோபம் சுமந்து தீக்குச்சிகளாய் மாறியவர்கள்.

**ஜிகாத்-புனித யுத்தம்.**

**அபு ஜிகாத்-புனித யுத்தத்தின் தந்தை.**

**அபு-ஜிகாத் என்றழைக்கப்பட்டவர் கலீல் அல்-வாஸீர்!**

**இஸ்ரேலியர்கள் அவர் பெயரைக் கேட்டாலே போதும்; அதிர்ந்தார்கள். அதனால் அவரை அழித்தொழிக்க சதி வலைகள் பல விரித்தார்கள்.**

**அபு-ஜிகாத் வரலாற்றை முழுமையாக விளக்குவது முடியாத காரியம். எனினும், அபு-ஜிகாத்தின் போர்க்குணம், இஸ்ரேலியர்களின் சதித்தனம் போன்றவற்றை ஓரளவு அறிய இது உதவும்.**

திரட்டி, பற்றவைத்துவிடும் வேலை அல்-வாஸீருக்கு.

'பாலஸ்தீன அதிரடி அமைப்பு' க்கு அன்றுதான் அத்திவாரமிடப்பட்டது.

"இனிமேல் இஸ்ரேலியர்கள் நிம்மதியாக இருக்க முடியாது."

அல்-வாஸீரின் குரலில் கூட தீ பரவியிருந்தது. அல்-வாஸீரின் குரல் திடீரென்று உயர்ந்தது;

"எதிரிகளுக்கு இனிமேல்தான் இலையுதிர்காலம் ஆரம்பம்! எங்கள் வசந்தங்களை கொள்ளையிட்டார்கள். இனி அவர்களின் கனவுகளும் பற்றி எரியும்! தாக்கு- விடாதே- தாக்கு!"

□□

"**ஆ**ம்! தாக்குவது-தொடர்ந்து நம் மேல் தாக்குவது - அதுதான் அவர்களின் நோக்கம்..."

இஸ்ரேலிய பாதுகாப்புப் படை உயரதிகாரி ஒருவர் விளக்கிக் கொண்டிருந்தார். விளக்கியது மிக இரகசியமான- மிக முக்கியமான- மிகப்பத்திரமான- பாதுகாப்பு மாநாட்டில்.

அதிகாரிகள் விறைப்பாக, புன்னகை செய்வதே மாபெரும் குற்றம் மாதிரி இறுக்கமான முகங்களோடு அமர்ந்திருந்தனர்.

ஒரு அதிகாரி தனது தடித்த உதடுகளைத் திறந்து, "சூத்திரதாரி யார் என்று தகவல் ஏதாவது கிடைத்திருக்கிறதா?" என்றார்.

"தலையில்லாமல் வால் எப்படி ஆடும்? நெருப்பில்லாமல் புகை எப்படிக் கிளம்பும்? கிடைத்திருக்கிறது!" என்று சொல்லிவிட்டு அனைவர் மீதும் ஒரு பார்வையை உலாவிட்டுப் பார்த்தார் உயர் அதிகாரி.

குண்டூசி விழுந்தாலும் துல்லியமாகக் கேட்கக்கூடிய அமைதி நிலவியது. இறுக்கமான முகங்களில் எதிர்பார்ப்புக்கான பாவனைகள்.

இனியும் புதிர்போட்டால் சக அதிகாரிகள் சலித்துப் போவார்கள். அதனால் கிடைத்த தகவலின்படி சூத்திரதாரியின் பெயரை உதிர்த்தார் உயர் அதிகாரி.

"கலீல் அல்-வாஸீர்!"

"பெயர் மட்டும்தானா?"

"சாதகமே இருக்கிறது!"

"குட், வெரி வெரி குட், சொல்லுங்கள்!"

அதிகாரிகள் அனைவரும் இரகசியமான- சின்னதான- கறுப்பான டைரியை விரித்துக் கொண்டு, பேனாவை உருவி, விபரக் குறிப்பெடுக்க தயாராக இருந்தனர்.

"பெயர்: கலீல் அல்-வாஸீர். பிறந்தது 1935 அக்டோபர் 10. பிறந்த இடம்: நம் தலைநகர் அருகேயுள்ள 'ரமலா' என்னும் கிராமத்தில். படித்தது- இறுதியாக கெய்ரோ பல்கலைக்கழகத்தில். படிப்பைத் தொடரவில்லை. தொடராதது, நமக்கு தொல்லை கொடுப்பதற்கே. தொழில்: ஆசிரியர். பிடித்த காரியம் இஸ்ரேலியர்களை அச்சுறுத்துவது. வாய்ப்புக் கிடைத்தால் கொல்வது. இந்த நிமிடத்தில் என்ன செய்துகொண்டிருப்பார்? 'நமது பாலஸ்தீனம்' என்னும் பத்திரிகைக்கு அனல் பறக்க கட்டுரை எழுதிக் கொண்டிருப்பார், அல்லது தனது அதிரடிப்படையின் அறிக்கைகளை பரிசீலித்து அடுத்த தாக்குதலுக்கான இலக்கைக் குறித்துக் கொண்டிருப்பார்!

உயர் அதிகாரி விபரங்களைக் கூறிவிட்டு 'இவ்வளவு போதுமா' என்பதுபோல சக அதிகாரிகளை நோக்கினார்.

குள்ளமாக இருந்த ஒரு அதிகாரி தனது வழுக்கைத் தலையை இடது கையால் வருடிக்கொண்டு தன் சந்தேகத்தைக் கேட்டார்.

"இப்போது அல்-வாஸீர் எந்த நாட்டில் இருக்கிறார் என்று தெரியுமா?"

விபரங்களை அடுக்கிய அதிகாரி உடனடியாகப் பதில் சொன்னார்:

"தெரியும்! லெபனானில்!"

கேள்வி கேட்ட அதிகாரி தனது தோள்களைக் குலுக்கிக் கொண்டே, சற்றுக் கடுமையான குரலில் "சுலபம்...மிகச் சுலபம்!"

"என்ன சுலபம்?"

"கொல்வது! கொல் அல்லது கொல்லப் படுவாய்!"

"இது நம் எதிரி ஹிட்லர் சொன்னதல்லவா?"

"ஆம்! எதிரியிடமிருந்தும் கற்றுக்கொள்ளலாம். கற்றுக்கொள்ள தெரியாதவன் எவனோ அவன் வெற்றிபெறும் பற்றுக் கொள்ளாதவனாகிறான்!"

சக அதிகாரிகளுக்கும் அக் கருத்து பிடித்தமானதாகவே இருந்தது. ஒரே குரலில் சொன்னார்கள்,

"கொல்லத்தான் வேண்டும்!"

□□

"**கொ**ல்லத்தான் நினைப்பார்கள், தெரியும்!"

என்றார் அல்-வாஸீர், தனது நண்பனிடம்.

அல்-வாஸீர் தெளிவாக இருந்தார். எதிரேயிருந்த நண்பர் மட்டும் கவலையோடு இருந்தார்.

"உங்களை மிக மிக அதிகமாக வெறுக்கிறார்கள் இஸ்ரேலியர்கள்."

நண்பர் சொல்ல அல் -வாஸீர் புன்னகைத்தார்.

"எதிரி நம்மை வெறுத்தால், அது நம் கொள்கை உறுதிக்கு சாட்சி. எதிரி நம்மை நேசித்தால் தான் ஆபத்து! அவன் வலையில் வீழ்ந்து போனோம், அல்லது வீழ்த்தப் படப் போகிறோம் என்பதற்கான அறிகுறி!"

"உங்கள் காலடிகளை அவர்கள் எண்ணுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கலாமா?"

அதற்கும் அல்-வாஸீரிடமிருந்து ஒரு புன்னகைதான் புறப்பட்டது.

"அவர்களுக்கு ஏன் சிரமம்? ஒவ்வொரு காலடியையும் நானும் எண்ணித்தான் வைத்துக்கொண்டிருக்கிறேன். அதிக காலம் வாழ்வது என் ஆசையல்ல. நம் பாலஸ்தீனம் தன் விடுதலைக்கு என் உயிரென்னும் உரம் கேட்டால் கொடுப்பது பாக்கியம்!"

அல்-வாஸீர் சொல்ல நண்பனின் கண்கள் கலங்கியது தெரிந்தது. புறப்பட தயாரானவரை தடுத்தார் அல்-வாஸீர்.

"இருங்கள்! முக்கியமான ஒருவரை உங்களிடம் அறிமுகம் செய்யப் போகிறேன். இந்த இரகசிய இடத்திற்கு அவர் வந்து கொண்டிருக்கிறார். ஆச்சரியப் படப்போகிறீர்கள். நம் புனித யுத்தத்தின் மற்றொரு கட்டம் ஆரம்பமாகப் போகிறது. அவர் வரட்டும் இருங்கள்!"

(தொடர்ந்து வரும்)




## ஹலோ டாக்டர்!

"**ஹ**லோ டாக்டர். நலமா? ஓ...இதை நீங்கள்தான் கேட்கவேண்டுமாக்கும். இன்று அதிக நேரம் உங்களை சோதிக்கப்போவ



தில்லை. நண்பர்கள் சிலர் தந்த சில கேள்விகள் கைவசம் இருக்கின்றன. விளக்கம் சொன்னால் போதும், ஒரு நன்றியை அன்பளிப்பாக-தந்துவிட்டு போய் விடுவேன்."

"நல்லது, கேளுங்கள், முதலில் அமருங்கள்."

"கேள்வி நம்பர் வன்: சாப்பிடும் போது புரை ஏறினால் தலையில் தட்டுகிறார்களே, அதனால் ஏறிய புரை இறங்கிவிடுமா டாக்டர்?"

"ஆபத்தான முறை அது. புரை இறங்கும் என்று நினைத்து உயிரையே இறங்கிப் போக வைத்து விடுமளவுக்கு ஆபத்து உண்டு!"

"நல்ல வேளை, நான் உயிருடன் இருக்கிறேன். நேற்று எனக்கு புரை ஏறியது, மனைவிக்கு பொறுக்க முடியவில்லை. நாலு தட்டு தட்டிவிட்டாள்"

"நிச்சயம் உயிர்போகும் என்றில்லை. உயிரபாயம் ஏற்படும் வாய்ப்பு அதில் உண்டு. சாப்பிடும் உணவு வழிமாறி மூச்சுக் குழாயில் செல்லும் போதுதான் புரை ஏறுகிறது. அப்போது மூச்சு அடைபடுகிறது. இந்தச் சமயத்தில் புரை ஏறியவரின் தலையில் தட்டும்போது என்ன நடக்கிறது தெரியுமா? மூச்சுக் குழாயின் நுழைவு வாயிலில் இருக்கும் உணவு வேகமாக உள்ளே செல்லும். அது மூச்சுக் குழாயை அடைத்துக் கொள்ள நேர்ந்தால் மரணம் சர்வ நிச்சயம்."

"அப்படியானால் புரை ஏறியவுடன் என்ன செய்யலாம் என்று சொல்லுங்கள் டாக்டர்?"

"புரை ஏறியவரின் மேல் வயிற்றில் வேகமாகத் தட்ட வேண்டும். அதுவே தக்க முறை!"

"கேள்வி நம்பர் டூ: காதுக்குள் எறும்பு புகுந்து விட்டால் என்ன செய்யலாம் டாக்டர்?"

"ராசாவே சிற்றெறும்பு காதைக் கடிக்குது என்று பாடலாம்."

"கடிக்காதீர்கள் டாக்டர், சிலர் காதுக்குள் தண்ணீரை விட்டு எறும்பை எடுக்க நினைக்கிறார்களே, சரியா?"

"தவறுதான்! ஏன் தெரியுமா?"

"தெரிந்தால் கேட்பேனா?"

"இது பதில் கடிதானே! சரி, நானே சொல்கிறேன். காதுக்குள் தண்ணீரை விட்டால் எறும்பு அதில் நீந்தத் தொடங்கி விடும். அதனால் வலி அதிகமாகும். அதனால் தண்ணீருக்குப் பதில் சில துளிகள் எண்ணெய் காதுக்குள் விடுவது நல்லது."

"அதாவது எண்ணெய்யில் எறும்பு நீந்தும் வாய்ப்பு அறவேயில்லை. எறும்பு இறந்தும் போகலாம்."

"குட், கற்பூர மூளை உங்களுக்கு!"

"வெய்யிலுக்கு இதமான ஐஸ்! சரி, டாக்டர் வயிற்றுவலி அடிக்கடி வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அடிக்கடி டாக்டரை நாடுவது முடியாத காரியம். சிரமம் மற்றும் செலவு. கோபப்படாதீர்கள்! வீட்டு வைத்தியம் ஒன்று சொல்லுங்களேன் டாக்டர்?"

"என் பிழைப்பிலேயே கைவைக்கிறீர்கள். வயிற்றுவலி ஏற்பட பல காரணங்கள் உள்ளன. உஷ்ணம், அஜீரணம், வாயுத்தொல்லை போன்றவற்றாலும் வயிற்றுவலி ஏற்படலாம். உடனடி நிவாரணம் பெற அருமையான மருந்து சீரகம். ஒரு தேக் கரண்டியளவு சீரகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் உள்ள கல், மண் போன்றவற்றை அப்புறப்படுத்திவிட்டு, சீரகத்தோடு சிறிதளவு உப்பு சேர்த்துக் கொள்ளுங்கள். அதனை வாயில் போட்டு நன்றாக மென்று விழுங்குங்கள். அதன் பின்னர் அரை டம்ளர் தண்ணீர் குடியுங்கள். அரை மணி நேரத்தில் வயிற்றுவலி பறந்து போய்விடும்."

"இது கடைசிக் கேள்வி, அடிக்கடி அந்த 'சமாச்சாரத்தில்' ஈடுபடுவதால் நோய்கள் வரும்; உடலுக்கும் கெடுதி என்கிறார்களே உண்மையா டாக்டர்?"

"பச்சைப் பொய்! நமது உடலில் உள்ள அத்தனை உறுப்புக்களும் உற்சாகமாக பங்குகொள்வதும், செயற்படுவதும் அந்த சமயத்தில்தான் அதுவும் ஒரு சிறந்த உடற்பயிற்சிதான். தவறான தகாத முறைகள் மட்டும் கூடாது? அவைதான் நோய்களின் மையம். தவிர 'எயிட்ஸ்' தாக்குதலும் வெற்றிகரமாக நடக்கலாம்."



"நன்றி டாக்டர்! பார்வையாளர்களை கவனியுங்கள், நான் வருகிறேன்."

## கிரிக்கெட் செய்திகள்



*சர்வதேச ஒரு நாள் போட்டிகள் விளையாடத் தொடங்கி இந்த ஆண்டுடன் 24 ஆண்டுகள் முடிந்துள்ளன.

* இந்த 24 ஆண்டுகளில் சமீபத்தில் நடந்த சார்ஜா போட்டிகளையும் கணக்கில் சேர்த்துக் கொண்டால் இதுவரை உலகில் 1000 க்கு மேற்பட்ட போட்டிகள் நடந்துள்ளன.

* ஒரு நாள் கிரிக்கெட் போட்டி முதன் முதலாக 1971 ம் ஆண்டு ஜனவரி மாதம் 5ம் திகதி நடைபெற்றது.



*முதல் ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் இங்கிலாந்தும், அவுஸ்திரேலியாவும் மோதின.

* 30 ஒரு நாள் போட்டிகள் நடத்த முடியாமல் கைவிடப்பட்டுள்ளன.

* 9 ஒரு நாள் போட்டிகள், யாருக்கும் வெற்றி, தோல்வியின்றி 'டை' யில் முடிந்துள்ளன.

*கடந்த ஆண்டுதான் அதிகபட்சமாக 97 ஒரு நாள் போட்டிகள் நடந்துள்ளன.

## நஷ்டஈடு தா!

**து**டுப்பைத் தூக்கினால் போதும் எதிரணி திணறத் தொடங்கும். அவர்தான் மேற்கிந்திய கிரிக்கெட் அணி வீரர் டெஸ்மன்ட் ஹேயின்ஸ்.



இப்போது அவரால் மேற்கிந்திய தீவு கிரிக்கெட் சபை திணறிக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் நடந்த கிரிக்கெட் போட்டிகளில் ஹேயின்சுக்கு அணியில் இடம் இல்லை என்றுவிட்டது கிரிக்கெட் சபை. கொதித்தும், வெறுத்தும் போன ஹேயின்ஸ் நஷ்டஈடு கேட்டு போர்க்கொடி உயர்த்தி விட்டார். அவரை எப்படி சமாளிப்பது என்றுதான் மே.இந்திய கிரிக்கெட் சபை திணறிக்கொண்டிருக்கிறது.

## உடற் பயிற்சி



உடற்பயிற்சி, உடலுக்கு வலிமை சேர்ப்பதுடன் மன இறுக்கத்தையும் அகற்றுகிறது என்கிறார்கள் டாக்டர்கள். இது சம்பந்தமான ஆராய்ச்சி ஒன்று கலிஃபோர்னியாவில் நடைபெற்றது.

68 டீன் ஏஜ் வாலிபர்களை இந்த ஆராய்ச்சிக்காகத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்தார்கள். முதல் குழுவினரை காலையிலும், மாலையிலும் முறையான உடற்பயிற்சியில் ஈடுபடும்படி கூறினார்கள்.

இரண்டாவது குழுவினர் தங்களுடைய வேலைகளை எப்பொழுதும்போல் செய்யும்படி பணிக்கப்பட்டார்கள்.

மூன்றாவது குழுவினரை, ஒரு அறையில் அமர்ந்துகொண்டு, கேரம்போர்டு, வீடியோ கேம்ஸ் போன்ற இன்டோர் விளையாட்டுக்களை விளையாடும்படி கூறினார்கள்.

இந்த பரிசோதனை ஒரு மாதத்திற்கு நீடித்தது. சோதனையின் முடிவில் டாக்டர்கள் ஒவ்வொரு குழுவினரையும் 'டெஸ்ட்' செய்தனர்.

மற்ற இரு குழுவினர்களையும் விட, உடற்பயிற்சியில் ஈடுபட்ட குழுவினர்தான் எல்லா விதங்களிலும் ஆரோக்கியமாக இருந்தார்கள். அவர்களுடைய மனநிலையும் சமனாக இருந்தது.



தகவல்:ஏ.பி. ஆர்



படிப்பகம்

www.padippakam.com

# நம் நாட்டுக்கு உகந்த நடமாடும் தேவாலயம்



← 'ஆலயம் இல்லாத ஊருக்கு அழகு பாழ்' என்று முதுமொழி இருக்கிறதல்லவா. இனி அந்தக் கவலை கனடா போன்ற நாடுகளில் கிடையாது. நடமாடும் தேவாலயம் வந்து விட்டது. ஆலயம் கட்ட முடியாத வறிய கிராமங்களுக்கு விஜயம் செய்து தரிசனம் கொடுத்துவிடும். அது தவிர பாவம் செய்து விட்டு தேவன் சந்நிதி தேடிப் போக சங்கடப்பட்டுக் கொண்டிருப்பவர்களைத் தேடி தேவன் சந்நிதியே நேரில் வந்துவிடும். வாகனம் ஒன்றில் ஏற்றி ஊருக்கு ஊர் கொண்டு செல்ல வசதியாக கச்சிதமாக சிறியளவில் உருவாக்கப்பட்ட தேவாலயம்.

நம் நாட்டிற்கும் குறிப்பாக வடக்கு-கிழக்கு நிலவரத்திற்கு இப்படியொரு தேவாலயம் இருந்தால் நல்லது. வானத்தில் இரைச்சல் கேட்டால் பதுங்கு குழிக்குள் சென்றுவிடலாம். அப்பாவிகளுக்கு துன்பம் வந்தால் அதனை ஆண்டவனிடம் முறையிடலாம். அந்த ஆண்டவனுக்கே துன்பம் வந்தால்....? இப்படித்தான் ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும்!

# இந்த மீசை போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?

"மீசை வளர்க்கலாம்....அதுக்காக இப்படியா...?" என்று சொல்லும் அளவிற்கு நீ நீ நீ நீ நீளமாக மீசை வளர்த்து வைத்திருக்கிறார் ராம்சந்திரதிவாரி. உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த இவருக்கு 38 வயதாகிறது. ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக மீசைப் பக்கமே பிளேட்டைக் கொண்டு போனதில்லை. அதனால் தான் அவரது மீசை இப்படித் தாறுமாறாக வளர்ந்துள்ளது.

சமீபத்தில் இவரது மீசையின் நீளத்தை அளந்து பார்த்தனர். சுமார் 1¼ அடி நீளம் இருந்தது. எதற்காக இப்படி நீளமாக மீசை வளர்க்கிறீர்கள்? கின்னசில் இடம் பிடிக்க வேண்டுமென்று ஆசையா? என்று திவாரியிடம் நிருபர்கள் கேட்டனர். திவாரி பக பக வென்று சிரித்தார். "கின்னஸ் சாதனையா? எனக்கா? ம்ஹும். சுத்தமா அப்படி ஒரு ஆசையே இல்லை. ஏதோ ஒரு இதில வளர்க்கிறேன். அதுவும் நல்லா வளருது. அது இல்லாமல் என்னால் இருக்க முடியாது. அவ்வளவுதான்" என்றார்.



# அசத்தி விட ஆசை



பிரேசில் நாட்டைச் சேர்ந்தவர் லியோ. 24 வயது. துடிப்பான வயதென்பதால் வியப்பாக ஏதாவது செய்து அசத்த ஆசை. அதுதான் பொய்க்கால் அணிந்து வீதி வலம் செல்கிறார். வீதிகளில் டென்ஷனாக வாகனங்கள் ஒட்டிச் செல்வோருக்கு இவரைப் பார்த்தவுடன் டென்ஷன் இறங்கிவிடுகிறதாம்.

# சிறப்பான செம்மறி


படத்தில் இருக்கும் செம்மறி ஆட்டுக்கு இரண்டு வயசு. பிறந்த இரண்டு ஆண்டுகளுக்குள் பிரபலமாகிவிட்டது. பிரபலமானதன் காரணம் ஐந்து கால்கள். இதனால் நாம் ஆச்சரியப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் செம்மறி ஆட்டுக்கு வருத்தம்தான். வேகமாக ஓடவும், விரைவாக உணவு தேடவும் ஐந்தாவது கால் இருப்பது உபத்திரவமாக இருக்கிறதாம்.



# அடித்தது கரணம் — அணைத்தது மரணம்....!

சரியாக ஒரு வருடத்திற்கு முன்பு நடந்த சம்பவம் இது. அமெரிக்க விமானப்படையில் பணியாற்றிய ஆர்தருக்கு பி-52 ரக குண்டு வீசும் விமானங்களில் பறந்து சாகசங்கள் செய்வது என்றால் கொள்ளைப் பிரியம்.

அன்று....அவர் பி-52 ரக விமானத்தில் குட்டிக் கரணம் அடித்துக் காட்டப் போகிறேன், யாராவது வருகிறீர்களா? என்று அழைத்தார். எல்லாரும் வேண்டாம்பா, அது எதுக்கு வம்பு?" என்று பயந்து ஒதுங்கிக் கொள்ள, ஆர்தர் விமானத்தில் விண்ணுக்குப் பாய்ந்தார். திடீரென அவர் விமானம் குட்டிக் கரணம் போட்டது. பார்த்துக் கொண்டிருந்தவர்கள், "அடடே.. இவர் பரவாயில்லையே" என்று சொல்ல... அந்த வாக்கியம் முடிவதற்குள் விமானம் தரையில் செங்குத்தாகப் பாய்ந்து...."டமார்". ஆர்தர் போய்ச் சேர்ந்து விட்டார். ஆனால் அவரது கடைசிக் குட்டிக் கரணம் உலகப் புகழ்பெற்ற படங்களாகி விட்டது. கரணம் தப்பினால் மரணம். (சரி-பிறை)





படிப்பகம்

www.padippakam.com

# சினி...

## தள்ளாடும் தரமானபடம்

தமிழகத்தில் தற்போது திரையில் ஒடிக்கொண்டிருக்கும் படங்களில் நூறாவது நாளை நோக்கிச் செல்லும் படங்கள், 'சின்னவாத்தியார்', 'திருமூர்த்தி', 'எல்லாமே என் ராசாதான்'. 'தாய்-தங்கை-பாசம்'

'பாட்ஷா' 200 வது நாளை வெற்றிகரமாக நெருங்கிக்கொண்டிருக்கிறது. 'பம்பாய்' 150 நாளை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. சென்னையில் மட்டும் இரண்டு பெரிய திரையரங்குகளில் 'பம்பாய்' வசூல் பண்ணிக்கொண்டிருக்கிறது.

'சின்னவாத்தியார்' 75 நாட்களை தொட்டுவிட்டது. 50 நாட்களின் பின்னர் வசூல் சுமார் ரகம். அதனால் சென்னையில் ஒரு திரையரங்கில் மட்டும் ஒடுகிறது. 'திருமூர்த்தி'யும் அதேபோலத்தான். சென்னையில் இரு திரையரங்கில் மட்டும் 3 காட்சிகள். அதில் ஒரு திரையரங்கு மட்டுமே பெரியது. 'தாய்-தங்கை-பாசம்'. ரி.ராஜேந்தரின் விளம்பர உத்தியால் 75 நாளைத் தொட்டுவிட்டது. சென்னையில் ஒரு திரையரங்கில் மட்டுமே ஒருவிதமாக ஒடிக்கொண்டிருக்கிறது.

'எல்லாமே என் ராசா' பாடுதான் அமர்க்களம். சென்னையில் மட்டும் நான்கு திரையரங்குகளில் மகா வசூல்.

'வில்லாதி வில்லன்' 25 நாளைத்தாண்டிவிட்டது. சென்னையில் மட்டும் 5 திரையரங்குகளில் வசூல் மழை. அதில் ஒரு திரையரங்கில் பகல் காட்சி மட்டும்.

'முறைமாமன்' (குஷ்பு-ஜெயராம்) படுதோல்வி. சென்னையில் ஒரே ஒரு சிறிய திரையரங்கில் 3 காட்சிகளாக ஒடுகிறது.

புதிதாக திரைக்கு வந்துள்ள படங்கள், 'ஹைவே' (சுரேஷ் கோபி-பானுப்பிரியா) இது பானுப்பிரியாவின் நூறாவது படம். 'தமிழச்சி' (நெப்போலியன்-ரஞ்சிதா) 'விட்னஸ்' (ரகுவரன்-கவுதமி) 'அன்பு மகன்' (பரத்குமார்-சங்கவி) 'மருமகன்' (கார்த்திக்-மீனா) 'புள்ளகுட்டிக்காரன்' (பார்த்திபன்-ஊர்வசி) 'தேடிவந்த ராசா' (குஷ்பு-ராமராஜன்) மூன்றும் மூன்று வாரங்களைத் தாண்டிவிட்டன. இதுவரையான வசூல் நிலவரம் நன்று இவற்றின் மத்தியில் தரமான படமான 'மோகமுள்' தள்ளாடியபடி ஒரே ஒரு தியேட்டரில் 75 நாட்களை எட்டியிருக்கிறது.

## மஞ்சுளாவின் மாணிக்கம்

அசப்பில் தனது தாயார் மஞ்சுளா போலவே இருக்கிறார் வனிதா. 'சந்திரலேகா' படத்தில் விஜய் ஜோடியாக பிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறார் வினிதா.

மஞ்சுளாவின் மாணிக்கம் வனிதா புதிதாக நடிக்கப்போகும் படம் 'மாணிக்கம்'. டி.சிவாவின் அம்மா கிரியேசன்ஸ்தான் இதனைத் தயாரிக்கிறது. கதாநாயகன் ராஜ்கிரண். கதை-வசனம்-இயக்கம் கே.வி.பாண்டியன்.

கிராமத்தில் நடக்கும் கதை. ஆடு, மாடு கோழிகள் புடைசூழ ராஜ்கிரண் நடித்த முதல் காட்சி படமாக்கப்பட்டுவிட்டது.

டி.சிவாவின் அம்மா கிரியேசன்ஸ் பிரபு நடிக்கும் புதிய படமொன்றையும் தயாரிக்கிறது. பெயர் இன்னும் சூட்டப்படவில்லை.



ரோஜா—சிரஞ்சீவி பிக்பாஸ்



## இன்னொரு வீரப்பன்

சந்தனக்கட்டை மணம் மட்டுமல்ல, சந்தனக் கடத்தல் வீரப்பன் புகழும் பரவும். பரவிக் கொண்டுமிருக்கும். காரணம், கதைப் பஞ்சம். வீரப்பன் கதையை வைத்து 'அசுரன்' படம் தயாராகி ரெடியாகிவிட்டது. மற்றொரு படம் வீரப்பன் கதையோடு தயாராகிக் கொண்டிருக்கிறது. படத்தின் பெயர், 'மாஸ்டர்'. கலெக்டர் ஒருவர் சொல்லி வீரப்பனின் தம்பி அர்ஜுன் பொலிசில் சரணடைந்தது உண்மைக்கதை. அந்தக் கதைதான் 'மாஸ்டர்' படத்தின் கரு. கலெக்டராக நடிப்பது மம்முட்டி. நெப்போலியன் இந்தப் படத்திலும் நடிக்கிறார்.

## இரு வல்லவர்கள்

முரளி-ராம்கி இருவரும் இணைந்து நடிக்கப்போகும் புதிய படம் 'இரு வல்லவர்கள்' இம்மாதம் (ஆகஸ்ட்) குளிர்ச்சியான ஊட்டியில் படப்பிடிப்பு தடபுடலாக ஆரம்பிக்கிறது. முரளிக்கு ஜோடி ஊர்வசி. வில்லனாக சுசன்கான். இசை, சிற்பி. கதை, திரைக்கதை வசனம் விக்கிரமன். இயக்கப்போவது எம்.தியாகராஜன். இவர் சத்யா மூவீஸ் வீரப்பனின் (அமைச்சர்) மருமகன். முன்னர் 'மாநகரக்காவல்', 'வெற்றிமேல் வெற்றி' போன்ற படங்களை இயக்கியவர்.

## வித்தியாசம் காட்டுகிறார் சரத்

தனது படங்களுக்கு பழைய எம்.ஜி.ஆர் படப் பெயர்களை சூட்டினார் சரத்குமார். இப்போது சுதந்திரப் போராட்ட வீரர்களின் பெயரை சூட்டத் தொடங்கிவிட்டார். இம் மாதம் (ஆகஸ்ட்) திரைக்கு வருகிறது 'நாடோடி மன்னன்'. அதனையடுத்து 'மகாபிரபு' தீபாவளிக்கு 'ரகசியப் பொலிஸ்' திரைக்கு வரும். சரத்குமார் புதிதாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ள படங்களில் ஒன்றின் பெயர் 'நேதாஜி'. அம்மா கிரியேசன்ஸ் டி.சிவா தயாரிக்க சரத் நடிக்கும் புதிய படம் ஒன்றின் பெயர் 'அரவிந்தன்'. 'நேதாஜி' படத்தை இயக்கப்போவது சந்திரமோகன் நாஃக். இவர் 'அதர்மம்' படத்தில் கதை வசனம் எழுதியவர். 'அரவிந்தன்' படத்தை இயக்குவது ரி.நாகராஜன். இவர் திரைப்படக்கல்லூரி மாணவர். புதிய இயக்குநர்.

## ஷொட் 2

நாகா...

எல்...

## காதோடு...

நகைச்சுவை 'மணி' துணிப்பெயர் செ... செய்கிறாராம். அதிஷ்டம் 'மேன்' படத்தில் நடித்தாராம் நடிகை.

'காதல' நாயகனின் அன்புக்கு ஏங்குகி... விஷயமறிந்த நடிகரின் தந்தைக்குலம் தலை... காரிகளோடு வம்பாய் போச்சுடா' என்கி... அவர் அனுபவப்பட்ட நடன இயக்குநரல்...

'மகளிர் மட்டும்' பட நடிகை அவர். பெ... என்று முடியும். அவருக்கும் பம்பாய் தொ... லவ்வுன்னா அப்படியொரு லவ்வு. இருவரு... காண முடியும்தான் என்று நிரூபித்துக் கொ...

நீ ராணி என்பதை ஆங்கிலத்தில் சொ... நடிகையின் பெயர் வரும். காதலன் ச... வருகிறாராம். இயக்குநர்களிடம் "சார்... அனுப்பிவையுங்க அவர் காத்திருக்கிறார்...

### பலத்த மறுப்பு

ரஜினிகாந்தை பற்றித் தாறுமாறாக சரத்குமார் பேசி... ஒரு தமிழக சஞ்சிகை வெளியிட்ட செய்தி ரொம்... பரபரப்பு. ஆனால் இன்றுவரை அதை மறுத்து... சொல்லப்பட்டும் கொண்டிருக்கிறார் சரத்.

## முகப்பில்

பார்த்திபன்

ஊர்வசி

படம்:- 'புள்ள குட்டிக்காரன்'

(வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கிறது)

## கவுதமிக்கு சின்னிஜெயந்த்

பலபடங்களில் தனது பலகுரலில் பேசும் திறமையை வெளிப்படுத்தியவர் சின்னிஜெயந்த். இப்போது தனது பலகுரல் ஆற்றலை நம்பி அவர் தயாரித்து நடிக்கும் படத்தின் பெயர் 'பல குரல் மன்னன்'. முன்னர் 'சின்னப்புள்ளே' என்னும் படத்தை தயாரித்து நடித்தவர் சின்னிஜெயந்த்.

சின்னி ஜெயந்த் ஜோடியாக கவுதமி-வினிதா ஆகியோர் நடிக்கப்போவதாக ஒரு தகவல். கவுதமி நிலவரம் இப்படியாச்சே.

## ரஜினி படங்கள் தேடுதல் வேட்டையில்!

தெலுங்குப் படவுலக விநியோகஸ்தர்கள் ரஜினிகாந்த் படங்களை தீவிரமாகத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். 'நல்லாப் போகும் என்றால் எவ்வளவும் கொடுக்கலாம்' என்று தமிழ் பட தயாரிப்பாளர்களிடம் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். ரஜினி படம் தயாரித்த தாயாரிப்பாளர்களுக்கு இரட்டை லாபம். பழைய படங்களை மொழிமாற்று உரிமைக்கு தெலுங்கில் விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஏன் திடீர் தேடுதல்? 'பாட்ஷா' படம் தெலுங்கில் மொழி மாற்றப்பட்டு சூப்பர்ஹிட். நாட்டாமை படம் தெலுங்கில் தயாரிக்கப்பட்டதல்லவா. இப்போது வெளிவந்து சக்கைபோடு போடுகிறது. அதில் தமிழில் விஜயகுமார் நடித்த பாத்திரத்தில் ரஜினி தோன்றுகிறார். ரஜினி திரையில் வரும்போதெல்லாம் தெலுங்கு ரசிகர்கள் விசில் அடித்து ஒரே ஆரவாரம். ரஜினிக்கு தெலுங்கில் மவுசு கிளம்பியிருப்பதை நாடிபிடித்து அறிந்துவிட்டார்கள் தெலுங்குப்பட விநியோகஸ்தர்கள். இனி, விடுவார்களா, காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள ஒற்றைக்காலில் நிற்பார்கள்தானே.

## இரண்டு பிரபாகரன்கள்!

'கப்டன் பிரபாகரன்' மூலம் இயக்குநராகியவர் ஆர்.கே.செல்வமணி. அவர் இயக்கத்தில் வெளியான சமீபகாலப் படங்கள் சரியாகப் போகவில்லை. எக்கச்சக்க நஷ்டம். இதனால் தனது தயாரிப்பில் உருவாகும் 'அசுரன்' படத்தை இயக்கும் பொறுப்பை வேலு பிரபாகரனிடம் (வேலுப்பிள்ளை பிரபாகரன் அல்ல) ஒப்படைத்திருந்தார். விரைவில் திரைக்கு வருகிறது 'அசுரன்'. 'கப்டன் பிரபாகரன்' போலவே 'அசுரன்' படமும் சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பற்றிய கதைதான். 'கப்டன் பிரபாகரனில்' சந்தனக் கடத்தல் வீரப்பனாக (வீரபத்திரன்) நடித்து வில்லனாக அறிமுகமானவர் மன்சூரலிகான். அவர்தான் 'அசுரன்' படத்திலும் வீரப்பன். ஆக, கப்டன் பிரபாகரனின் தொடர்ச்சியாக அமையும் கதைதான் 'அசுரன்' படத்தின் கதை. கதாநாயகன் அருண்பாண்டியன்-ஜோடி ரோஜா. நெப்போலியனும் இருக்கிறார். எப்படியோ செல்வமணியை ஒரு பிரபாகரன் (கப்டன் பிரபாகரன்) உச்சத்தில் ஏற்றினார். இன்னொரு பிரபாகரன் (வேலு பிரபாகரன்) நஷ்டத்திலிருந்து மீட்கிறார்.

## இரட்டை ரோஜா

'மாயா பஜார் 95' படத்தில் ஊர்வசி இரட்டை வேடத்தில் நடித்து வருகிறார் என்பது தெரிந்த செய்தி. புதிதாக ஒரு படத்திலும் இரட்டை வேடத்தில் நடிக்கப்போகிறார் ஊர்வசி. படத்தின் பெயர் 'இரட்டை ரோஜா' 'மாயா பஜார் 95' படத்தை இயக்கிவரும் கேயார் 'இரட்டை ரோஜா' படத்தையும் இயக்குவார். கதாநாயகனாக ராம்கி நடிக்கப்போகிறார்.



www.padippakam.com

சினிமா விமர்சனம்

# எல்லாமே என் காதலி

நாகார்ஜுன்-மனிஷா கொய்ராலாவைக் காதலிக்கிறார். ரம்யா கிருஷ்ணனும் நாகார்ஜுனைக் காதலிக்கிறார். அது போதாதோ? பாடல் காட்சிகளுக்கு பஞ்சமேயில்லை. மனிஷாவுக்கு மட்டும் பயங்கரமான உடைப்பஞ்சம். ரம்யாவுக்கும் அதே! ஜொள்ளுப் பிரியர்களுக்குக்கூட திகட்டுமளவுக்கு மனிஷா கொய்ராலாவை உரித்திருக்கிறார்கள். நாகார்ஜுன்-மனிஷா கிசு-கிசு விவகாரத்தை மனதில் வைத்துக் கொண்டு பார்த்தால் நெருக்கத்தில் முழுவதும் நடிப்பு என்று நம்பத்தான் முடியவில்லை. அந்தளவுக்கு நெருங்கி நொறுங்கியிருக்கிறார்கள் படம் முழுவதும்.

தெலுங்கில் இருந்து தமிழுக்கு மொழிமாற்றப்பட்டபோதும், சில காட்சிகளை தமிழுக்கென்று தனியாக 'சூட்' பண்ணி ஒட்டியிருக்கிறார்கள். அந்த ஒற்றைக்கை வில்லன் பயமுறுத்துகிறார். கிட்னிக் கடத்தலை (உண்மைச்சம்பவம்) மையமாக வைத்து கவர்ச்சி நிறையச் சேர்த்து தந்திருக்கிறார்கள். சண்டைக் காட்சிகளும் அசத்தல். சரத்பாபுதான் நிஜமான வில்லன் என்று கடைசியில் தெரியும்போது ஒரு திருப்பம். பொழுது போக்குவதற்கு மட்டும் என்றாலும் சரி, கொளுத்தும் வெய்யிலுக்கு குளிர்ச்சி தேவையென்றாலும் சரி, பார்க்கக்கூடிய படம். நம் நாட்டில் சின்ன திரைகளில்-வீடியோ கசட் உபயத்தில்-விரும்பினால் பார்க்கலாம்.



கமல்— ஆம்னி

பாசவலை





...ன் - மனிஷா கொய்ராலா

...மே என் காதலி

## ...சால்லுகிறோம்

...ண்ட கவர்ச்சி நடிகைக்கு சிபார்சு
...னி மனம் கோணாமல் ஒத்துழைத்து

...ராம் ஒரு பம்பாய் 'மினுக்' நடிகை.
...த்தரவு போட்டுவிட்டதாம். 'பம்பாய்
...ராம் தந்தைக்குலம்.
...ர.

...ரின் பின்பாதி 'கிணி'
...லதிபர் ஒரு வருக்கும்
...தனிமையிலே இனிமை
...ாடிருக்கிறார்களாம்.

...லிப்பாருங்கள் அந்த
...ம் படப்பிடிப்புக்ககு
...ன்னை சீக்கிரமாய்
...ன்கிறாராம்.

# மினி சினி

* பி.சி.ஸ்ரீராம் இயக்க, கமல் தாயரித்து நடிக்கும் 'துரோகி' படத்தின் பெயரை 'குருதிப்புனல்' என்று மாற்றியுள்ளார்கள். தமிழ்-தெலுங்கு என இருமொழிகளில் தயாராகும் இப்படத்தில் கமல் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார்.
* தெலுங்கு 'நாட்டாமை' யான 'பெத்தராயுடு'வில், தமிழில் சங்கவி நடித்த வேடத்தில் தெலுங்கில் செண்பகம் நடித்துள்ளார். 'பெத்ராயுடு' படத்தின் இயக்குநரான ரவிராஜா செண்பத்தின் பெயரை அபிநயா என்று மாற்றிவிட்டார்.
* ராம்கி கதாநாயகனாக நடிக்க, பிரபல இயக்குநரான மகேந்திரனின் மகன் ஜான் ரோஷன் இயக்குவதாக இருந்த 'மிஸ்டர் ஜானகிராமன்' கைவிடப்பட்டுள்ளது. தற்போது ஜான் ரோஷன், பிரசாந்த் நடிக்கும் 'ஜோக்கர்' என்ற படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தை 'குற்றப்பத்திரிகை' படத்தயாரிப்பாளரான ரவியாதவ் தயாரிக்கிறார்.
* மணிரத்னத்தின் நண்பரான 'உதயம்' புகழ் ராம்கோபால் வர்மா தெலுங்கில் நாகார்ஜுன்-ஸ்ரீதேவி ஜோடியை வைத்து இயக்கிய 'கோவிந்தா... கோவிந்தா..... கோவிந்தா....' தமிழில் 'கிரீடம்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வெளியானது. தற்போது இந்தப் படம் இந்தியிலும் 'த கிரேட் ரொபரி' என்ற பெயரில் மொழி மாற்றப்பட்டுள்ளது.
* ரஜினியின் 'முத்து' படத்திலும் கமலின் 'இந்தியன்' படத்திலும் இரண்டாவது கதாநாயகியாக நடித்து வருகிறார் ஊர்வசி.
* 'ப்ளே கேர்ள்ஸ்' படத்தில் அறிமுகமான ஷகீலா-ஷீட்டல் சகோதரிகளில் ஒருவரான ஷீட்டல், 'நினைத்ததை முடிப்பவள்' என்ற படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார். இப்படத்தை 'தங்கராசு' படத்தை இயக்கிய அலெக்சாண்டர் இயக்குகிறார்.
* சரிதாவுக்கு அடுத்தபடியாக நடிகைகளுக்கு பின்னணி பேசிவரும் ரோஹிணி, 'சின்ன வாத்தியார்' படத்தில் இடம்பெற்ற 'கண்மணியே...' என்ற பாட்டில் இடையிடையே (வசை) பாடியிருந்தார். அண்மையில் ரோஹிணி தெலுங்குப் படமொன்றிற்காக முழுப்பாடல் ஒன்றைப் பாடியுள்ளார்.
* இதுவரை தனது தயாரிப்பில் உருவான 'குரோதம்', 'வீரமணி' போன்ற படங்களில் மட்டுமே நடித்திருந்த பிரேம், முதன் முறையாக வெளி நிறுவனம் தயாரிக்கும் 'வர்றாரு சண்டியரு' என்ற படத்தில் நடிக்கிறார். இதில் குஷ்பு கதாநாயகியாக நடிக்கிறார்.
* பிரபல மலையாள இயக்குநரான ஜோஷி இப்போது இயக்கி வரும் மலையாளப்படத்தில் மம்முட்டி கதாநாயகனாக நடிக்கிறார். முக்கிய வேடம் ஒன்றில் இந்தி நடிகர் ஜாக்கி ஷெரப்பும் இப்படத்தில் நடிக்கிறார்.
* 'பசும்பொன்' படத்திற்கு கதை-வசனம் எழுதிய சீமான், அடுத்து கே.பாலு தயாரிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். இந்தப் படத்தில் பிரபு-சங்கீதா நடிக்கின்றனர்.

## கொடுக்க ரெடி

'தேவா' படத்தில் விஜய் ஜோடியாக நடித்த 'ஸ்வாதி'யை விஜய்க்கு பிடித்துவிட்டது. 'வசந்த வாசல்' படத்திலும் இருவரும்தான் நடித்து முடித்துக் கொண்டிருக்கிறார்கள். 'ஸ்வாதியின்' பொலிசி என்ன தெரியுமா? 'காட்சிக்காக கவர்ச்சி தேவையானால் இயக்குநர் விருப்பப்படி கொடுக்க ரெடி!

## நீ...ள....ம்..... அதிகம்

'மௌன யுத்தம்' படத்தில் அரவிந்த்சாமிக்கு நக்மா நீ..ள...மாய் ஒரு முத்தம் கொடுத்த முக்கிய செய்தி சினிவிசிட் வாசகர்கள் அறிந்ததே. இது தவிர 'மௌன யுத்தம்' படத்தில் அடி தடி காட்சிகளில் புகுந்து விளையாடி 'ஆக்ஷன் ஹீரோவாகி விட்டார் அரவிந்த்சாமி.

## கிளு-கிளு அதிகம்

விஜய்-சங்கவி ஜோடியாக நடிக்கும் படம் விஷ்ணு. இதயத் துடிப்பு நின்றுவிட்ட சங்கவிக்கு நெஞ்சில் தடவி இதயத்தை இயங்கவைக்கிறார் விஜய். படத்தின் கிளு-கிளு காட்சிக்கு அது ஒரு துளி உதாரணம் மட்டும்.





வினிதா -பிரபு- கனகா

படம் பெரிய குடும்பம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

## "மருந்துக்குமில்லை மனஈடுபாடு!"

### ஆறு பெண்களின் அதிரடியான கொமென்ற்ஸ்

இந்தியாவில் உள்ள பிரபல பெண் எழுத்தாளர் ஷோபா டே. இவரது நாவலுக்கு பயங்கர கிராக்கி. தனது நாவல் ஒன்றை எழுதுவதற்காக பலதரப்பட்ட பெண்களை சந்தித்துப் பேசினார்.

ஷோபா டேயிடம்-அவரும் ஒரு பெண் என்பதால்-'செக்ஸ்' குறித்து மனம் திறந்து பேசினார்கள் பல பெண்கள்.

என்ன பேசினார்கள்?

35 வயதானவர் திவ்யா. கணவர் ஒரு பொறியியலாளராக இருக்கிறார். திவ்யா சொல்லுகிறார்:

"உடல் தேவைக்காகத்தான் நாங்கள் 'செக்ஸ்' வைத்துக்கொள்கிறோம். மன ஈடுபாடு மருந்துக்கும் கிடையாது."

கம்பனி ஒன்றில் உதவி மனேஜராக இருக்கிறார் ராணி. வயது 31. ராணி சொல்வது இது:

"என்னை அவர் ஒரு 'செக்ஸ்' இயந்திரமாகக் கருதுகிறார்."

இதைவிட பொல்லாத சோகம்-கோகா என்னும் பம்பாய் பெண்ணுக்கு;

"அவருக்கு ஒரு போத்தல் விஸ்கி ஒரு கையில், இன்னொரு புறம் நான் வேண்டும் படுக்கையில்."

என்கிறார் கோகா.

"படுக்கையறை நாகரீகம் கொஞ்சம் கூட இல்லாதவர்கள் இந்திய ஆண் மக்கள் என்பது என் கருத்து. செக்ஸில் ஈடுபடும் போது ஒரு நேர்த்தி இருப்பதில்லை."

பெண்கள் வெளிப்படையாக 'செக்ஸ்' உணர்வுகளை சொல்லுவதை ஆண்கள் விரும்புவதில்லை.

"என் கணவருக்கு A B C D கூட தெரியவில்லை! என் அங்கங்கள் பற்றி இன்னும் சரியாகத் தெரியாது அவருக்கு!"

இப்படி பொருமித் தள்ளியிருக்கிறார்



புதுடில்லியில் அழகு நிலையம் ஒன்று நடத்தும் ரீனா.

கம்பெனி ஒன்றில் செயலாளராக இருப்பவர் ஹஸீனா. அவர் 'சுருக்' ரகமாக சொல்வது:

"எங்கள் உறவில் காதலுக்கே இடமில்லை!"

இதுவரை திருமணமாகாத கவிதாவிடம் போய் கருத்துக் கேட்டார் ஷோபா டே. கவிதா சொன்னது இது:

"இந்திய ஆண்கள் உலகிலேயே மோசமான காதலர்கள் என்பது என் கருத்து!" (இலங்கை ஆண்கள் தப்பினார்கள்!)

இக் கருத்துக்களை தனது நாவலிலும் பயன்படுத்தியிருக்கிறார் ஷோபா டே. ●

# தாதாவின் மனைவி

'தாதா சாகேப் பால்கே' விருது பெற்றிருக்கிறார் அல்லவா இந்தி நடிகர் திலீப் குமார்?

எந்த ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறார் என்று சொல்லுவார்கள் அல்லவா? திலீப் குமாரின் பின்னால் யார் இருக்கிறார் என்று பார்ப்போமா? சயிரா பானுதான் அந்தப் பெண். அவர்தான் திலீப் குமாரின் துணைவி.



நல்ல கணவன், நல்ல மனைவி, நல்ல குடும்பம் தெய்வீகம். ஆனால், திலீப் குமார் சயிரா பானு வாழ்விலும் புயல் வீசியது? அதுபற்றிச் சுருக்கமாகக் கொஞ்சம்.....

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும். அதுவும் நடிகர்-நடிகைகள் வாழ்க்கையில் கிசு-கிசுக்கள் ஏராளம் இருக்கும்.

திலீப் குமார் அஸ்மா என்பவரை திருமணம் செய்துவிட்டதாக சில ஆண்டுகளுக்கு முன்னர் பத்திரிகைகளில் செய்திகள் வந்தன-கொட்டை எழுத்துக்களில்!

இது போதும்-சயிரா பானுவும், திலீப் குமாரும் பிரியப்போகிறார்கள் என்று ஆருடங்களும் வெளியாகியிருந்தன.

திலீப் குமார் புனித நூல் மீது சத்தியம் செய்தார். சயிரா பானு மட்டுமே ஒரே மனைவி என்று பகிரங்கமாக அறிவித்தார். அத்தோடு விவகாரம் ஓவர். தம்பதியினர் மத்தியில் புயல் ஓய்ந்து அமைதி திரும்பியது.

சயிரா பானு பொறுமையைக் கடைப்பிடித்திருக்காவிட்டால் விவகாரம் பெரிதாக மாறியிருக்கும்.

## இறால் பக்கோடா



**தேவையானவை:-**

இறால்-1 கிலோ
மா - 3/4 கிலோ
பெரிய வெங்காயம்- 300 கிராம்
பச்சை மிளகாய்- 50 கிராம்
பூண்டு - 25 கிராம்
தேங்காய் எண்ணெய் -1/2 லீற்றர்
அப்பச் சோடா - 1 தேக்கரண்டி
மசாலாத் தூள் - 1 தேக்கரண்டி
உப்பு- தேவையானளவு
கறிவேப்பிலை-அளவாக.

**செய்முறை:-** முதலில் இறாலை தோல் உடைத்துச் சுத்தமாக்கிக் கொள்ள வேண்டும். பெரிய வெங்காயம், பச்சை மிளகாயை நறுக்கி வைத்துக் கொள்ளவும். மாவுடன் சிறிது தண்ணீர் விட்டு இறால், பெரிய வெங்காயம், பச்சைமிளகாய், நசுக்கிய பூண்டு, மசாலாத்தூள், அப்பச்சோடா, கறிவேப்பிலை சேர்த்து இறுக்கமாகப் பிசையவும். அவை ஓரளவு கெட்டியானதும், வாணலியில் தேங்காய் எண்ணெய் விட்டு கொதித்ததும், சிறிது சிறிதாக வாணலியில் போடவும். இறால் பக்கோடா தயார். இது சாதாரண பக்கோடாவை விட ருசி மிக்கதாக இருக்கும்.

சமைப்போம் சுவைப்போம்
தொகுத்துத் தருவது-சுகந்தினி


பரிசுக் கூப்பன்
மகளிர் மட்டும்
இல 23

மகளிர் மட்டும்
-பரிசுப் போட்டி-

முதல் அதிஷ்டசாலிக்கு
தங்கநகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.


# கண்ணுக்குக் கீழே கருவளையமா?

## கவலையே வேண்டாம்-இதோ யோசனைகள்!

அழகாக இருப்பார்கள்; ஆனால் கண்ணுக்கு அடியில் கருவளையங்கள் உண்டாகி முக அழகையே கெடுக்கும். நிறமாக இருப்பவர்களுக்குக் கேட்கவே வேண்டாம். இப்படிப்பட்டவர்களின் மனக்குறையைப் போக்க வேண்டாமா?

நீண்ட நேரம் கண்விழித்துப்படித்தல், தூக்கமின்மை, குறைந்த வெளிச்சத்தில் படித்தல், காற்று வசதி இல்லாத மூடிய அறையில் தூங்குதல் போன்ற காரணங்களால் கண்களில் கருவளையங்கள் தோன்றும்.

இதை நீக்க நீங்கள் செய்ய வேண்டியவை இதோ...



* இரவில் படுக்கும் போது பால் குடியுங்கள். இது தூக்கத்தைத் தூண்டும். இது உடலுக்கும் நல்லது.

* வெள்ளரிப் பிஞ்சை வளையம் வளையமாக நறுக்கி கண்களின் மீது வைத்துக் கொள்ளுங்கள்.

* இதோ இன்னுமொரு எளிமையான முறை இருக்கின்றது. சிறிய உருளைக் கிழங்கை எடுத்து, துண்டு துண்டாக நறுக்கி, நன்றாக அரைத்து அதை பசை போல் கருவளையத்தில் போட்டுக் கொள்ளுங்கள். ஒரு வாரத்திலேயே நல்ல பலன் தெரியும்.

# உங்கள் குழந்தை ஆரோக்கியமாய் வளர....

* குழந்தை பிறந்தது முதல் ஒரு வயது வரை ஒவ்வொரு மாதமும் எடை பார்க்க வேண்டும். இரண்டாவது மூன்றாவது வயதில் ஒரு மாதம் விட்டு மறு மாதமாவது எடை பார்க்க வேண்டும். தொடர்ந்து இரண்டு மாதங்கள் எடை அதிகரிக்காமலிருந்தால் அக்குழந்தைக்கு ஏதாவது கோளாறு இருக்கிறது என்று பொருள்.

* முதல் நான்கு முதல் ஆறு மாதங்கள் வரை குழந்தைக்குத் தாய்ப்பால் தான் சிறந்த உணவு. எனவே, தாய்ப்பாலைத் தாராளமாகக் கொடுங்கள்.

* நான்கைந்து மாதங்களுக்குப் பிறகு தாய்ப்பாலோடு துணை உணவுகளும் தரலாம்.

* மூன்று வயதாகும்வரை, ஒரு நாளைக்கு ஐந்தாறு முறை உணவு வழங்குங்கள்.



* மூன்று வயது வரை எப்போதும் கொடுக்கும் உணவோடு சிறிதளவு கொழுப்பு, நெய் ஆகியவற்றைத் தரலாம். எண்ணெயில் செய்யப்பட்ட உணவு தரலாம்.

* விட்டமின் 'ஏ' நிறைந்துள்ள உணவுகளைத் தவறாது அளிக்க வேண்டும்.

* குழந்தை நோய்வாய்ப்பட்டால், சத்து அதிகமான உணவு வழங்கி ஈடுசெய்ய வேண்டும்.

* குழந்தைக்கு உணவு மட்டுமே போதாது. கொஞ்சுதல், உரையாடுதல், விளையாடுதல் போன்ற செயல்களால் வெளிப்படுத்தப்படும் உங்கள் அரவணைப்பும் தேவை; மனவளர்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் அது பெரிதும் தேவை. எனவே, குழந்தை மீது பாசமழை பொழியுங்கள்.

# தாய்மையடைந்தோர் அறிய வேண்டியவை!

• கர்ப்ப காலத்தில் தவறாது, முறையாக உடற் பரிசோதனை செய்து கொள்ளுங்கள். உங்கள் அருகிலுள்ள சுகாதாரப் பணியாளர் உதவியை நாடுங்கள். பிரசவத்தின் போது ஏற்படும் பிரச்சனைகள் குறையும்; அபாயங்கள் அகலும்.

• பிரசவத்தின்போது பயிற்சி பெற்ற நலப் பணியாளரையே நாடுங்கள், பயிற்சி பெற்றோரிடமே பிரசவம் பார்த்துக் கொள்ளுங்கள்.

• கர்ப்ப காலத்திலும், பிரசவத்தின் போதும், ஏற்படும் ஆபத்துக்களைக் குறைக்க, எல்லாக் குடும்பங்களும் எச்சரிக்கை அறிகுறிகளை அறிந்துகொள்ள வேண்டும்.



• கர்ப்பகாலத்தில், வழக்கத்தைவிடக் கூடுதல் உணவு தேவைப்படும். கருவுற்ற பெண்கள் போதிய ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும்.

• மகப்பேற்றின்போது ஏற்படும் பிரச்சனைகளைத் தவிர்க்க 18 வயதுக்கு முன்னும் 35 வயதுக்குப் பின்பும் கர்ப்பமடைவதைத் தவிர்த்து விடுங்கள்.

• ஒரு பிரசவத்திற்கும் அடுத்த பிரசவத்திற்கும் இடையே குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது இடைவெளி விடுங்கள். ●

# அழகி தயார்!

1995ம் ஆண்டுக்கான உலக அழகிப் போட்டியில் இந்தியா சார்பில் களத்தில் குதித்தவர் மன்பிரீத் பிரார்.

2வது உலக அழகியாகத் தான் தெரிவு செய்யப்பட்டார்.

சுஷ்மிதா சென், ஐஸ்வர்யா ராய் போன்றோர்களோடு ஒப்பிடும்போது மன்பிரீத் பிரார் பிரகாசமாகத் தெரியவில்லை. ஆனாலும் எப்படியோ 2வது இடத்தை கெட்டியாகப் பிடித்துவிட்டார். அது எப்படி? தனது தன்னம்பிக்கையே வெற்றியின் இரகசியம் என்று சொல்கிறார் மன்பீரீத் பிரார். கடந்த வருடம் இவரை யாரும் கணக்கில் எடுக்கவில்லை. இந்த வருடம் சாதித்துக்காட்டியே தீருவது என்று மனதுக்குள் ஒரு பந்தயம் வைத்து ஜெயித்துவிட்டார்.

சென்ற வருட உலக அழகி சுஷ்மிதா, சினிமாவில் நடித்து இரசிக நடுவர்களின் ஆதரவை கோரப்போகிறார்-(சினிமாவில் நிலைக்க) மன்பிரீத் இப்போதே நடிக்கத் தயார் என்று அறைகூவியிருக்கிறார். யாரும் இதுவரை அதைச் செவியில் வாங்கியதாகத் தெரியவில்லை. சினிமா இல்லாவிட்டாலும் மொடலிங் செய்து சம்பாதிக்கலாம் என்ற நம்பிக்கையில் இருக்கிறார். ஆக, எப்படியோ பிழைத்துக்கொள்வார்-அழகியா, கொக்கா?



## இவர்கள்தான் - அந்த அதிஷ்டசாலிகள்

'முரசின் பரிசு' போட்டியில் வெற்றி பெற்றவர்களில் தமது புகைப்படங்களை அனுப்பிவைத்தவர்கள் இவர்கள்:



திருமதி சந்திராணி டானியல், முகத்துவாரம்.



எம். ஆர். எஸ். றுமைஸா குருநாகல்.



செல்வி. டி. ஜெயராணி டானியல், ஹட்டன்.



செல்வி. இர்பானா காலிடீன், ஏறாவூர்-02.



செல்வி. அன்னி செபநாயகம், பதுளை

## சமையல் டிப்ஸ்

சமையல் காரத்திற்கு மிளகாய்த் தூளை உபயோகிப்பதற்குப் பதில் மிளகுத்தூளை உபயோகப்படுத்தினால் உடம்புக்கு மிகவும் நல்லது.

மிளகுத்தூள் உடம்பு வலியைப் போக்குவதுடன் ஜீரணத்திற்கும் உதவும்.


மகளிருக்கு மற்றொரு வாய்ப்பு!



தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்
இணைந்து வழங்கும்
தங்க நகைப் பரிசுப் போட்டி.
விரைவில் ஆரம்பம்
அடுத்த போட்டிக்கு இப்போதே ரெடியா நீங்கள்?




படிப்பகம்

www.padippakam.com

# தேன் கிண்ணம்



## எனக்குத் தெரியுமடி!

நீ அழுவாய்;
கதறுவாய்;
ஓடிப்போய்க்
கட்டிலில் விழுந்து
விடியும்வரை
கண்ணீர் வடிப்பாய்.
பொழுது புலர்ந்ததும்
பல்துலக்காது
தலைவிரிகோலமாய்
எதிர்ப்பைக் காட்டுவாய்.
நாள் முழுக்கப்
பட்டினி கிடப்பாய்,
"காதலனைத்தவிர
யாரையும்
திருமணம் செய்ய
மாட்டேன்" என்று
சபதம் செய்வாய்...!
நாளிகை செல்லும்;
அம்மா வருவாள்;
உன் கூந்தலை
வருடுவாள்;
கன்னத்தைத் தடவுவாள்,
நெற்றியில் முத்தம் பதித்து
"எல்லாம் உன்
நன்மைக்குத்தான்" என்பாள்.
உனக்கு மீண்டும்
அழுகை வரும்!
கண்ணீர் தீரும்வரை
அழுவாய்....பின்பு
கரகரத்தகுரலில்
"உங்கள் விருப்பப்படியே
செய்யுங்கள்" என்பாய்.
கழுத்து ஒன்றாய் இருக்க
முடிச்சுப் போடும்
விரல்கள் மட்டும்
மாறிப்போகும்....!
எப்போதோ நடக்கப்போகும்
இவையெல்லாம்
எப்போதோ
எனக்குத் தெரியுமடி!
காரணம்–
நானும் நிறையத்
தமிழ்ச் சினிமா
பார்ப்பவன்தான்!!

எம்.சுரேஷ்.



## தரிசன நிஜம்

காற்று....
மனித மூச்சைச்
சுமந்து சுமந்து
களைத்துப் போகின்றது...

பூமி....
சிகப்பு ஆற்றுக்குள் சிக்கி
புதையப் பார்க்கின்றது....

## கறுப்புக்கவிதை

இடைவெளிகள்
கனத்துவிட்டன
உன் கனவுகளுக்குள்
என் ஞாபகப் புறாக்கள்
ஒடிந்து கிடக்கலாம்

தேசத்தின் மூலையொன்றில்
உன்னை நினைத்தே
அழுது கொள்ளும்
இந்த கறுப்புக் கவிதை.

நிலா வெளிச்சத்தில்
உன் கையெழுத்தின் அழகை
வெறித்துக் கிடக்கும்
என் ஈரவிழிகள்.

நீண்டதொரு மௌனம்...!
காற்றின் திசையில்
உன் செருமல் ஒலியும்
மதுரக் குரலும்
எகிறி வந்து என்னைக் கொல்லும்.

தினமும் விடியலில்
உன்னுடன் விழித்து
உன்னுடன் கலந்து
உன்னுடனே உறங்கிப் போகிறேன்.

எனக்குத் தெரியும்......!
உன் மனசின் இறுக்கமும்
ஒரு நாள் உடையும்!
அப்போதுநான்
உன் நினைவுகள் அரித்தே
இறந்துவிட்டிருப்பேன்
நீ வாழ்ந்துகொண்டிருக்கலாம்–
எவருடனாவது.

கன்ஸியா.

## உனக்காக.....!

நீ
வரும்வரை
உன்
விழிகளில்
என்
விழிகளை
பெயர்த்துவைப்பேன்!
நீ
பவனிவரும்
பாதைகளில்
உன்
பாதங்களின்
மென்மைக்கு
என்
இதயத்தை
தகர்த்துவைப்பேன்!
உன்
புன்னகை
மொட்டுகள்
விரியும்வரை
பூக்களை
சிறையில்வைப்பேன்!
உன்
விழிகள்
கவிதைகள்
எழுதும்வரை
கவிஞர்கள்
இல்லையென்பேன்!

ஹெந்தளை நவர்



## மலைகள்

பூமாதேவியின்
திரட்சியான..
முலைகள்!

அருவியை(ப்)
பெற்றெடுக்கும்
அமுத சுரபிகள்!

இயற்கை
அழகின்
ஆட்சிபீடங்கள்!

தென்றல்
தவழ்ந்து..
முத்தமிடும்
முகங்கள்!

விரையும்
மேக..
வாகனங்களின்
தரிப்பிடங்கள்!

விண்ணோடு..
மோத
தயாராகவிருக்கும்
ஏவுகணைகள்!

நிலயினத்து(க்)
குழி, குன்று,
பள்ளம் போன்றோரின்
உயர்ந்தவர்கள்!

பாலைவனத்தில்
பார்க்க முடியாத
பச்சை நிற..
ஒட்டகங்கள்!

தேச....
வருமானத்து
உண்டியல்கள்!

கோயில்களின்
குடியிருப்புகள்!

உயர்ந்தால்
சிகரம்!
தாழ்ந்தால்
குன்று!
குமுறினால்
எரிமலை!



சோ.ஸ்ரீதரன்–பொகவந்தலாவை.

## "என்னோடு வா மனிதா"

எண்பத்திமூன்றிலும்
எண்பத்தைந்திலும்
தொண்ணூறிலும்
எல்லாவற்றையும் இழந்தோம்!
இனி இழப்பதற்கு ஒன்றுமில்லை,
உயிரைத் தவிர...!

▫▫▫

சமாதானம் என்றதும்
சந்தோசப்பட்டோம்!
அதன் கால்கள் முறிந்தபோது
மீண்டும்
எங்கள் உதடுகள்
ஒப்பாரிகளை உச்சரிக்கின்றன...!

▫▫▫

இராத்திரிகளில்
பயமின்றி நடமாடிய கால்கள்
இப்போதெல்லாம் ஆறுமணியாவதற்குள்
முற்றத்து மண்ணை முத்தமிட்டுக்
கால் தட்டிக்கொள்கிறது....!

▫▫▫

மனிதா...!
உனக்கும் எனக்கும் பகையில்லையே...?
எதற்காக இத்தனை ஏற்பாடுகள்...?
என்னோடு புறப்பட்டு வா மனிதா,
நடு ராத்திரிகளிலும், நண்பகலிலும்
கைகோர்த்து வீதியில் நடப்போம்!
இதைப் பார்த்தாவது
இத் தேசம் நாம்
பகையில்லாத மனிதர்கள் என்பதைப்
புரிந்துகொள்ளட்டும்!

காரைதீவு எஸ்.நாகராஜன்.

## அலுத்துப் போய் விட்டது!

ஒவ்வொரு நாளும்
பயத்தோடு படுப்பதும்
பயத்தோடு எழும்புவதும்
அலுத்துப் போய் விட்டது....!

•••

தினமும் விடிந்ததும்
பயத்தை போக்காட்ட
ஐ.சி. பார்ப்பதும்
அலுத்துப் போய்விட்டது...!

•••

இரவு பகலாக
தெருக் கதவைப்
பூட்டி வைத்தாலும்
சொந்தக் காரர்
போல் வந்து
எம்மை கூட்டிச்
சென்று
கூண்டினில் போடுவதும்
கூண்டில் கிடந்தும்
அலுத்துப் போய்விட்டது!

•••

உண்பதற்கு உணவு
வேண்டுமே!
வெளியே செல்லவும்
மூச்சடைக்கின்றது....!

•••

கட்டிடத்தில் கதிரை
தொம் என்று போட்டாலும்
எதிர் வீட்டு
ப்ரியா
யன்னல் கதவை
அடித்து மூடினாலும்
வெடிச்சத்தம் என்று
உடம்பெல்லாம்
நடுங்கி நடுங்கி
அலுத்துப் போய் விட்டது!

யாழ் ஈஸ்வரன்.

உலக சனத்தொகையில்
அகதிகளின் எண்ணிக்கை தான்
அதிகரித்துப் போகின்றது.
வெண் புறாக்கள்...
வேட்டுச் சத்தத்தில்
வெவ்வேறு திசைகளில்
பறக்கின்றன...

பனை மரத் தோப்புக்குள்
பறவைகளின் ஒப்பாரி
செவிப் பறைக்குள் விறைத்துப்
போகின்றது....!

கோயில்களில் மனித
உடல்களில் யாகம்
நடக்கின்றது....
ஆகுதி அங்கு ஆயிரமாயிரம்
அர்ப்பணம்
நெய் நிறம் மாற
அக்கினி உயிர் பெறும்!
குழந்தை பேசும் தெய்வம்!

தெய்வத்தின் சந்நிதியில்
பேசும் தெய்வங்கள்
மோட்சமடைகின்றன.

ஜெயந்தி ஜெய்சங்கர்–கொழும்பு-13.

## நிகழ்கால ஏக்கம்

இருளில் நிற்கின்றோம்
இன்னும் விடியவில்லை!
உடன் பிறப்பைக் காணவில்லை
உணர்விழந்து துடிக்கின்றோம்!

▫▫

பிணங்களில் நடக்கின்றோம்
பிரிப்புகள் ஓயவில்லை!
நிகழ்வுகள் புரியவில்லை
நிம்மதி நீங்கினோம்!

▫▫

சரித்திரம் இழந்தோம்
சண்டைக்கு முடிவில்லை!
ஏவும் திசையில் அம்பைப்போல்
ஏங்கி நிற்கின்றோம்!

▫▫

வழி தேடி ஓடுகின்றோம்
விழி மூட நேரமில்லை!
சமாதானத்தைக் காணவில்லை
சக்தியிழந்து முடங்கினோம்!

▫▫

எரிந்துபோன எங்கள்
வாழ்வு எப்போ மாறும்?
பிரிந்து போன பந்தங்கள்
எப்போ ஒன்று சேரும்?

–ஆரையம்பதி மனோ–







# இந்த வாரம் உங்கள் பலன்

(30.07.95 முதல் 05.08.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

கர்க்கடகம் - சூரியன், வெள்ளி
சிம்மம் - புதன்
கன்னி - செவ்வாய்
துலாம் - இராகு
விருட்சிகம் - வியாழன்
கும்பம் - சனி
மேடம் - கேது

சந்திரன்–சிம்மம், கன்னி துலாம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு-தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணவரவு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- காரிய சித்தி, உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- தொழில் மந்தம், கடன் படல். | காலை 7 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 8 மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| சனி- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்-பொருள்வரவு, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- காரிய சித்தி, உயர்ந்த எண்ணம். | காலை 7 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வெள்ளி- அந்நியர் நட்பு, அரச விரோதம். | காலை 7 மணி |
| சனி- காரியக் கேடு, மனக்கவலை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-9

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணத்தடை. | காலை 6 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | காலை 9 மணி |
| வெள்ளி- பணவரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |
| புதன்- இனசன விரோதம், மனக்கவலை நீங்கும். | காலை 7 மணி |
| வியாழன்- துயர் அதிகம், காரியானுகூலம். | காலை 9 மணி |
| வெள்ளி- உயர்ந்த எண்ணம், பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| சனி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்-வீண் குறை கேட்டல், மனக்கவலை. | காலை 7 மணி |
| புதன்- புதிய முயற்சி, பணச்செலவு. | காலை 9 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, முன்னேற்றம். | பகல் 11 மணி |
| வெள்ளி-தொழில் விருத்தி, பணச் செலவு. | காலை 7 மணி |
| சனி- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள் செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | காலை 9 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், வெளியிட வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- வீண்மனஸ்தாபம், உறவினர் பகை. | காலை 7 மணி |
| வெள்ளி- தொழில் நிலை கஷ்டம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- இடமாற்றம், பண இழப்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணவரவு, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| செவ்வாய்-தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| புதன்- காரிய சித்தி, கௌரவம். | பகல் 11 மணி |
| வியாழன்-வெளியிடப் பயணம், உயர்ந்த எண்ணம். | காலை 6 மணி |
| வெள்ளி-புதிய முயற்சி, மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| சனி- பணச்செலவு, உறவினர் உதவி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -1

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, பயனுள்ள செயல். | காலை 7 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்-பணவரவு, காரியானுகூலம். | காலை 9 மணி |
| புதன்- பொருள் வரவு, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், கௌரவம். | காலை 7 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, பணச்செலவு. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | காலை 6 மணி |
| செவ்வாய்- துயர்அதிகம், மனப்பயம். | பகல் 12 மணி |
| புதன்- வீண் முயற்சி, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி-காரிய சித்தி, தொழில் சிறப்பு. | பி.ப. 2 மணி |
| சனி- மனக்கலக்கம், பணச்செலவு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, உறவினர் உதவி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, கௌரவம். | பி.ப. 1 மணி |
| புதன்- பயனற்ற செயல், அந்நியர் உதவி. | காலை 9 மணி |
| வியாழன்- பணச் செலவு, கடன் படல். | பகல் 12 மணி |
| வெள்ளி- முயற்சி மேன்மை, பணவரவு. | காலை 7 மணி |
| சனி- துயர் நீங்கும், பெரியோர் உதவி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணச் செலவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 9 மணி |
| புதன்- முன்னேற்றம், செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், மனக்கவலை. | பகல் 12 மணி |
| சனி- உறவினர் உதவி, துயர் நீங்கும். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 5

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், முயற்சி மேன்மை. | காலை 9 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்-தொழில் சிறப்பு, முயற்சி வெற்றி. | காலை 9 மணி |
| புதன்- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வியாழன்- மனக்கவலை, உறவினரால் கஷ்டம். | காலை 7 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| சனி- பயனற்ற செயல், கௌரவக் கேடு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7



படிப்பகம்





## என்னை விட்டுப் போகாதே!

பச்சை பச்சைக் கிளியக்கா
பக்கம் வந்து மொழியக்கா
உச்சி மரத்துக் கனிகொத்தி
ஒயிலாய்த் தின்னும் கிளியக்கா.

கழுத்தைச் சுற்றி அணிந்திருக்கும்
கவினுறு மாலை ஏதக்கா?
பழுத்த கோவைக் கனிநிறத்தில்
பார்க்க அழகாய் மின்னுதக்கா!

சிவப்பு நிறத்தில் அலகக்கா
செம்மை கூட்டும் அழகக்கா
உவப்பாய்க் கேட்பேன் கதையக்கா
ஓயாதெனக்கு சொல்லக்கா.

உன்னைப் பிரிய மனமில்லை
உற்ற தங்கை அழைக்கின்றேன்
என்னை விட்டுப்போகாதே
இனிய கனிகள் நான் தருவேன்!

**வி.லலிதா.**

சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடி!- கிளியே!
செம்மை மறந்தாரடி!

-சுப்பிரமணிய பாரதியார்-

### பாப்பா முரசு சிறு கதை

# மூட நம்பிக்கை



**ஓ**ர் ஊரில் தம்பிராசா என்ற விவசாயி வசித்தார். அவர் ஒரு நாள் அடுத்த ஊரில் தனது உறவினர் வீட்டில் நடக்கும் திருமணத்தில் கலந்து கொள்ளுவதற்காகக் குடும்பத்துடன் புறப்பட்டார்.

வீட்டைப்பூட்டி விட்டு, அவர்கள் வெளியேறும்போது, ஒற்றைக்கண் பூனை ஒன்று குறுக்கே வேகமாக ஓடியது.

இதைக்கண்ட தங்கராசா, "ஐய்யோ! பூனை குறுக்கே ஓடுகிறதே! சகுனம் சரியில்லை. மீறி நாம் போனால், நமது குடும்பத்தில் ஏதாவது அசம்பாவிதம் நடக்கும். அதனால் கல்யாணத்திற்கு யாரும் போக வேண்டாம்." என்றார்.

"ஆமாம், ஆமாம் சகுனத்தை மீறிப்போனால் அதனால் ஏதாவது ஆகிவிடும். எனவே நாங்கள் கல்யாணத்திற்குப் போகாமல் இருப்பதுதான் நல்லது" என்றாள் தங்கராசாவின் மனைவி கண்மணி.

உடன் இருந்த மற்றவர்களும் அவர்கள் பக்கம் சேர திருமணத்திற்குச் செல்வது உடன் நிறுத்தப்பட்டது.

இதைக் கண்ட அகிலனுக்கு எரிச்சலும், கோபமும் வந்தன. அகிலன், தங்கராசா-கண்மணி தம்பதியினரின் மகன். பத்தாம் வகுப்பில் படிக்கும் மாணவன்.

"அப்பா பூனை குறுக்கே போவதற்கும், நாங்கள் கல்யாணத்திற்குப் போவதை நிறுத்துவதற்கும் என்ன சம்பந்தம்?" என்று தந்தையைப் பார்த்துக் கேட்டான் அகிலன்.

"அதுதான் சொன்னேனே சகுனம் சரியில்லை என்று; நாம் ஒரு காரியத்துக்குச் செல்லும் போது பூனை குறுக்கே போனால், நாம் போவதை நிறுத்திவிட வேண்டும்." என்றார் தங்கராசா.

"நிறுத்தாவிட்டால்....?" என்று கேட்டான் அகிலன்.

"ஏதாவது கஷ்டங்கள், தடங்கல்கள் வரும்" என்றார் தங்கராசா.

"அப்படியானால் நமக்குக் கஷ்டங்கள், தடங்கல்கள் வரப்போவது, நமக்குத் தெரியாமல் பூனைக்குத் தெரிந்திருக்கிறது இல்லையா?" என்று கேட்டான் அகிலன்.

"ஆமாம் அதற்கு என்ன வாயா இருக்கிறது போகவேண்டாம் என்று சொல்ல? அதனால்தான் குறுக்கே ஓடுகிறது. அது குறுக்கே ஓடினால் நாம் பிரயாணத்தை நிறுத்திவிட வேண்டும்" என்றார் தங்கராசா.

"அப்பா! நீங்கள் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஒரு மனுஷனுக்கு கஷ்டம் வருகிற விஷயம், முன்னதாகவே இந்தப் பூனைக்குத் தெரிகிறது என்றால், தனது ஒரு கண்ணை இழக்கும் விஷயம் ஏன் அதற்கு முன்னாலேயே தெரியாமல் போய்விட்டது? தெரிந்திருந்தால் அந்தக் கண்ணைக் காப்பாற்ற முயற்சி எடுத்திருக்குமே! இப்படி ஒற்றைக்கண் பூனையாக அலைய வேண்டியதில்லையே!" என்று சூடாகப் பேசினான் அகிலன்.

தங்கராசா அப்போதுதான் யோசித்தார்.

"அந்தப் பூனைக்கு என்ன அவசரமோ? ஏதாவது எலியைப் பார்த்துவிட்டு அவசரமாகக் குறுக்கே ஓடும். அல்லது ஏதாவது எதிரிக்குப் பயந்து கொண்டு இப்படிக் குறுக்கே ஓடும். இந்தச் செயலை மனுஷ வாழ்க்கையில் சம்பந்தப்படுத்தி பாமர மக்களாகவே இன்னும் இருக்கிறீர்களே. இந்த மூடநம்பிக்கையும் முட்டாள்தனத்தையும் விட்டுவிட்டு நீங்கள் எப்போதுதான் கண்ணைத் திறந்து இந்த வெளிஉலகத்தைப் பார்க்கப் போகிறீர்களோ?" என்று மேலும் சூடு கொடுத்தான் அகிலன்.

தங்கராசாவும், மற்றவர்களும் தலை குனிந்தனர்.

"அகிலன் சொல்வது சரிதான். பூனையாவது, சகுனமாவது எல்லாரும் புறப்படுங்க. கல்யாண வீட்டிற்கு நேரமாகிக் கொண்டே இருக்கிறது" என்று தெளிவான குரலில் சொன்னார் தங்கராசா.

அவர்களின் மனமாற்றத்தைக்கண்டு அகிலன் மகிழ்ந்தான்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 05.08.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 101
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 98

பரிசுக்குரியவர்:
[illegible]
[illegible]

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| மொஹமட் இர்ஷாத் ஆப்தீன்<br>விஜயநாயகவத்தை, கண்டி. | எஸ்.ஏ.எஸ். முஹம்மத் சியாம்<br>தர்கா நகர். |
| ஜே.சன்ஜீவ்<br>ஹட்டன். | பாத்திமா சானாஸ் வபா<br>முஸ்லிம் வித்தியாலயம், நாங்கல்ல. |
| எம்.சபரிச்செல்வி<br>கொழும்பு-13. | ந. சசிமாதுரி<br>உ/த.ம. வித்தியாலயம், உடப்பு. |
| ஏ.எச். ஹாரிஷ்<br>நஸ்றியா மகா வித்தியாலயம், சிலாபம். | பி.எம்.அக்ரம்<br>நயவல, மாவனல்ல. |
| ஏ.மாஹூான் எஸ் நியாஸ்<br>பு/சாஹிறா தேசிய கல்லூரி, புத்தளம். | |

## வாரம் ஒரு நாடு


### டொமினிகன் குடியரசு

**தலைநகர்:** சாந்தோ டொமிங்கோ
**பரப்பளவு:** 48,422 சதுரகிலோ மீற்றர்
**மக்கள் தொகை:** 76,00,000
**மொழி:** ஸ்பானிஷ்
**எழுத்தறிவு:** 83%
**சமயம்:** கிறிஸ்தவம்
**தனிநபர் வருமானம்:** 950 டொலர்கள்.
**அமைவிடம்:** கரீபியன் கடலில் அமைந்துள்ளது. ஹிஸ்பேனிய தீவின் கிழக்கில் மூன்றில் இரண்டு பகுதியைக் கொண்டுள்ளது. இதன் மேற்கில் ஹைதி, கியூபா, ஜமேய்க்கா எல்லைகளாக அமைந்துள்ளன.
**வரலாறு:** 1492ல் கொலம்பஸ் இதைக் கண்டுபிடித்தார். தொடக்க காலத்தில் இது ஸான்டோ டோமிங்கோ என்றழைக்கப்பட்டது. 1849இல் ஸ்பெயினிடம் இருந்து சுந்திரம் பெற்றது. அதிபர் நேரடியாக மக்கள் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.



**பொருளாதாரம்:** சீனி உற்பத்தி முக்கிய தொழில் ஆகும். விவசாயம் வளர்ந்து வருகின்றது.

## யானையின் விசிறி



**யா**னையின் உடலில் வியர்வைச் சுரப்பிகள் இல்லை. அதனால் அதற்கு வியர்க்காது. ஆகவே, அவற்றின் உடற் சூட்டைத் தணிக்க யானைகள் தம் உடலில் நிறைய நீரை வீசிக்கொள்ளும்; சேற்றைப் பூசிக் கொள்ளும்; தமது பெரிய காதுகளை வைத்து விசிறி, உடல் வெப்பத்தைத் தணிக்கும். அதனால்தான் யானைகள் அடிக்கடி குளிக்கும்; காதுகளை வீசிக் கொண்டே இருக்கும்.

குளிர்ந்த, நிழல் தரும் மரங்களை உடைய காடுகளில் வாழும் யானையின் காதுகள் அளவில் சிறியவைகளாக இருக்கும். வெப்பமான, சிறு புதர்கள் உள்ள காடுகளில் வாழும் யானைகளின் காதுகள் பெரியதாக இருக்கும். ஆபிரிக்க யானைகளின் காதுகள்தான் மிகப்பெரியவை. இவற்றின் நீளம் 2 மீற்றர் வரை இருக்கும்.

## மனக்கணக்கு

மூன்று பிள்ளையார் கோவில்கள். அதன் முன் மூன்று அதிசய தெப்பக் குளங்கள். அக்குளத்தில் ஒரு பூ எடுத்து நனைத்தால் இரட்டிப்பாகும். அதன்படி பூசாரி, கொஞ்சப் பூக்கள் பறித்து எடுத்தார். அப்பூக்களைக் குளத்தில் நனைத்தார். பூக்கள் இரட்டிப்பானது. அதில் கொஞ்சப் பூக்களை முதல் பிள்ளையாருக்குப் போட்டார். மீதியிருந்த பூக்களை இரண்டாம் குளத்தில் நனைத்தார். பூக்கள் இரட்டிப்பானதும், முதல் பிள்ளையாருக்குப் போட்ட அதே எண்ணிக்கை பூக்களை இரண்டாம் பிள்ளையாருக்கும் போட்டார். அதில் மீதிப் பூக்களை மூன்றாம் குளத்தில் நனைத்தார். இப்போது அவர் கையில் முதல் இரண்டு பிள்ளையார்களுக்குப் போட்ட அதே எண்ணிக்கைப் பூக்கள் இருந்தன. இதை அப்படியே மூன்றாம் பிள்ளையாருக்குப் போட்டார்.

அப்படியானால் அவர் பறித்த பூக்கள் எத்தனை? ஒவ்வொரு பிள்ளையாருக்கும் போட்ட பூக்கள் எத்தனை-

விடை

பறித்த பூக்கள்-ஏழு

ஒவ்வொரு பிள்ளையாருக்கும் போட்ட பூக்கள்-எட்டு.



## விடுகதைகளும் விடைகளும்!

01. இந்த ஊரில் அடிபட்டவன் அடுத்த ஊரில் போய்ச் சொல்வான்- அவன் யார்?
02. இரவும் பகலும் ஓய்வில்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை- அது எது?
03. உலகமெல்லாம் படுக்கை விரித்து உறங்காமல் அலைகிறான்- யார் அவன்?
04. உள்ளே இருந்தால் ஓடித்திரியும், வெளியே வந்தால் விரைவில் மடியும்- அது என்ன?
05. ஓடையிலே ஓடாத நீர், ஒருவருமே குடிக்காத நீர்- அது என்ன?

விடைகள்

01. தந்தி 02. இதயம் 03. காற்று 04. மீன்
05. கண்ணீர்.

## உலகில் பெரியவை எவை?

01. பெரிய சமுத்திரம் எது?
02. பெரிய கடல் எது?
03. பெரிய டெல்டா எது?
04. பெரிய ஏரி எது?
05. பெரிய நூலகம் எது?
06. பெரிய கோபுரம் எங்குள்ளது?
07. பெரிய குளிர் பாலைவனம் எது?
08. பெரிய விமான நிலையம் எங்குள்ளது?
09. பெரிய வங்கி எது?

விடைகள்

01. பசுபிக் சமுத்திரம்
02. தென் சீனக் கடல்
03. கங்கை டெல்டா
04. கஸ்பியன் கடல்
05. ரஷ்யா
06. சி.என். கோபுரம் (கனடா)
07. கோபி பாலைவனம்
08. ரியாட் (சவுதி அரேபியா)
09. உலகவங்கி

**வி.அம்பிகா**

3

ஹோட்டல் சூர்யா.
கீழ்த்தள பார்.

ஜானிவாக்கர் விஸ்கி பாட்டிலை கொஞ்சம் கொஞ்சமாய் காலிசெய்து வயிற்றுக்குள் இறக்கிக்கொண்டிருந்தான் தினகர். மேஜையின் மேல் மினக்குத்தாளில் வறுபட்ட சிக்கன் பீங்கான் தட்டில் உட்கார்ந்திருந்தது.

ஹோட்டல் பார் பூராவும் ஒரு கள்ளத்தனம் பரவியிருக்க, வெயிட்டர்கள் சத்தமில்லாமல் பூனை நடை போட்டு பரிமாறினார்கள்.

தினகர் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு வாசல் பக்கமாய் அடிக்கடி திரும்பிப் பார்த்து புகை விட்டான். அவனுடைய போதையான கண்களில் ஒரு கவலையும் உட்கார்ந்திருந்தது.

தினகர் ஒரு ராஜா வீட்டு கன்னுக்குட்டி.. அப்பா-லாபத்தில் ஓடும் ஒரு மில்லுக்குச் சொந்தக்காரர். பைசா பைசாவாய் சேர்த்து முன்னுக்கு வந்தவர். அதனால் செலவு செய்வதில் தயக்கம் காட்டினார். தினகரின் பாக்கெட்மணிக்கு 'ரேஷன்' வைத்து அமல் படுத்தி வந்தார். ப்ளஸ்டு படிக்கிற காலத்திலேயே தினகர் கோல்கொண்டா விஸ்கியை ருசி பார்த்தவன்....பி.எஸ்.சி. படிக்கிற வயசில் சும்மாயிருப்பானா..? ஃபாரின் சரக்குக்காக பாருக்கே வர ஆரம்பித்தான். பட்ஜெட் கழுதையாய் மாறி பாக்கெட்டை உதைத்தது.

"ஸாரிடா தினகர்....ஒர்க்ஷாப்பை விட்டு கிளம்பறப்ப ஒரு பார்ட்டி வந்துட்டான்...அட்டெண்ட் பண்ணிட்டு வர நேரமாயிடுச்சு....."

சொல்லிக்கொண்டே தினகரை நெருங்கிய இளைஞனுக்கு முப்பது வயது இருக்கலாம்.... விஜய்காந்த் நிறம். முகத்தில் ஒரு முரட்டுத்தனம் உறைந்திருந்தது. மீசையை கிருதா வரைக்கும் வளர்த்திருந்தான்.

# ஒரு நிமிச நிசப்தம்

## ராஜேஷ்குமார்

## கிரைம் சக்கரவர்த்தி



"வாடா...மோகன்...! நீ...என்னிக்குத்தான் நான் சொன்ன நேரத்துக்கு வந்திருக்கே....உட்கார்...."

மோகன் எதிரேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான். தினகர் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் இட்டு நசுக்கிக் கொண்டே கேட்டான்....

"என்னடா...டம்ளர் கொண்டுவரச் சொல்லட்டுமா....? சாப்ட்றியா?"

"வேண்டாம்...."

"ஏண்டா...?"

"சாப்டுட்டு வீட்டுக்குப் போனா சரோஜா கோபிச்சுக்கிட்டு அம்மா வீட்டுக்கு கிளம்பிப் போயிடறா...ஒரு வாரத்துக்கு முன்னாடிதான் இனிமே குடிக்க மாட்டேன்னு சத்தியம் பண்ணி குடுத்தேன்...."

"பொண்டாட்டியைப் பார்த்து ஏண்டா பயப்படுறே....?"

"அப்படியே பழகிப் போச்சு..."

தலையில் அடித்துக்கொண்டான் தினகர். மோகன் நாற்காலியின் நுனி சீட்டுக்கு நகர்த்தி, முழங்கைகளை டேபிளின் மேல் ஊன்றிக் கொண்டு தினகரைப் பார்த்துக் கேட்டான்:

"அவசரமா வரச் சொன்னியே...என்னடா விஷயம்....?"

ஸ்காட்ச்சின் பொன் திரவத்தை கண்ணாடி டம்ளரில் வார்த்துக்கொண்டே தினகர் அவனை ஏறிட்டான்.

"உன்னோட உதவி எனக்கு வேணும்....."

"மொதல்ல விஷயத்தைச் சொல்லுடா....."

"உன்னோட ஒர்க்ஷாப்பை எக்ஸ்டெண்ட் பண்ணி சர்வீஸ் ஸ்டேஷன் கட்டப்போறதா சொன்னியே... அந்தப்ளான் எதுவரைக்கும் ப்ராக்ரஸ்ல வந்திருக்கு...?"

உதட்டைப் பிதுக்கி 'உச்' கொட்டினான் மோகன்.

"பாங்க்ல லோன் கிடைக்கலை..."

"பாங்க்ல நீ எவ்வளவு கடன் கேட்டிருந்தே....?"

"நாப்பதாயிரம்...."

"நான் உனக்கு அம்பதாயிரம் தர்றேன்"

"என்னடா சொல்றே...? போன மாசம் உன்கிட்ட கடன் கேட்டப்போ ஒரு நூறு ரூபாய் நோட்டைக்கூட உனக்குத்தர முடியாத நிலைமையில இருக்கேன்... ஸாரிடான்னு சொன்ன நீ, இப்போ அம்பதாயிரம் ரூபாய் தரப்போறியா....? எப்படி... எப்படி...?"

என்னோட திட்டத்துக்கு நீ ஒத்துழைக்கணும்..."

"திட்டமா..."

"ம்.....இன்னும் கொஞ்சம் முன்னாடி வா....நான் சொல்லப்போறதை கவனமா கேக்கணும்...என்னோட திட்டத்துக்கு நீ ஒத்துழைக்க விரும்பலைன்னா தாராளமா கழண்டுக்கலாம். ஆனா விஷயத்தை வெளியில சொல்லக்கூடாது....."

"சரி.....மொதல்ல நீ விஷயத்தைச் சொல்லு"

தினகர் பார் பூராவையும் தன் பார்வையால் ஒரு முறை கழுவிக்கொண்டு சொல்ல ஆரம்பித்தான். "மோகன் எப்படியோ இந்தக் குடிப்பழக்கத்துக்கு ஆளாகி ஏறக்குறைய அடிக்ட் ஆயிட்டேன். தினசரி சூரியன் உதிக்கிற மாதிரி, குடிக்கணும்ங்கிற ஆசை எம் மனசிலேயும் உதிக்குது..... சாயந்தரமானதும் பாரை நோக்கி என்னையும் அறியாமே நடக்க ஆரம்பிச்சுடறேன். ஆக அப்பா தர்ற பணம் இதுக்கெல்லாம் தீர்த்தம் தெளிக்கிற மாதிரிதான்... அப்பாவை நேரிடையா பணம் கேட்டுப் பார்த்துட்டேன். அவர் முகத்துக்கு நேரே கையை ஆட்டி பாக்கெட்மணிக்கு மேலே அதிகப்படியா ஒரு பைசா கூட தரமாட்டேன்னு சொல்லிட்டார்.

தினகர் பேச்சை நிறுத்திவிட்டு - டம்ளரிலிருந்த விஸ்கியை ஒரு வாய் விழுங்கினான். தொடர்ந்தான். "எங்கப்பா என்னை என்னதான் திட்டினாலும், அவர்க்கு எம்மேல அபார பாசம்... ராத்திரி நான் வீடு வந்து சேர்ந்த பின்னாடிதான் அவர் தூங்கப் போவார். அந்த பாசத்தைத்தான் நான் என்னோட திட்டத்துக்கு ஆயுதமா உபயோகப்படுத்தப்போறேன்..."

"எப்படி... ?"

"நீ என்னைக் கடத்தப் போறே....!"

"டேய் தினகர்..."

"பயப்படாதே... இது ஒரு பாவ்லா திட்டம். நான் இன்னிக்கு ராத்திரியே ஏதாவது ஒரு வெளியூர் போயிடுவேன். லாட்ஜ்ல ரூம் எடுத்து ரெண்டு நாள் தங்கப் போறேன். ரூமை விட்டு வெளியே வராமே நான் லாட்ஜ்ல உட்கார்ந்திட்டிருக்கிற நேரம் - நீ இதே ஊர்ல இருந்துகிட்டு எனக்கு உதவப் போறே... ஏதாவது ஒரு டெலிபோன் பூத்திலிருந்து எங்கப்பாவுக்கு போன் பண்ணி "உங்க மகன் தினகர் உங்களுக்கு உயிரோடு திரும்பக் கிடைக்கணும்ன்னா ரெண்டு லட்ச ரூபாயை ஒரு ப்ரீப் கேஸ்ல போட்டு இன்ன இடத்தில கொண்டு வந்து வைக்கணும்னு சொல்லணும். பொலிஸுக்கு விஷயம் போனா உங்க மகன் பரலோகத்துக்கு போய்டுவான்னு மிரட்டணும்.... எங்கப்பா நிச்சயமா மிரண்டுடுவார். என்மேல இருக்கிற பாசம் அவரை பணத்தோட வரச்சொல்லும். பணம் உன்கைக்கு வந்ததும் நீ எனக்கு தகவல் தர்றே. நான் வர்றேன். பேசினபடி உனக்கு அம்பதாயிரம் கொடுத்துட்டு மிச்சப் பணத்தை என்னோட செலவுக்கு வெச்சுக்கப் போறேன்."

■ ■

"அம்மா... அபிநயா..."

அப்பா சந்தானகிருஷ்ணனின் குரல் கேட்டு - மாத நாவலொன்றில் மூழ்கியிருந்த அபிநயா திரும்பினாள்.

"மணி பத்தாகப் போகுது. தூங்காமே என்னம்மா படிச்சுட்டிருக்கே?"

"நாவல்"

"காலையில் படிக்கக் கூடாதாம்மா?"

"இதோ முடிச்சுட்டேம்பா கடைசி பத்துப் பக்கந்தான்"

"சீக்கிரம் படும்மா" சொல்லிக் கொண்டே தன் அறையை நோக்கி நடந்தார் சந்தானகிருஷ்ணன்.

நாவலை தொடர்ந்தாள் அபிநயா.

'தினகர் சொன்ன திட்டத்துக்கு மோகன் ஒப்புக் கொண்டானா?' என்பதை அறிந்து கொள்வதற்காக இருதயம் தவிக்க வரிகளை வேகமாய் மேய்ந்தாள் அபிநயா.

■ ■

மோகனின் முகம் பயத்தில் இருந்தது.

தினகர் போதையோடு கேட்டான். "என்ன சொல்றே மோகன்? என்னோட திட்டத்துக்கு கோவாப்ரேட் பண்றியா? சுலபமா அம்பதாயிரம் அள்ளலாம்."

"உங்கப்பா போலிஸுக்கு போயிட்டா?"

"போலிஸுக்கு போக மாட்டார்."

■ ■

அபிநயா அடுத்த வரிக்கு போவதற்குள் - டீபாயின் மேலிருந்த டெலிபோன் கூப்பிட்டது.

அபிநயா எரிச்சலோடு படித்துக் கொண்டிருந்த பக்கத்தை மடித்து வைத்துவிட்டு ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ"

"இது சந்தானகிருஷ்ணன் வீடுங்களா?" - ஒரு ஆண் குரல் கேட்டது.

"ஆமா நீங்க யாரு?"

"நான் புரோக்கர் சிவகுருநாதன் பேசறேன்மா. அப்பா இருக்காரா?"

"இருக்கார்."

"கொஞ்சம் கூப்பிட்டு விடம்மா... பேசணும்?"

"லைன்லேயே இருங்க" சொன்ன அபிநயா எக்ஸ்டென்ஷன் பட்டனை அழுத்தி சந்தானகிருஷ்ணனின் அறையிலிருந்த டெலிபோனைக் கூப்பிட்டாள்.

சந்தானகிருஷ்ணன் கேட்டார்:

"என்னம்மா?."

"புரோக்கர் போன்ல பேசுறாரப்பா?"

"யாரு? சிவகுருநாதனா?"

"ம்..."

"கனக்ஷன் குடும்மா"

கொடுத்தாள்.

தன் காதிலும் ரிஸீவரை ஒட்ட வைத்துக் கொண்டாள்.

"என்னய்யா இந்த நேரத்துக்கு போன்? எங்கிருந்து பேசறீர்?"

"திருச்சியிலிருந்து"

"என்ன விஷயம்?"

"ஜி.ஆர்.ஜி. எண்டர்பிரைசஸ் கங்காதரன்னு சொன்னா எல்லார்க்கும் தெரியும். அவரோட சன் பிரசாத்- டாக்டர்க்கு படிச்சுட்டு அமெரிக்காவில இருக்கார். அடுத்த மாசம் இந்தியா திரும்பறாராம். நம்ம பொண்ணு போட்டோவை கங்காதரன் கிட்டே காட்டினேன். அவருக்கும் அவரோட சம்சாரத்துக்கும் பொண்ணை ரொம்பவும் பிடிச்சிருக்கிறதா சொன்னாங்க. பொண்ணை ஒரு தரம் நேர்ல பார்க்க பிரியப்படறதா சொல்றாங்க. உங்க வசதியை தெரிஞ்சுகிட்டு இந்த வாரத்துல ஏதாவது ஒரு நாள் கூட்டிட்டு வரலாம்ன்னு நினைக்கிறேன்."

"குடும்பம் எப்படிய்யா?"

"மரியாதைப்பட்ட குடும்பம்."

"சொத்து மதிப்பு"

"கிட்டதட்ட உங்களுக்கு இடுப்புக்கு வருவாங்க."

"இருபது லட்சம் தேறுமா?"

"தேறும்"

"பையனை சுத்தி நல்லா விசாரிச்சீரா?"

"விசாரிக்காமே உங்களுக்கு போன் பண்ணுவேனா?"

"சரி, எப்ப கூட்டிட்டு வர்றீர்?"

"நாளை கழிச்சு மறுநாள் கூட்டிட்டு வரட்டுமா...?"

"ம் கூட்டிட்டு வாரும். எத்தனைப் பேர் வருவாங்க"

"பத்து பதினைஞ்சு ஜனம் வருவாங்க"

"வரட்டும் வரட்டும்"

சொல்லிக்கொண்டே சந்தானகிருஷ்ணன் போனை அணைத்துவிட அபிநயாவும் ரிஸீவரை சாத்தினாள். நெஞ்சப் பிரதேசம் பூராவும் ஏராளமான திகில் குதிரைகள் ஓடின. நெற்றி வியர்வையில் பொடித்தது.

அப்படியே தளர்ந்து போய் கட்டிலில் உட்கார்ந்தாள். மனசுக்குள் கரைந்தாள். 'திடீரென்று விழுந்து விட்ட இந்த கல்யாண வலையிலிருந்து கடவுளே எப்படி தப்பிக்கப் போகிறேன்?'

'அப்பா காட்டுகிற ஆர்வத்தைப் பார்த்தால் இந்த திருச்சி சம்பந்தம் படிந்து விடும் போல தெரிகிறது.'

'சபரி! சபரி!'

"உங்களைத் தயார் செய்வதற்குள் -என் கழுத்தில் தாலி விழுந்து விடும் போலிருக்கிறது.

'சபரியைப் பற்றி அப்பாவிடம் சொல்லிப் பார்க்கலாமா?'

'வேண்டாம் சொல்லாதே! விபரீதத்தை நீயே விலைக்கு வாங்கிக் கொள்ளாதே பெண்ணே! சொன்னால் வெளியே கிளம்பிப் போகிற இந்த சுதந்திரமும் போய்விடும்.'

'மௌனமாய் ஒரு புயலை உண்டாக்கு.'

புயலை உண்டாக்குவதற்கான வழி முறைகளை யோசித்தாள் அபிநயா. ராத்திரி பூராவும் யோசித்து விடிகாலை மூன்று மணிக்கு அந்த முடிவுக்கு வந்தாள் அபிநயா.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: இரா. தனபாலசிங்கம்
வயது: 22
முகவரி: லெஜர்வத்தை தோட்டம், கந்தகெதர.
பொழுதுபோங்கு: வானொலி, கிரிக்கெட்.



பெயர்: எம். ஷக்கூர்
வயது: 19
முகவரி: இல. 10, ஜாலால்தீன் சதுக்கம், பொத்துவில்-01.
பொழுதுபோக்கு: பத்திரிசை, கிரிக்கெட்,



பெயர்: கே. சாரதா
வயது: 16
முகவரி: லொக்கோம்ப், மௌசாகெல்ல, மஸ்கெலியா.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: எம். நபீல்
வயது:-19
முகவரி: 33/ஏ, இல்லவதுர, கம்பளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: எம். மகிந்தன்
வயது: 29
முகவரி: HAUPT STR-58 8439 RUMIKON, SWITZERLAND.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: எஸ். ஹமீட்
வயது: 27
முகவரி: P.O BOX. NO.587 AL-JHARA, KUWAIT.
பொழுதுபோக்கு: பாடல்கள் கேட்டல், பேனாநட்பு, பத்திரிகை.

பெயர்: கோவிந்தன் சுபாஷ்
வயது: 28
முகவரி: SAN GIACOMO-NO.1, 57036 PORTO AZZURRO(LI) ITALY.
பொ.போ: தொலைக்காட்சி, பேனா நட்பு.

பெயர்: ஜே. பஸீல் முகமட்
வயது: 20
முகவரி: P.O.BOX-429-DHAHRAN AIRPORT 31932, SAUDI ARABIA.
பொ.போ: வழமையானவை.

பெயர்: சி. அசோக்குமார்
வயது: 22
முகவரி: 66 பீ, காலி வீதி, தெஹிவளை.
பொழுதுபோக்கு: வானொலி, கதைப்புத்தகம், சினிமா.

பெயர்: எம். பௌமி
வயது: 23
முகவரி: 29, 3/1, 8வது ஒழுங்கை, கொழும்பு-03.
பொ.போ: சினிமா, கிரிக்கெட், பத்திரிகை.

பெயர்: கே. சுதர்ஸன்
வயது: 23
முகவரி: இல. 179/பி, எல்லை நகர், செங்கலடி.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, பேனாநட்பு.

பெயர்: எம். ரஹ்மான்
வயது: 22
முகவரி: கடையாமோட்டை, மதுரங்குளி.
பொ.போ: வழமையான பொழுது போக்குகள்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# தாய்

## மக்சீம் கார்க்கி

### 35

"பு ர்.....ர்.....! அப்பப்பா! என்ன குளிர்?" என்று சத்தமாகச் சொன்னாள். எனினும் அவள் குரலில் பயமும் சோகமும் கலந்து நடுங்கிற்று. "இதை வசந்த காலம் என்றே சொல்ல முடியாது!"

அடுத்த அறையிலே கேட்டுக் கொண்டிருக்கும் பேச்சுக் குரலை மூழ்கடிப்பதற்காக அவள் சட்டியையும் பெட்டியையும் அப்படியும் இப்படியும் உருட்டி அரவம் உண்டாக்கிக் கொண்டிருந்தாள்.

"எல்லாமே மாறிப்போய் விட்டது" என்று அவள் மேலும் உரத்த குரலில் பேசத் தொடங்கினாள். "மக்கள் புழுங்கித் தவிக்கிறார்கள்; சீதோஷ்ணம் என்னவோ குளிர்ந்து வெடவெடக்கிறது. இந்த மாதத்திலெல்லாம் சூரிய வெப்பம் உறைப்பதுதான் வழக்கம். நல்ல வெயிலும், நிர்மலமான வானமும்...."

பேச்சுக்குரல் நின்றுவிட்டது. எனவே தாய் சமையலறையின் மத்தியில் வந்து நின்றுகொண்டு என்ன நடக்கிறது என்று காது கொடுத்துக் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பினாள்.

ஹஹோல் மீண்டும் மேதுவாகப் பேசினான்: "நீ அதைக் கேட்டாயா? இதற்குள்ளாகவே உன் புத்தியில் பட்டிருக்க வேண்டும். அதை விட்டுத் தள்ளு! உன்னைவிட அவளுக்குப் புத்தி அதிகம், தெரிந்ததா?"

"கொஞ்சம் தேநீர் சாப்பிடுங்களேன்" என்று நடுநடுங்கும் குரலில் கேட்டாள் தாய். தன் குரலில் தோன்றிய நடுக்கத்தை உடனடியாய் மழுப்புவதற்காக: "அப்பப்பா! நான் ஒரேயடியாய் விறைத்தே போனேன்!" என்று சொல்லிக் கொண்டாள்.

பாவெல் அவளிடம் மெதுவாகப் போய்ச் சேர்ந்தான். அவனது தலை தொங்கிப் போயிருந்தது; குற்றமுள்ள குறுஞ் சிரிப்பு அவன் உதடுகளில் கோணி வதங்கியது.

"என்னை மன்னித்துவிடு, அம்மா. நான் இன்னும் சின்னப் பிள்ளை-முட்டாள்....."

"என்னைத் துன்புறுத்தாதே, அப்பா" என்று அவனது தலையைத் தன் மார்போடு அணைத்தவாறு பரிதாபமாகக் கத்தினாள் அவள். "ஒன்றுமே சொல்லாதே. நீ உன் இஷ்டப்படி வாழ்வதற்கு உரிமையுள்ளவன். கடவுள் உனக்கு அருள் செய்வார், அப்பா. ஆனால்-என் இதயத்தைப் புண்படுத்தாதே. தாய் தன் பிள்ளைப் பாசத்தை விட்டுவிட முடியுமா? அவள் தன் பிள்ளையை நேசிக்கத்தான் செய்வாள். நான் உங்கள் அனைவரையும் நேசிக்கிறேன். நீங்கள் எல்லாருமே எனக்குப் பிரியமானவர்கள்; நீங்கள் அனைவரும் நேசிக்கத் தகுதியுள்ளவர்கள். உங்களுக்காக நான் அனுதாபப்படாவிட்டால், வேறு யாரப்பா அனுதாபம் கொள்வார்கள்? நீங்கள் அனைவரும்-நீ தலைமை தாங்கிச் செல்ல, உனக்குப் பின்னால் மற்றவர்கள் அனைவரும்- எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டுச் செல்வீர்கள்.....பாஷா!"

அவளது நெஞ்சுக்குள் கனன்றெரிந்து கனலெழுப்பும் மகத்தான சிந்தனைகள் துடித்துக் கொண்டிருந்தன. சோகங் கலந்த இன்பம் அவளது இயத்தில் ஊடாடியது. எனினும் அதை வெளியிட்டுக்கூற அவளுக்கு வார்த்தை கிடைக்கவில்லை. வாய் பேச முடியாத ஊமை நிலையின் சித்திர வேதனையோடு, அவள் தன் மகனை ஆழமும் கூர்மையும் பெற்ற வேதனை நிறைந்த கண்களோடு வெறித்துப் பார்த்தாள்.

"ரொம்ப சரி, அம்மா. என்னை மன்னித்துவிடு. எனக்கு இப்போதுதான் எல்லாம் தெரிகிறது. இனி நான் இதை மறக்கவே மாட்டேன். சத்தியமாய்ச் சொல்லுகிறேன் மறக்கவே மாட்டேன்." அவன் புன்னகை அரும்பும் தன் முகத்தை வேறுபுறமாகத் திருப்பிக் கொண்டான். அவனது முகத்தில் குதூகலம் தொனித்தது; அவமானத்தால் குன்றியும் போயிருந்தது.

அவள் அவனை விட்டுப்பிரிந்து அடுத்த அறைக்குள் சென்றாள்.

"அந்திரியூஷா!" என்று பரிவு கலந்த தொனியில் கூப்பிட்டாள் அவள். "அவனை அதட்டாதே. நீ பெரியவன்....."

"பூ! அவனை நான் அதட்டுகிறதாவது? அவன் என்னிடம் உதைபட வேண்டியது ஒன்றுதான் பாக்கி!" என்று திரும்பிப் பார்க்காமலேயே கத்தினான் ஹஹோல்.

அவள் அவனிடம் நேராகச் சென்று தன் கரத்தை நீட்டினாள்.

"நீ எவ்வளவு நல்லவன்......"

ஹஹோல் திரும்பினான்; உடனே தன் தலையை ஒரு மாட்டைப் போல கவிழ்த்து வைத்துக் கொண்டும், கைகளைப் பின்புறமாகக் கட்டிக் கொண்டும் சமையலறையை நோக்கி நடந்தான். எகத்தாளமாக அவன் குத்திப் பேசுவது தாயின் காதில் ஒலித்தது.

"பாவெல், ஓடிப்போய்விடு. உன் தலையை நான் கிள்ளித்தூர எறிவதற்குள் போய்விடு! அம்மா, நான் சும்மா விளையாட்டுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் பயநதுபோய்விடாதீர்கள். நான் இஙகே தேநீருக்குத் தண்ணீர் போடுகிறேன். வேறொன்றுமில்லை. அடடே! அருமையான அடுப்புக்கரி இருக்கிறதே- ஊறப் போட்ட கரியா?"

அவன் மௌனமானான். தாய் சமையலறைக்குள் நுழைந்த போது, அவன் அடுப்புக்கு எதிராக இருந்து உலையை ஊதிக் கொண்டிருந்தான்.

"பயப்படாதீர்கள், அம்மா. அவனை நான் தொடவே மாட்டேன்" என்று தலையை திருப்பாமலே சொன்னான் ஹஹோல்: "நான் ரொம்ப சாது, வெந்துபோன கிழங்கு மாதிரி. அப்புறம்-ஏ, வீரசூரா, நீ இதை ஒன்றும் கேட்க வேண்டாம். தெரிந்ததா? உண்மையிலேயே எனக்கு அவன் மீது ரொம்பப் பிரியம். ஆனால் அவன் போட்டிருக்கிறானே, ஒருகையில்லாச் சட்டை. அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. அவனுக்கு அந்தப் புதுச் சட்டைமேலே ஒரே மோகம். அதைப் போட்டால் ரொம்ப நன்றாக இருக்கிறதாம். எப்போது பார்த்தாலும் அதையே போட்டுக் கொண்டு தொப்பையைத்தள்ளிக் கொண்டு போகிறதும் வருகிறதும், ஒவ்வொருத்தனையும் வழிமறித்து,'பார்த்தாயா? எவ்வளவு அருமையான சட்டை' என்று பெருமை பீற்றிக் கொள்கிறதும் அவனுக்கு வேலையாய்ப் போயிற்று. நன்றாய்த் தானிருக்கட்டுமே, அதற்காக ஒவ்வொருத்தனையும் இடித்துக் கொண்டு சொல்லாவிட்டால் என்ன? ஏற்கெனவே இங்கு நெரிசல்."



"ஏய்! எவ்வளவு நேரம்தான் நீ இப்படிக் கதை அளக்கப் போகிறாய்?" என்று சின்னச் சிரிப்போடு கேட்டான் பாவெல். நீதான் எனக்கு ஒரு தடவை புத்தி சொல்லியாயிற்றே, இன்னும் என்ன?"

ஹஹோல் தரையிலே உட்கார்ந்து தன்னிரு கால்களையும் அடுப்புக்கு இருபுறமும் நீட்டிப் போட்டுக் கொண்டு அவனைப் பார்த்தான். தாய் வாசல் நிலையருகில் நின்று அந்திரேயின் பின் தலையை அன்பு ததும்பக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவன் தன்னிரு கைகளையும் பின்னால் ஊன்றியவாறு உடலைத் திருப்பி, பாவெலையும் தாயையும் பார்த்தான்.

"நீங்கள் இரண்டு பேரும் ரொம்ப நன்றாயிருக்கிறீர்கள்" என்று சொல்லிக் கொண்டே ஓரளவு சிவந்து கன்றிப் போயிருந்த தன் கண்களை இமை தட்டிக் கொண்டான்.

பாவெல் குனிந்து அவன் கையைப் பிடித்தான்.

"அடடே. இழுக்காதே. என்னைக் கீழே தள்ளி விடுவாய்" என்றான் ஹஹோல்.

"எதற்காக வெட்கப் படுகிறீர்கள்?" என்று கேட்டாள் தாய்: "நீங்கள் இரண்டு பேரும் கட்டித் தழுவி முத்தமிடுங்கள்."

"என்ன, இந்த யோசனை எப்படி?" என்று கேட்டான் பாவெல்.

"பேஷாய்! வா இப்படி." என்று சொல்லிக்கொண்டே எழுந்தான் ஹஹோல்.

அவர்கள் இருவரும் கட்டித் தழுவினார்கள். ஈருடலும் ஒருயிருமாக அங்கு நட்பு பிரகாசித்தது. தாயின் கண்களில் கண்ணீர் வழிந்தது. இது அழுகைக் கண்ணீர் அல்ல, ஆனந்தக் கண்ணீர்!

"பெண்களுக்கு அழுவதில் பிரியம்" என்று வழிந்த கண்ணீரை வெட்க உணர்ச்சியோடு துடைத்துக் கொண்டே பேசத் தொடங்கினாள் தாய். "அவர்கள் ஆனந்தம் வந்தாலும் அழுவார்கள், துக்கம் பொங்கினாலும் அழுவார்கள்...."

ஹஹோல் பாவெலை மெதுவாக விலக்கிவிட்டான்.

"போதும்" என்று கூறிக்கொண்டே தனது கண்களையும் துடைத்து விட்டுக் கொண்டான் அவன். "ஆடி முடிந்து விட்டது கன்றுக்குட்டி, இனி வெட்டிப் போடுவோம் வேகவைக்க . உன் அடுப்புக் கரியை உடைப்பிலேதான் கொண்டு போட வேண்டும். ஊதி ஊதி என் கண்களில் தான் கரி விழுந்து போயிற்று!"

"இந்த மாதிரிக் கண்ணீருக்கு வெட்கப்படவே தேவையில்லை!" என்று மெதுவாகச் சொல்லிவிட்டு ஜன்னலருகே சென்று உட்கார்ந்தான் பாவெல்.

அவனது தாய் அவனருகே சென்று உட்கார்ந்தாள். அவளது இதயத்தில் புதிய தைரியம் நிறைந்திருந்தது. அந்தத் துணிவுணர்ச்சியினால், அவளது துக்கம் ஒரு புறமிருக்க, அவளது மனம் நிறைவும் நிம்மதியும் பெற்று விளங்கியது.

"அம்மா, நீங்கள் ஒன்றும் எழுந்திருக்க வேண்டாம். நானே எல்லாவற்றையும் கொண்டு வந்துவிடுகிறேன்" என்று கூறிக்கொண்டே அந்த அறையை விட்டு அடுத்த அறைக்கு வந்தான் ஹஹோல். "கொஞ்ச நேரம் சும்மா இருங்கள். உங்கள் இதயத்தை இந்த மாதிரிப் பிழிந்தெடுத்த பிறகு கொஞ்சம் ஓய்வு தேவைதான்...."

அவனது செழுமை நிறைந்த குரல் மீண்டும் அவர்களிடையே ஒலிக்க ஆரம்பித்தது.

"இப்போது நாம் வாழ்க்கையிலேயே ஒரு புதிய ருசியைக் கண்டோம்; மனித வாழ்க்கையிலேயே ஒரு புதிய சுகத்தை அனுபவித்தோம்!"

"ஆமாம்" என்று தன் தாயைப் பார்த்துக்கொண்டே பதில் சொன்னான் பாவெல்.

"இந்த அனுபவம் எல்லாவற்றையுமே மாற்றிவிட்டது" என்றான் அவன்; "நம்முடைய துன்பமும் வேறு, இன்பமும் வேறு....."

"அப்படித்தானம்மா இருக்க வேண்டும்" என்றான் ஹஹோல் "என் அருமை அம்மா! இன்று ஒரு புதிய இதயம் பிறந்தது. புதிய இதயம் வாழ்வு கண்டது. மனிதன் முன்னேறிச் செல்கிறான்; பகுத்தறிவினால் அனைத்தையும் ஒளிரச் செய்தவாறே முன்னேறுகிறான். போகும் போதே "சர்வதேசத்தின் மக்கள் கூட்டமே! ஒரே குடும்பமாக ஒரே இனமாக ஒன்று சேருங்கள்!" என்று அறைகூவி அழைக்கிறான். அவனது அறை கூவலுக்கு எதிரொலியாக, உறுதிவாய்ந்த சகல இதயங்களும் ஒன்றுகூடிக் கலந்து மாபெரும் பேரிதயமாகி மகத்தான பலம் பெற்று மணிநாதமாக ஒலிக்கின்றன....."

நடுங்கித் துடிதுடிக்க முயலும் தன் உதடுகளை இறுகக் கடித்துக் கொண்டாள் தாய். அழுகை முட்டிக் கொண்டு வரும் தன் கண்களையும் அவள் இறுக மூடிக் கண்ணீரை உள்ளடக்கிக் கொண்டாள்.

பாவெல் ஏதோ பேசப் போவதைப் போல் கையை உயர்த்தினான். ஆனால் தாய் அவனைத் தன்பக்கம் இழுத்து மெதுவாக இரகசியமாகச் சொன்னாள்: "அவன் பேசட்டும்; நீ குறுக்கிடாதே" என்று குசுகுசுத்தாள்.

ஹஹோல் எழுந்து வந்து கதவருகே நின்று கொண்டான்:

"மக்கள் இன்னும் எத்தனை யெத்தனை துன்பங்களையோ பார்க்கப் போகிறார்கள்; எவ்வளவோ இரத்தத்தை இன்னும் சிந்திப் பெருக்கப் போகிறார்கள். என்னுடைய இயத்திலும் என்னுடைய அறிவிலும் நான் கொண்டிருக்கும் வேட்கைக்கு என்னுடைய துயரங்கள் எம்மாத்திரம்? என் உடம்பிலுள்ள இரத்தம் தான் எம்மாத்திரம்? இவை போதாது. நான் ஒளிக் கிரணம் வீசும் தாரகையைப் போல் இருக்கிறேன். நான் எதையும் தாங்க முடியும்; எதையும் சகித்துக் கொள்ள முடியும். ஏனெனில், என் இயத்தினுள்ளே பெருகும் போரானந்தத்தை எந்தச் சக்தியும், எவரும் அழித்துத் துடைத்துவிட முடியாது. அந்தப் பேரானந்தத்தில்தான் என்னுடைய முழுப் பலமும் அடங்கியிருக்கிறது!"

அவர்கள் நடுநிசி வரையில் உட்கார்ந்து தேநீர் பருகினார்கள். வாழ்க்கையைப் பற்றியும் மாந்தர்களைப் பற்றியும் எதிர்காலத்தைப் பற்றியும் ஆர்வத்தோடு பேசிக்கொண்டார்கள்.

எப்போதாவது ஒரு கருத்து தனக்குத் தெளிவாகிப் புரியும் சமயத்தில், தாய் தனது கடந்த காலத்தை எண்ணிப் பெருமூச்செறிந்து கொள்வாள். அந்தக் கருத்தை நன்கு உணர்ந்து கொள்வதற்காக, அதைத் தனது துன்பம் நிறைந்த இங்கிதமற்ற பழைய வாழ்க்கைச் சம்பவங்களோடு பொருத்திப் பார்த்துக் கொள்வாள்.

அவர்களது உரையாடலிலிருந்த உற்சாகத்தில் அவளது பயபீதிகளெல்லாம் மறைந்தோடி பறந்து விட்டன. அன்று, அவளது தந்தை அவளைப் பார்த்துக் கடுமையாகக் கூறிய பொழுது தோன்றிய அந்த உணர்ச்சி மீண்டும் அவளிடம் தோன்றியது.

"முகத்தைச் சுழிப்பதிலே எந்தப் பிரயோசனமும் இல்லை. எவனோ ஒருவன், முட்டாள்தனமாக, உன்னைத் தன் மனைவியாக ஏற்றுக் கொள்வதற்கு முன்வந்து விட்டானோ, உடனே அவனை ஏற்றுக்கொள்; சந்தர்ப்பத்தை நழுவ விடாதே. எல்லாப் பெண்களும் கலியாணம் செய்துதான் தீரவேண்டும். கல்யாணம் பண்ணி, குழந்தைகளைப் பெற்றுப்போட வேண்டியதுதான் தலைவிதி. குழந்தைகளோ ஒரே தொல்லை பிடித்த பாரச்சுமைதான். எல்லோரையும் போன்ற மனிதப்பிறவிதானே நீயும்?" என்று கூறினார் அவளது தந்தை.

இந்த வார்த்தைகளைக் கேட்டபோது அவளது கண்முன்னால் ஏதோ ஒரு தப்பிக்க முடியாத, தவிர்க்க முடியாத ஒரே ஒரு மார்க்கம் தான் தோன்றுவது போலவும், அந்தப் பாதையே அவள் முன்னால் இருண்டு வெறிச்சோடிக் கட்டாந்தரையாக நீண்டு கிடப்பது போலவும் தோன்றியதுண்டு. அந்தத் தவிர்க்க முடியாத நெடு வழியில் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் அவளது இதயத்தில் ஒரு குருட்டு அமைதியை உண்டாக்கியது.

(தொடர்ந்து வரும்)

# காதலித்துப் பார்

"உன்னைச் சுற்றி
ஒளி வட்டம் தோன்றும் "
கடன் வட்டம் தான் தோன்றியிருக்கு....
"உலகம் அர்த்தப்படும்"
வீடே அர்த்தப்படல்ல...
அம்மா தண்டச் சோறுன்னுறாங்க.....

அப்பா மடச்சாம்பிராணின்னுறாரு...
அக்கா, அண்ணன்மார் அரைப் பைத்தியம்ன்னுறாங்க....

"ராத்திரியின் நீளம்
விளங்கும்"
இதுவரையில குரட்டையின் நீளம் தான் விளங்கியிருக்கு...

"உனக்கும்
கவிதை வரும்"
மண்ணாங்கட்டி! அது ஒன்னு தான் குறைச்சல்.....

"கையெழுத்து
அழகாகும்"
தலையெழுத்தே சரியில்ல....

"தபால் காரன்
தெய்வமாவான்"
என்னைப் பொறுத்தவரை அசுரன்! (எனக்குத் தர வேண்டிய கடிதத்த எதிர் வீட்டுல கொடுத்து, எங்க ரெண்டு வீடுகளுக்கிடையில ரகளைய உண்டு பண்ணி, 'குவைட்- ஈராக்கா' மாத்தினவனே அவன் தானே)

"உன் பிம்பம் விழுந்தே
கண்ணாடி உடையும்"
கண்ணாடி விழுந்து மூஞ்ச வெட்டிய தழும்பு அப்படியே இருக்கு....
(சுவர் ஆணியில தொங்கிக் கிட்டிருந்தது, நான் தலை சீவப்போன நேரம் பார்த்துக் கழட்டிக்கிட்டு மூஞ்சி மேல விழுந்திருச்சி)

"கண்ணிரண்டும்
ஒளி கொள்ளும்"
ஏற்கெனவே ஒண்ணரைக் கண்ணு; குமரி முத்து மாதிரி...
(இயாஹ்.....ஹா....)
"காதலித்துப் பார்"

□□

வைரமுத்துவின் இந்தக் கவிதை வரிகளுக்காகவேனும் காதலித்துப் பார்க்க வேண்டும் போல இருக்கே...

யாருமே நம்பளக் காதலிக்க மாட்டேன் னுறாங்களே...

நாமளாவது காதலிக்கலாம்ன்னா, யாரைக் காதலிக்கலாம்...?

பக்கத்து வீட்டுப் பங்கஜம் அக்காட பொண்ணு..!

"வேணாம்...."

அப்போ முன் வீட்டு முனிசாமி மகள், முனியம்மா....!

"யெப்பா வேணவே வேணாம்! அவள் பிந்துகோசுக்கு அக்கா மாதிரி....

(நான் வேறு ஓமக்குச்சி சைஸ்ல இருக்கேன். ஒத்து வருமா?)

□□

கோட்டைப் புகையிரத நிலையத்துக்கு முன்னால் 101-ம் இலக்க பஸ் வரும் வரை காத்திருக்கிறேன். மழை வேறு இருட்டுகிறது. அந்த மழை இருள் இரண்டு மடங்காக எனக்கு மட்டும் காட்சியளிக்கிறது. காரணம் நான் ஒண்ணரையை மறைப்பதற்காகக் கருப்புக் கண்ணாடியை அணிந்திருக்கிறேன்..

"காதலித்துப் பார்...."

(வைரமுத்து காதுக்குள் சொல்லிக் கொண்டே இருந்தார்)

நான் எதிரே திரும்புகிறேன்...
நம்ம ரோஜாவாட்டம் ஒரு ரோஜா!
பார்க்கிறாள்....
பார்க்கிறேன்...
சிரிக்கிறாள்...
"ஹஹ்ஹா...."

நானும் ரஜினி ஸ்ட்டைலிலேயே கொட்டுகிறேன்....

101-உம் வந்து நின்றது.

அவள் ஏறுகிறாள்...
நானும் ஏறுகிறேன்....

அந்த நெருக்கமான பஸ்சுக்குள் நானும் அவளும் பக்கம் பக்கமாக....

மெல்ல அவளைப் பார்க்கிறேன்.....
புன்னகையை உதிர்க்கிறாள்....

நான் எதையெதையோவெல்லாம் பேச வேண்டும் என எண்ணி, முயல்கிறேன்.... வார்த்தைகள் உதடுவரை வந்து முட்டி மோதி, எங்கேயோ காணாமல் போகின்றன...

அதற்குள் அவளும் இறங்க வேண்டிய இடத்தில் இறங்கி விடுகிறாள்.

அடச்சீ! இந்த நேரம் பார்த்துக் கண்டக்ரர் பணம் கேட்கிறான்....

என் பர்ஸை எடுக்கக் கையை விடுகிறேன்...

ஐயய்யோ....! என் பர்ஸ்....???

என்னோட ஐடிண்ட்டி கார்ட் கூட அதுக்குள்ள தான்....!

பணம் இல்லாவிட்டால் பிழைச்சிக்கலாம்...

அடையாள அட்டை இல்லாவிட்டால்....?

**மாவனல்லை எம்.எம். ரவூப்**




படிப்பகம்

www.padippakam.com



# மறுபக்கம்

அடுத்த வீட்டுக்கு புதிதாக வந்திருந்த குடும்பம்-பெரியது, அப்பா,அம்மா, அண்ணன்,தம்பி,அண்ணி,தங்கை,பாட்டன், மற்றும் பாட்டி உட்பட பேரப்பிள்ளைகள்



என கூட்டிப் பார்த்தால் பதினைந்து இருபது பேர் தேறுவார்கள்; கூட்டுக் குடும்பம்.

அம்மாவுக்கு ஒரே குஷி. பேச்சுத் துணைக்கு ஆட்கள் கிடைத்து விட்டார்கள் என ஒரு சுற்று பெருத்து விட்டாள்.

"அடுத்த வீட்டு மாமியின் மகளுக்கு உன் வயசு தான் இருக்கும். பார்த்தியா எப்படி ஓடியாடி வேலை வெட்டி செய்றாள்னு...? நீயும் இருக்கியே!" சஹானா பேப்பர் வாசித்துக்கொண்டிருந்தாள். அம்மாவின் சொற்கள் காதில் தெளிவாய் விழுந்தும் அலட்சியப் படுத்தினாள்.

"நான் பேசறது கேட்குதா? இல்ல காதில பஞ்சா?" அம்மா கடுப்பானாள். "என்னை என்ன செய்யச் சொல்றீங்க? அடுத்த வீட்டுப் பெண் வேலையில கெட்டிக்காரின்னா நான் பலியா? என்னால முடிஞ்சத நானும் செய்யறேன் தானே!" சஹானாவும் எரிந்து விழுந்தாள்.

"ஆமா, செஞ்சு கிழிச்ச. ஒழுங்கா ஒரு துணிமணி கழுவத்தெரியுமா? ஒரு வேளை வாய்க்கு ருசியா சமைக்கத் தெரியுமா? இல்ல ஒரு சட்டை,பாவாடைன்னு தைக்கத் தெரியுமா?" அம்மா அடுக்கினாள்.

"ஏன், இவ்வளவு நாளும் நான் வீட்டு வேலை செய்யலியா? நேரங்கெடச்ச நேரங்களில துணி கழுவலியா? சமையலுக்கு ஒதவி பண்ணலியா? வீடு வாசல பெருக்கி அழகா வெக்கலியா? இதுக்கு மேல எங்கிட்ட என்ன எதிர்பார்க்கறீங்க?" சஹானா விடவில்லை; வாதாடினாள்.

"ஆமாம்மா. பெரிய்ய வேலை செய்ஞ்சீங்க. எல்லாருக்கும் ஒரு கைராசி வேணும். ஒரு வேலை ஒழுங்கா, பூரணமா செய்யத் தெரியல; கதை மட்டும் நீளுது. அதுக்கு அந்தப் பொண்ணு-அவ கை என்னா, இயந்திரமா தெரியலை. எப்படி செய்யறா? காலை எழுந்தது முதல் இரவைக்கு கண்மூடுற வரைல வீட்டு பொறுப்பையே தலைல வைச்சுக்கிட்டு.... ம்... எல்லாத்துக்கும் ஒரு கொடுப்பினை வேணும். எனக்குன்னு நீ வந்து பொறந்தியே.... இந்தக் காலத்து பெண் பிள்ளைகள் குக்கரி கிளாஸ், தையல் கிளாஸுன்னு போய் என்னென்னவோ படிச்சு வருதுகள். நீ அதுவும் முடியாதுன்னு சொல்லிட்ட. பொண்ணா வளர்த்திருக்கா? இந்த இலட்சணம்னு எனக்கு தான் வசை பாடு வாங்க. அது மட்டும் நிச்சயம்." அம்மா மூக்கால் அழுதாள்.

"சும்மா தொணதொணக்காதீங்கம்மா. எல்லாருக்கும் எல்லாம் சரியா வராது. எனக்கு வீட்டு வேலைகள்ல இன்டரஸ்ட் இல்ல. ஆனாலும் ஏதோ செய்யறேன் தானே? அந்தப் பொண்ணுக்கு வேற வழி இல்ல. வீட்டு கடமையளை செய்ஞ்சே ஆகணும்னு நிலை. அவளை அவங்க படிக்க வைக்கலை. தொழிலுக்கு அனுப்பலை. தங்களுடைய சுயநலம் கருதி வசதியாக சம்பளமில்லாத வேலைக்காரியா வெச்சு வேலை வாங்கிறாங்க. அவள் ஒண்ணும் விரும்பி ஓடியாடி வேலை செய்யல. மனசுக்குள்ள ஏராளம் வேதனைகளத் தாங்கிட்டு இருக்கா. நீங்க வேணா போய் பேச்சுக்குடுத்து பாருங்க. அவ மனசுல

## ஷர்மிளா இஸ்மாயில்—கண்டி

எத்தனை வேதனைன்னு உங்களுக்குப் புரியும்."

"சும்மாயிரு. உளறாதே, சொந்தப் பிள்ளைய எங்காவது வேலைக்காரியா வெச்சிருப்பாங்களா? பைத்தியம். கதை, கவிதை எழுதறேன்னு சும்மா பைத்தியக் காரத்தனமா கற்பனைகளை வளர்த்துகிட்டு நல்லா உளர்றே. அவங்க காதில விழுந்து தொலைக்கப் போவுது..." அம்மா மெது வாய்ப் பேசினாள்.

"நான் உளறல்லம்மா. உண்மையத்தான் சொல்றேன். எட்டாம் வகுப்புக்கு மேல ஸ்கூல் போக வேணாம்னு தடுத்திட்டாங்களாம். ரொம்ப நல்லா படிச்ச பொண்ணு. படிக்கணும்னு ஆசை இன்னும் இருக்காம். அண்ணன்மாரோட பிள்ளைகள கவனிக்கறதும், எல்லார்ட வேலைகளை செய்து கொடுக்கறதும் சமைக்கறதும், துணி துவைக்கறதும் என நாள்பூரா வேலை. இன்னும் கொஞ்ச நாள் போனா கல்யாணங்கட்டி குடுத்திடுவாங்க. பிறகு அந்த மாமியார் வீட்லயும் இதே தான். பிள்ளை குட்டின்னு ஆனதும் கணவரதும் பிள்ளைகளினதும் வேலை என வாழ்க்கை முழுக்க கொத்தடிமை நிலை தான். பாவம் இல்லியா?"

"இதெல்லாம் அவள் சொன்னாளா உன்கிட்ட?" அம்மா அதிர்ச்சியாய் வினவினாள். "சொன்னது பாதி. நானா புரிஞ்சிக்கிட்டது மீதி."

"ம்... சரி... என்கிட்ட உளறிவெச்சது போதும். வேற யார்கிட்டயும் சொல்லி வம்பை விலைக்கு வாங்காதே. சரியா?" அம்மா எழுந்து கொண்டாள்.

சஹானாவுக்குள் சிரிப்பு மலர்ந்தது. "புரியாது. அம்மாவுக்கு நிச்சயம் இது புரியாது." தனக்குத்தானே தலையாட்டிக் கொண்டு முணுமுணுத்தாள் சஹானா.

பஸ்ஸில் சன நெருக்கத்தில் நரக வேதனையை உலகிலேயே அனுபவித்து விட்டு வியர்த்து விறுவிறுத்து வந்தாள் சஹானா. "நல்லதொரு டீ போடுங்கம்மா." கட்டளை பிறப்பித்தபடியே சமையலறைக்குள் போனவள் அம்மா தலையில் கைவைத்தபடி சாய்ந்திருப்பதைக் கண்டாள். "என்னம்மா? ஒரு மாதிரியா இருக்கீங்க? உடம்புக்கு முடியலியா?" ஆதரவாய் வினவினாள்.

அம்மா சஹானாவைப் பார்த்தாள். பெருமூச்சு விட்டாள். மீண்டும் பார்த்தாள். "பக்கத்து வீட்டு மாமிட மகள்... வ.. வந்து.... ஒரு பையனோட ஓடிப் போயிட்டாளாம்... எவ்வளவு நல்ல பொண்ணு. அவ இப்படி செஞ்சுட்டாளே...."

"எங்கிருந்தாலும் வாழ்க." சிரித்தபடி சொன்ன சஹானாவை அம்மா பார்வையால் சுட்டெரித்தாள். சஹானாவின் புன்னகை மாறவில்லை.

---

# நியாயத் தெளிவு

அம்மா அண்ணாமீது முதலில் கோபமாகத்தானிருந்தாள். இயலாமை அழுகையாக மாறியிருக்க வேண்டும். அழுது கொண்டிருந்தாள். உழைத்து ஓய்ந்த அந்த ஊசிபோன்ற உடம்பிலிருந்து விசும்பல். உலர்ந்த கண்களிலிருந்து கண்ணீர். அம்மாவின் கண்ணீரைக்காண அண்ணாவின் மேல் எனக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. அவளின் கோபமும், அழுகையும் நியாயமாகவே தோன்றிற்று.

கல்யாணமாக முன் வீட்டில் எவ்வளவு அன்பும்.அக்கறையும் வைத்திருந்தார். இப்பொழுதெல்லாம் எங்களைப் பார்க்க வீட்டுக்கு வருவதே குறைந்துவிட்டது. வருவதை நிறுத்திவிட்டார் என்றுதான் சொல்லவேண்டும்.

அப்படியென்ன இத்தனை காலமாக பெற்றுவளர்த்த தாயை, சகோதரங்களை, வீட்டை மறப்பது? மனைவிமார் என்ன மந்திரம் போடுகிறார்களோ தெரியாது?

அம்மா எங்களை இந்த நிலைக்குக் கொண்டுவர எவ்வளவு சிரமப்பட்டார். ஏன் இவைகளை அண்ணா மறந்து விட்டார்? அப்பா முடக்குவாதத்தால் இறந்தபோது அண்ணாவிற்கு பதினைந்து வயது. எனக்குப் பத்து. அடுத்தடுத்தாற்போல் இரு தங்கைகள் வேறு. நான்கு பிள்ளைகளுடன் தடுமாறிப் போனாள் அம்மா.

சொந்த பந்தங்கள் அவளைத் தூக்கி யெறிந்தன. அயலவர்களின் பேச்சுக்களையும், இழிவுக் கதைகளையும் விட்டுத்தள்ளினாள். பிள்ளைகளை வளர்த்தெடுக்க போராட்டம் தொடங்கியது. நகரத்துக்குப் போய் மரக்கறிகள் வாங்கி கிராமச் சந்தையில் விற்றாள். கோழி வளர்ப்பு, முட்டை வியாபாரம்,

## களுவாஞ்சிக்குடி யோகன்-சுவிஸ்

பாய்பின்னுதல், பெட்டி இழைப்பு... இப்படி ஓய்வில்லாமல் உழைத்ததுடன் முதல்களைப் போட்டு எங்களை படிப்பித்தாள். நாங்களும் கஷ்டங்களை உணர்ந்து கவனமெடுத்துப் படித்தோம்.

அதற்குப் பலனும் கிடைத்தது. அண்ணாவிற்கு முதலில் அரசாங்க வேலையும் கிடைத்தது. சில மாதங்கள் போயிற்று. அவர் அண்ணியைக் காதலிக்கத் தொடங்கியிருந்தார்.

அண்ணி பணக்கார வீட்டுப் பெண். அதனால் அம்மாவிக்கும். உள்ளூர சந்தோஷந்தான். எங்களின் நிலையறிந்து உதவிகள் செய்வாள் என்று அண்ணாவும் இப்படித்தான் சொல்லி அம்மாவைச் சம்மதிக்க வைத்தார்.

"நான் கல்யாணஞ்செய்து போனாலும், என்ர நினைவுகளெல்லாம் இங்கதான் இருக்கும். இப்ப எப்படி உங்களைக் கவனிக்கிறேனோ அந்தக் கவனிப்பு அப்படியே தொடர்ந்து வரும், அம்மா ஒன்றுக்கும் யோசிக்கக் கூடாது" என்று சொல்லி திருமணமும் நிகழ்ந்தது.

திருமணம் முடிந்ததும் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டிருந்தது. கல்யாணமான ஆரம்பத்தில் கிழமைக்கு ஒரு தடவை வீட்டிற்கு வருவார். பிற்பாடு மாதத்திற்கு ஒரு முறையாகக் குறைந்தது. பின்னர் இரண்டு மாதங்களுக்கு ஒரு தரமாகி, அது விசேட நாட்கள், பண்டிகை நாட்களாகி.... இப்பொழுது அதுவும் கிடையாது.

இதுதான் எங்களுக்குக் கோபமும் ஆத்திரமும். எனக்குக் கல்யாணமானாலும் இப்படியான கவலைகளுக்கு அம்மாவைக் கொண்டு வரக்கூடாது என சபதம் எடுத்து விட்டேன்.

இனிமேல் அண்ணா அண்ணியுடன் உறவு வைக்கவும் கூடாது. அவர்களின் முகத்தில் முழிக்கவும் கூடாது என்று முடிவெடுத் தவனாய் நித்திரைக்குச் சென்றேன்.

விடிந்ததும் அலுவலகம் புறப்பட்டாயிற்று. சாப்பாட்டு இடைவேளை. நண்பன் சுரேஷ் வந்தான். இருவரும் சேர்ந்தே சாப்பிட்டோம்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை. "அம்மா வீட்டுக்குப் போனேன். பெரிய ரகளையாப் போச்சுடா" சொன்னான் சுரேஷ்.

"ஏன்?" கேட்டேன் நான்.

"நான்கு மாதத்துக்குப் பிறகு போயிருந்தேனா! "நாங்கள் செத்துப் போனம் என்று பார்க்க வந்தாயா?" என்று குழம்பிப் போனாள் அம்மா. சமாதானப் படுத்த பெரிய பாடாய்ப் போச்சு" என்றான்.

"நீங்கள் எல்லாம் கல்யாணமானா இத்தனை காலமாக வளர்த்த தாயை, தந்தையை, பிறந்த வீட்டை ஏன் மறக்கிறீங்க?



கொஞ்ச நேரத்தை ஒதுக்கி அங்கேயும் அடிக்கடி போய்வந்தால் என்ன?" சூடாகவே கேட்டேன்.

"டேய், திட்டமிட்டு ஒன்றும் செய்வது கிடையாது. தங்களுக்கென்று ஒரு குடும்பம், பொறுப்பு, நிர்வாகம் உண்டாயிற்றா அந்த வட்டத்திற்குள்ள வளைய வருவதற்கே நேரம் சரியாகும். வேலை நாட்களென்றால் வேலை, வீடு இப்படியே காலம் போகும். லீவு வந்ததென்றால் வேலைப்பழுவால் வீட்டில் ஓய்வெடுக்கவே மனம் சொல்லும். இது இப்ப உனக்குப் புரியாது. நீயும் ஒரு தனி வாழ்க்கைய அமைச்சுப்பார். அப்போ அனுபவத்தில் தான் தெரிய வேண்டிவரும்!" விபரப்படுத்தினான். சுரேஷ்.

எனக்கு எங்கோ உறைத்தது. உணர்ந்து கொண்டேன். எதிர்காலத்தில் எனக்கும் இதே நிலமை உருவாகலாம். அம்மாவிற்கு அண்ணாவின் நிலையை தெளிவு படுத்தி புரியவைக்க வேண்டும். அவரின் மேலுள்ள வீண் கோபத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று நினைத்தவனாய் அலுவலக வேலையில் மூழ்க ஆரம்பித்தேன்.

---

# அன்றே மரணித்தவன்

நித்தியாவை நினைவுகள் வாள் கொண்டு அறுக்க ஆரம்பித்தன. அவளால் தன்னைத் தான் கட்டுப்படுத்திக்கொள்ள இயலவில்லை.

மனம், ரஞ்சனி சொன்னவற்றை எண்ணி எண்ணிப் பிசைய ஆரம்பித்தது. விழிகளில் நீர் திரையிட்டது. அவளால் பரீட்சைக்கு நிம்மதியாகப் படிக்க முடியவில்லை. புத்தகத்தை மூடிவைத்து விட்டு றேடியோவை போட்டாள். மகளிர் கேட்டவையில் சுசீலாவின் சோக கீதங்கள் தொகுத்து மனதை துளைத்துக் கொண்டிருந்தார் ராஜேஸ்வரி சண்முகம். மனம் அதில் சற்று உழைச்சல் அடங்க, எழுந்து முகம் கழுவி தலைவாரிக் கொண்டு சுடிதாருக்குள் உடல் புதைத்து சைக்கிளை எடுத்தவள் காற்றாய்ப் பறந்தாள்.

காற்றில் கலந்து வந்த சுசிலா காதோரம் "யாரைத் தான் நம்புவதோ....பேதை நெஞ்சம் அம்மம்மா பூமியிலே யாவும் வஞ்சம்" பாடிக் கொண்டிருக்க பதைபதைத்த மனதோடு பெடலை கோபத்துடன் வேகமாக மிதித்தாள்.

அதை விட வேகமாக நினைவுகள் மனதில் மிதிபட்டு நசிபட்டபோது கண் வழி லேசாக ஈரம் கசிய இமைகளை வெட்டி நீரைத் திரையிட்டாள் நித்தியா.

'கோபியா இப்படி.....?' நித்தியாவால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. எதற்காக என்னிடம் காதல் கீதல் என்று கண்ணீர் விட்டு நாடகமாடினான். 'நீரின்றி மீன் இல்லை நிலவின்றி வானில்லை. நீயின்றி நானில்லை' என்று கடிதம் வேறு. கோபத்தில் அவள் ரோஜா முகம் குப்பென்று சிவந்தது.

"நித்தியா உன்னிடம் முக்கியமான விசயம் கதைக்க வேணும்." குரோட்டன் செடிக்கு நீர் வார்த்துக்கொண்டு நின்ற நித்தியாவை கையில் பிடித்து இழுத்துச் சென்றாள் ரஞ்சனி. ஹோஸ்பைப்பை நிலத்தில் போட்டு விட்டு நீர் சுதந்திரமாகப் பாய ரஞ்சனியின் பிடிக்குள் கட்டுண்டு பின்னேபோனாள் நித்தியா. 'என்னவாக இருக்கும்' என்று மனம் படபடத்தது.

வீட்டின் பின்புறம் சாய்ந்த தென்னை மரத்தடிக்கு வந்ததும் தென்னையில் மெதுவாக சாய்ந்தபடி ரஞ்சனி சொன்னதைக் கேட்டதும் நித்தியாவுக்கு நிலம் வெடித்து தன்னை விழுங்கி. இருட்டுக்குள் எதுவுமே தெரியாத உலகுக்குள் விழுந்து அவஸ்தைப் படுவது போல உணர்வு ஏற்பட்டது.

கோபியிடம் இருந்து தூது வந்திருக்கும் என்று சந்தோசச் சிலிர்ப்புடன் வந்தவளுக்கு மனமும் உடலும் வியர்க்க அவள் உரைத்தது உயிர்வரை உதைத்தது. "கோபிக்கும் ராஜசேகரின் மகள் தீபிகாவுக்கும் கல்யாணம் நிச்சயமாகிட்டுது. இன்றைக்கு நான் பிரியா வீட்டுக்கு போன போது கோபி வீட்டார் பத்திரிகை வைத்ததைப் பார்த்தேன். நீ நம்பமாட்டாய் என்று தான் பிரியாட்டை கேட்டு பத்திரிகையை வாங்கி வந்தேன்" அவள் மடித்து பக்குவமாய் பாவாடை மடிப்பில் செருகி வைத்த கல்யாணப் பத்திரிகையை நித்தியாவின் கையில் கொடுத்த



போது கைகள் நடுங்க கவாங்கியவள் அதைப் படித்த போது அவளது காதல் அவளை விட்டு நீங்குவதை உணர்ந்தாள்.

தீபிகா, ராஜசேகரின் ஒரே பெண். நித்தியா போல் நடுத்தரக் குடும்பம் அல்ல. ஊரிலேயே ராஜசேகரன் தான் வசதியானவர். 'அவரது சொத்துக்கு ஆசைப்பட்டா கோபி இப்படி மாறினான்?' மனம் ஆத்திரத்தில் பொங்க அதரங்கள் துடிக்க அழுகையை கட்டுப்படுத்திக் கொண்டே மௌனமாக ரஞ்சனியை நோக்கினாள்.

நித்தியாவின் நிலையை எண்ணி கவலைப்பட்ட ரஞ்சனி "இதுக்குப் போய் கவலைப்படாதே நித்தியா; சனியன் விட்டுது என்று நினைத்துக் கொள். காலைப் பிடிச்சுக் கெஞ்சாத குறையாக உன்ரை காதலுக்காய் கெஞ்சிப் போட்டு இப்பிடி காலை வாரிட்டானே. நல்ல காலம் முழுமையாக நீ அவனை நம்பிறதுக்கு முதலே அவன்ரை சுயரூபத்தை கண்டது. இல்லையெண்டால் என்ன ஆகியிருக்கும்?"

நினைவுகளில் மூழ்கிப்போனவளை "வீட்டிலை சொல்லிவிட்டு வந்தியா? நீ அடிபட்டுச் சாகிறதுக்கு என்ரை வாகனம் தான் உனக்குக் கிடைத்துதா" அதட்டிய குரலால் நினைவு கலைந்தவள் பிறேக் போட்டு சைக்கிளை நிறுத்தும்போது பேயறைந்தவள் போலானாள்.

காரின் பின்சீற்றில் கோபி உட்கார்ந்து இருந்தான். நித்தியாவைக் கண்டதும் எதிர்பாராத சந்திப்பில் முகம் இறுகிப் போனவன் தன்னை சுதாகரித்துக் கொண்டு கார் கதவைத் திறந்து நித்தியாவின் அருகில் வந்தான்.

"என்ன நித்தியா ஆளே அடையாளம் காண முடியாதளவுக்கு அசத்தலாக இருக்கிறாய்" குறும்புப் புன்னகையுடன் கேட்ட போது நித்தியா தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"எங்கே அவசரமாகப் போறாப் போலை?" அசடு வழியும் அவனை அருவருப்புடன் நோக்கியவள் "உங்க வீட்டுக்குத்தான்" என்றாள். "எங்க வீட்டுக்கா.. என்னைப் பார்க்கவா... நமக்குள்ள ஒற்றுமையைப் பார்த்தாயா.. நான் உன்னை நினைச்சுவாறன்; நீ என்னை நினைச்சு வந்திருக்கிறாய்."

ஏதோ பெரும் அதிசயத்தை கண்டு பிடித்தவன் போல் தன்னை மறந்து சிரித்தவன் முன் கல்யாணப்பத்திரிகையை நீட்டினாள் நித்தியா. சிரிப்பு மாறி எதையோ மறைக்க முயல்பவன் போல் தடுமாற,

"என்னைக் காதலிக்கிறவன் மாதிரி இத்தனை நாளும் நாடகமா ஆடினாய்? ஏன் உனக்கு இப்பிடி ஒரு புத்தி? பணத்துக்கும் பகட்டுக்கும் ஆசைப்படுகிற உனக்கு காதல் ஒரு கேடா?" ஆத்திரத்தில் வெடித்தாள்.

கோபி இடதுகை உள்ளங்கையால் தனது முகத்தை துடைத்துக்கொண்டான். கண்களில் அலட்சியம் இருந்தது.

"இங்கே பார் நித்தியா! காதலித்தால் கல்யாணம் பண்ணத்தான் வேண்டுமென்று சட்டமா என்ன? நீ சரியென்று சொல்லு! தீபிகாவை கல்யாணம் செய்த பிறகும் நான் உன்னை காதலிக்க ரெடி."

## ஜெயந்தி ஜெய்சங்கர்

நித்தியா முகம் சிவந்தாள். சைக்கிளை திருப்பி புறப்பட்டவளை ஹான்டிலில் பிடித்து நிறுத்தி, "என்ன நித்தியா பதிலே சொல்லா மல் போகிறாய்?"

ஒரு புழுவைப் போல அவனைப் பார்த்துக்கொண்டே சொன்னாள்:

"இன்றல்ல அன்றே நீ செத்துப் போய்விட்டாய். தெரியாமல் காதலித்து விட்டேன். இன்று நாறும்போதுதான் பிணம் என்று விளங்கிக்கொண்டேன். என்ன பார்க்கிறாய்.....போடா....!"

சைக்கிளில் ஏறி பெடலை மிதித்தபோது மனம் இலேசாக இருப்பதாக உணர்ந்தாள். 'படிக்க வேண்டும், பரீட்சை முக்கியம்' மனசு உற்சாகமாகக் கூறியது.



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

## தாமதித்தால்



அரியாசனத்தில் மன்னன்.

மன்னன்-ஆனால், முதிரா இளைஞன். இப்போதுதான் உதட்டுக்கு மேலே பயிர் வளரத் தொடங்கியிருக்கிறது.

தந்தையின் திடீர் மரணம் தனயனை மகுடம் சுமக்க வைத்துவிட்டது.

வாலிப விளையாட்டில் பருவப் பெண்களின் உருவ எழில்களில் மோகித்துக் கிடந்தவனை 'வா' என்று அழைத்தது அரியாசனம்.

வந்து அமர்ந்தவனுக்கு தலையும் புரியவில்லை, காலும் புரியவில்லை.

நாட்டு நிலவரத்தை ஆராய்வதைவிட நடனப் பெண்களின் இடையசைவுகளை ரசிப்பதுதான் இளம் மன்னனுக்குப் பிடித்திருந்தது.

'ஆடும் மாங்கனி, கூடுவதெப்படி?'

கேட்டது மன்னன் அல்லவா? கற்றுக்கொடுத்தனர் நடன மங்கையர். பெற்றும் கொண்டனர் பெரும் தொகைப் பரிசுகள்!

தினம் ஒரு அழகி. விதம் விதம் சுவைகள்!

சாமக் கோழி கூவுவதும் தெரியாமல் காமப் பாடம் பயின்றான் விளையாட்டு வேந்தன்.

இடையை வருடி "இதுதான் கொடியோ?" என்றான் இன்னும் இறங்கி. "எதுதான் எல்லை?" என்றான் கிறங்கி.

"தாருங்கள் காணலாம்" என்றனர் அழகிகள். பொன்னும் வெள்ளியும் தாராளமாய் கொடுத்தான்.

"தழுவுங்கள் செல்லலாம், சுகத்தின் சுரங்கத்தில் நீந்தலாம்."

சுற்றியிருந்த அழகிகள் சுகராகம் இசைத்தனர்.

அழகியின் மார்பில் முகம் புதைத்து சுகம் விசாரித்துக்கொண்டிருந்தவனுக்கு, 'அமைச்சர் உடனே காணவேண்டுமாம்' என்ற செய்தி எரிச்சல் தந்தது.

அறுசுவை விருந்து. கனியை சுவைக்க தொடங்கும்போதே பணியைப் பற்றி நினைவூட்ட அமைச்சர் வரலாமோ? வந்துவிட்டாரே!

எட்டி உதைக்கலாம் போல துள்ளிக் குதித்தது உள்ளே ஆத்திரம்-என்றாலும் மறைத்துக்கொண்டு

"வாருங்கள் அமைச்சரே, இந்த வயதில் என்றாலும் ஓய்வெடுக்கக்கூடாதா? ஓடியாடித்திரியும் வயதா இது?"

"என்ன செய்வது மன்னா, நிலைமை அப்படி, நிதானிக்க நேரமில்லை!"

என்ன குடியா முழுகப்போகிறது?"

"குடியோடு சேர்ந்து தங்கள் முடியும் மூழ்கிவிடுமோ என்று நினைத்துத்தான் பதைத்துப்போனேன்!"

"என்ன சொல்கிறீர் அமைச்சரே?"

"சாளுக்கியன் கப்பம் கேட்டு மடல் அனுப்பியிருக்கிறான்"

இதைக் கேட்டவுடன் மன்னன் துடித்தெழுவான், முகம் சிவக்க 'போர் முரசு எங்கே?' என்று கேட்பான் என்றெல்லாம் நினைத்தார் அமைச்சர்.

ஆனால் இளம் மன்னன் சற்றும் கலங்காமல் கேட்டான்;

"எவ்வளவு வேண்டுமாம்?"

"மன்னா இது மதியீனம்!"

"மன்னவனுக்கே மதிபற்றிச் சொல்வது அதிகப்பிரசங்கித்தனம்!"

"மன்னித்துக்கொள்ளுங்கள்! மக்கள் மீதும், தங்கள் மகுடம் மீதும் கொண்ட மாறாத விசுவாசத்தால் தகாத வார்த்தைகளை வீசிவிட்டேன்!"

"பரவாயில்லை. சாளுக்கியன் கேட்கும் கப்பத்தை வீசியெறிந்துவிடலாம்!"

"சாளுக்கியன் படைகள் நாம் அஞ்சுமளவுக்கு அப்படியொன்றும் பலமானவை அல்ல. கேட்டதும் கொடுத்தோமானால் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். குட்டியதும் குனிந்தோமானால் குட்டிக்கொண்டே இருப்பார்கள்!"

"அதனால்.....?"

மன்னனுக்கு அவசரம்.

பஞ்சணையில் படித்த கதை முன்னுரையோடு தடைபட்டு நிற்கிறதல்லவா. அதுதான் அவசரம். அமைச்சர் பொறுமையாக ஆனால் அழுத்தமாகச் சொன்னார்;

"கப்பம் தரமுடியாது. களத்தில் தருகிறோம்; கப்பத்தையல்ல, கடும் தோல்வியை! என்று சொல்லிவிட வேண்டியதுதான்!"

"மன்னவன் முறைத்தான்.

"இங்கு நான் மன்னரா? அல்லது நீர் மன்னரா?"

"மன்னா...!"

"அப்படியானால் சொன்னதைச் செய்யும்! சென்றுவாரும்!"

"உத்தரவு!"

அமைச்சர் செல்ல மன்னன் பறந்தான் பஞ்சணைக்கு.

முத்த ஒத்திகை, சித்தம் முழுவதும் மோக யாத்திரை! உறக்கம் ஒத்திவைக்கப்பட்டது. அதனால் கிறக்கத்தில் மட்டுமே அவ்வப்போது விழிகள் திறந்து மூடிக் கொண்டன!

"இன்னும் தாருங்கள், இன்னும் தாருங்கள்."

அழகி ஊட்டிய மோக வாக்கியம், மன்னன் நெஞ்சத்தில் அதுவே பாக்கியம் என்று பட்டது.

மாந்தளிர் மேனியின் இரகசியம் யாவையும் ஐம்புலன் மூலம் அறிந்துமகிழ்ந்து மன்னவன் தூங்கியது பகலில் மட்டுமே!

'பலவீன மன்னன்! தலைவன் இல்லாத படை செருக்களத்தில் சமர் நடத்தி வெல்லாது.'

சாளுக்கியன் கணக்குப் போட்டான். கப்பம் கேட்டவன், இப்போது நாடும் தேவை என்று படையெடுத்துவந்தான்.

தடுத்திருக்க முடியும். கொற்றவனே கப்பம் கொடுத்தான் என்ற செய்தி சாளுக்கியன் படையை எதிர்க்கும் துணிச்சலை கொய்துபோட்டது.

செய்திகள் அறிந்து துடித்துப் போனான் மன்னன்.

தோகைகளின் துகில் அகற்றி சுகம் கண்ட கரங்களால் வாளெடுத்தபோது பழக்கமின்மையால் நடுக்கம் ஏற்பட்டது.

அமைச்சரை அழைத்தான்.

"என்னவோ மன்னா?"

"என்ன செய்துகொண்டிருக்கிறீர்?"

"கொடுத்த கப்பத்துக்கெல்லாம் கணக்கெழுதிக்கொண்டிருக்கிறேன்!"

## தருவது ரசிகன்

"கணக்கெழுத இதுவா நேரம்? அருகில் வந்துவிட்டான் எதிரி!"

"அமைச்சர் சோகமே உருவாக நின்று சாந்தமாகப் புன்னகைத்தார்.

"மன்னா! என்ன செய்யவேண்டும் நான்?"

"போருக்கு தயாராக்க வேண்டாமா நம் பூமியை!"

"வேண்டாம்."

"ஏன்?"

"முடியாது! காலம் கடந்த பின்னர் ஏன் இந்த யுத்தக்கோலம்? விதைத்தால் தானே அறுவடைக்கு ஆயத்தம் செய்ய வேண்டும்! எதிரி கேட்ட கப்பத்தைக் கொடுத்தீர்; குடிமக்களிடம் கோழைத்தனத்தை விதைத்தீர்! வீரத்தை அறுவடைசெய்து வா என்றால்



இப்போது நான் எங்கு போவேன்?"

அமைச்சர் சொல்லிக்கொண்டிருந்தபோதே சாளுக்கிய படை அரண்மனையைக் கைப்பற்றி உள்ளே புகுந்தது.

வெளியே அரவம் கேட்டதும் அமைச்சர் சொன்னார்.

"அடுத்தது நாம் தான்!"

"தவறு என்மீது தான்!"

மன்னவன் முதல் தடவையாக வருந்தினான்.

அமைச்சர் சொன்னார்

"மன்னா! எதை எப்போது செய்ய வேண்டும்? இன்றே செய்ய வேண்டியது எது? சற்றே காலம் தள்ளி கவனிக்க வேண்டியது எது? இரண்டையும் அறிந்து அதற்கேற்ப செயற்பட்டால் நேரம் நன்றாக இருக்கும் நமக்கு! தவறினால் தண்டனை இதுதான்."

மன்னவனுக்கும் புரிந்தது. புரிந்த போது காலம் கடந்துபோய் இருந்தது.

அமைச்சர் சொன்ன கருத்தைத்தான் திருவள்ளுவரும் உரைத்திருக்கிறார் இப்படி;

"தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை"

அதிகாரம்-68.
பாடல்-672.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-111

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ■ | 1 | | | | ■ | 2 |
| 3 | | ■ | 4 | | 5 | |
| 6 | | | | ■ | | |
| 7 | | | | 8 | ■ | |
| ■ | | ■ | ■ | | ■ | |
| 9 | ■ | 10 | | | | ■ |
| 11 | | | ■ | 12 | | ■ |

### இடமிருந்து வலம்

01. மாயக் கண்ணனின் கையில் இருப்பது இதனால் தான் செய்யப்படுகின்றது.
04 இங்கு பொருட்களை வாங்கலாம், விற்கலாம்.
06. ஒரு காய்கறி.
07. தென்னாலி இராமனை இப்படிச் சொல்வார்கள்.
10. சோர்வு என்றும் அழைக்கலாம்.
11. ஜனகன் அரசாண்ட நாடு.
12. நண்பன்-எதிர்ச்சொல்

### மேலிருந்து கீழ்

01. முதலையும் இவனும் கொண்டது விடா.
02. இவன் பேச்சு விடிந்தால் போச்சு.
03. மணிமேகலையின் தாய்.
05. காட்டில் வாழும் பறவை.
08. இதுவும் ஒரு கழிவுப் பொருள் தான்.
09. நெல்லில் இருந்து இது அகன்றால் அரிசி.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 05.08.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-111
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-109ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ஈ | ■ | 2 ச | கோ | 3 த | ர | ன் |
| 4 கை | க் | கு | ட் | டை | ■ | ■ |
| ■ | ■ | ன | ■ | ■ | 5 அ | லை |
| 6 அ | 7 க | ம் | பா | 8 வ | ம் | ■ |
| ர | ங் | ■ | 9 பி | ர | மி | ட் |
| ங் | 10 கா | ந் | த | ம் | ■ | ■ |
| கு | ரு | ■ | ■ | 11 பு | ர | வி |

குறுக்கெழுத்துப் போட்டி இல. 109இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.

1. என். விக்னேஸ்வரன், கொழும்பு-05.
2. எஸ். அபிநயா, பேராதனை.
3. என். றிஸ்னியா, உக்குவளை.
4. எஸ். முகம்மட் சபீக், அக்கரைப்பற்று-06.
5. செல்வி. ரி. சங்கீதா, திருகோணமலை.
6. திருமதி. பரீதா நிலாம் டீன், புத்தளம்.
7. எம். அமானுல்லா, ராஜகிரிய.
8. கே.பி. ஆதவன், வவுனியா.
9. செல்வி. வி. சோபனா, அப்புத்தளை.
10. திருமதி. வி. சிறீரங்கன், தெஹிவளை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

---

பணத்திற்காக நட்புக்கொள்ள வரும் சிநேகம் பற்றி தங்களின் கருத்து என்ன சிந்தியா?

தங்கராசா வனிதா-கல்முனை-02.

மரம் பழுத்தால் வௌவால் வரும். காரியம் முடியப் பறந்துவிடும்.

▫▫

நான் ஒருவரை மனதால் விரும்புகிறேன். அவர் என்னை விரும்பவில்லை. இதற்கு ஒரு யோசனை சொல்லுங்கள்?

சிறிசாந்த மலர்-வத்தளை.

விரும்பவில்லை என்று உங்களுக்கே தெரியும்போது யோசனை கேட்பதும் வேஸ்ட். யோசனை சொல்வதும் அதைவிட வேஸ்ட்.

▫▫




பெரும்பான்மை இனப் பத்திரிகைகள் இனவாதத்தை தூண்டுவது உண்மையா?

கே.ரவிமாறன்-கொழும்பு-05.

பொதுவாகவே அப்படி சொல்வது தவறு. உதாரணத்திற்கு யாழ் மக்களின் அவலத்தைக் காட்ட 'ராவய' பத்திரிகை வெளியிட்ட புகைப்படம் இது. (யாழ் வைத்திய சாலை முன் 14.07.95 எடுக்கப்பட்ட புகைப்படம் அது)

▫▫

நான் வீரக்தியின் உச்சத்திற்கு சென்றுவிட்டேன். தற்கொலை செய்து கொள்ளலாமா?

கே.தினேஷ்-மாத்தளை.

உமது விரக்தியின் உயரம் எவ்வளவு என்று ஒரு குத்துமதிப்பாகவேனும் தெரிந்தால்தான், அங்கிருந்து தற்கொலை செய்ய முடியுமா என்று, சொல்ல வசதியாக இருக்கும்.

▫▫

நாட்டில் மீண்டும் போர் நிறுத்தம் உண்டாகுமா?

ச.தமிழ்ச்செல்வி-குவைட்.

ஆயத்தங்கள் நடப்பதாகக் கேள்வி, இன்னும் ஒரு கட்டத்திற்கு போரை நகர்த்தி நிறுத்த! (பின் மீண்டும் தொடரும்) நீங்கள் கேட்ட அர்த்தத்திலான போர் நிறுத்தம் தற்போதைக்கு இல்லை என்பது சர்வநிச்சயம்!

▫▫

அரசியல் தீர்வுத் திட்டம் எப்போது வரும்?

கு. பாலமூர்த்தி-கொழும்பு-10.

விரைவில் வரும். (எப்போது கேட்டாலும் இப்படியேதான் சொல்லுவேன்)

▫▫

கிழக்கு மாகாணத்தில் இராணுவ முகாம்கள் அகற்றப்படுவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

மோகன்-மட்/கன்னன்குடா.

சிறிய முகாம்களில் குறைந்தளவில் இருக்காமல் பெரிய முகாம்களில் கூடியிருப்பது இராணுவத்தினருக்கு ஒரு தெம்பு. தாம் நடமாடும் பகுதிகள் விரிவாகிவருவதால் புலிகளுக்கும் ஒரு தெம்பு. அடிக்கடி இறங்கி ஏறவேண்டியிருக்காது என்று பயணிகளுக்கும் சின்னதாய் ஒரு ஆறுதல்.

▫▫

## சிந்தியா பதில்கள்

பொதுத் தேர்தல் விரைவில் வருமா?

எல். நஜிமுதீன்-கண்டி.

வதந்திகளை நம்பவேண்டாம் நஜிமுதீன். குறைந்தபட்சம் இந்த வருட இறுதிவரையாவது எனது கருத்துக்கு நான் உத்தரவாதம், நம்புங்கள்!

▫▫

பெண் என்பவள் எங்கு சந்தோஷமாக இருக்கிறாள்? பிறந்த வீட்டிலா? புகுந்த வீட்டிலா?

க.யோகநாதன்-பண்டாரவளை.

அவளையும் ஒரு சக மனிஷியாக எங்கு மதிக்கிறார்களோ அங்கு.

▫▫

அன்பின் சிந்தியா! நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாடுகளில் அகதி வாழ்க்கை வாழும் தமிழர்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?

பி.வசந்தன்-பிரான்ஸ்.

பணம் காய்க்கும் மரங்களாக நினைக்கப்படுகிறார்கள். மனம் காய்ந்து வெந்து கொண்டிருக்கிறார்கள் என்று பலர் நினைப்பதேயில்லை.

▫▫

உங்கள் பெயர்தான் சிந்தியாவோ?

ஏ.எல்.எம்.இப்றாகீம்-பொத்துவில்-01.

இப்படியொரு சிறந்த கேள்வியை கேட்கும் நீர்தான் இப்றாகீம் என்பவரோ? (வீ.பா.கட்டப்பொம்மன் படம் எத்தனை தடவை பார்த்தீர்?)

▫▫



படிப்பகம்

www.padippakam.com

# மகாபாரதம்

அங்கம் 87

இவ்வாரம் (30.07.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:**

கடோற்கஜனின் வீழ்ச்சியின் பின்
கவுரவரின் படையணியில்
கடுவேகம்தனைக் கண்டு
பாண்டவரோ கலங்குகிறார்!
குலம்முழுதும் அழிந்து வரும்
வேளையிலும் காவலனோ
நிலைதளர்ந்து புது இருளில்
புகுவதையே காண்கின்றோம்!

**—காட்சி தொடக்கம்—**

அஸ்தினாபுரி அரண்மனை- திருதராட்டிரரும் சஞ்சயனும், உரையாடுகின்றனர். கடோற்கஜனைக் கொல்வதற்கு கர்ணன் திவ்யாஸ்திரத்தை பயன்படுத்த துரியோதனன் தூண்டியிருக்கலாகாதென அதிருப்தி தெரிவிக்கிறார் திருதராட்டிரர். போர்க்களத்தில் அப்போதிருந்த சூழ்நிலை தான் துரியோதனனுக்கு அந்த எண்ணத்தைத் தந்திருக்கிறது என்று சஞ்சயன் கூறுகிறான்.

**—காட்சி மாற்றம்—**

குருச்சேத்திரம்-விராட மன்னர் தனது படையுடன் துரோணரை நோக்கி முன்னேறுகிறார். துரோணர் கண்மூடி ஜெபித்ததும் திவ்யாஸ்திரம் அவருடைய கைகளில் சேர்கிறது. அதேவேளை தேவேந்திரன் அவர் முன் தோன்றுகிறான்.

**இந்தி:** ஒ ஆச்சாரியர் அவர்களே! திவ்யாஸ்திரப் பிரயோகம் தங்களுக்கு உகந்ததல்லவே?

**துரோ:** ஏன்? அர்ச்சுனனுக்கு எதிராகப் போரிடப் போகிறேன் என்பதனாலா? தேவர்களைப் பற்றி நான் நன்கு அறிவேன் தேவேந்திரனே! அங்க தேசத்து அரசன் கர்ணனுடன் கூடவே பிறந்த அணிகலன்களான கவசகுண்டலங்களை கவர்ந்தவர் தாங்கள் தான் என்பதை நான் அறியமாட்டேனா?

**இந்தி:** ஆச்சாரியார் அவர்களே! தேவர்களுடைய பிரதிநிதியாகத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன். திவ்வியாஸ்திரத்தை பிரயோகிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்! தர்மத்தைப் பாதுகாப்பதற்காத மட்டுமே இவ்வாயுதம் பயன்படுத்தப் பட வேண்டும்!

**துரோ:** நான் தர்ம நியாயங்களுக்கு அப்பாற்பட்டவன் என்று நீங்கள் எவ்வாறு கருத முடியும்? எனக்கு எது சரியெனப்பட்டதோ அதனையே நான் செய்கிறேன்!

இப்பொழுது பிரம்மா தோன்றுகிறார்.

**பிரம்மா:** பொறுங்கள்! பாரத்துவஜரின் புத்திரரே பொறுங்கள்!

**துரோ:** என்றும் நிலைத்திருக்கும் தந்தை பிரம்மாவே! இந்தத் துரோணரின் வணக்கங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். குருதிக் கடலில் குளித்தபடி இருக்கும் நான் தங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? தயவு செய்து கட்டளையிடுங்கள்!

**பிரம்:** கட்டளையல்ல ஆச்சாரியாரே! நாராயணன் மீது ஆணையிட்டுக் கேட்டுக் கொள்ளுகிறேன்! திவ்வியாஸ்திரத்தைப் பயன்படுத்த வேண்டாம். அந்தணராகிய தாங்கள் குருவின் நிலையில் இருந்து பிறள வேண்டாம். தங்களுடைய கடமையை விடுத்து ஒரு சத்திரியனுக்குரிய இரத்தக் குளிப்பினை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்?

**துரோ:** எனது குரு நாதர் பரசுராமர் ஓர் அந்தணர்; இருப்பினும் இருபத்தொரு தடவை யுத்தம் புரிந்திருக்கிறார். வேதங்களுடன் மட்டும் ஈடுபடும் போது பிராமணனாக இருக்கலாம். வேத நூல்களை ஒரு புறம் தள்ளிவிட்டு ஆயுதங்களை எடுத்துக் கொண்டால் அவன் சத்திரியனாகின்றான். கவுரவ படையின் தளபதியாகிய நான், அஸ்தினாபுரத்தின் பாதுகாப்புக்காக, எனது கடமையைச் செய்ய தயைகூர்ந்து என்னை விட்டுவிடுங்கள்!

**பிரம்:** ஆச்சாரியாரே! உம்மை எச்சரிப்பது எனது கடமை. அந்தணனுக்குரிய கடமைகளை விட்டு வெளியேறிய உம்மைத்தடுக்க நான் விரும்பவில்லை. நீர் விரும்பிய எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தலாம். திஷ்டத்துய்மன் இந்த உலகத்தில் எதற்காகப் பிறந்திருக்கிறான் என்பதைத் தாம் அறிவீர் என்பது எனக்குத் தெரியும்!

துரோணர் வணங் குகிறார். இளமையில் துருபதனுடன் ஒரே குருகுலத்தில் வாழ்ந்த காலத்தில் இருவருக்கும் இருந்த நட்பையும், பிரியும்போது துருபதன் தனக்களித்த வாக்கினை மறந்து போனதையும் நட்புக்கு ஏற்ற அந்தஸ்து தனக்கில்லை என்று அவமானப் படுத்தியதனால் துருபதனை தனது மாணாக்கன் அர்ச்சுனனால் தோற்கடிக்க வைத்த விபரங்களையும் பிரம்மதேவனிடம் ஆச்சாரியார் கூறுகிறார். தனக்கு உரிய அந்தஸ்தினை அளித்த அஸ்தினாபுரியின் ஆட்சிக்கு நன்றிக் கடனாக படைத்தளபதியாக வேண்டிய நிர்ப்ப தந்தம் ஏற்பட்டதையும் விளக்குகிறார்.

**

பிரம்மா மறைகிறார். துரோணாச்சாரியாரை நோக்கி விராட மன்னர் படையுடன் வந்ததும். இருவருக்குமிடையில் யுத்தம் தொடர்கிறது. விராம மன்னர் கடும் காயமுறுகிறார். இதனை அவதானித்த துருபத மன்னன் துரோணரை நோக்கிச் செல்கிறர். இதேவேளை ஆச்சாரியாரின் பாணம் விராட மன்னரின் கழுத்தில் பாய்ந்து அவர் மடிந்து விழ்கிறார்.

**துருப:** துரோணா! விராட மன்னரைக் கொன்றமைக்காக உம்மைக் கொல்லப் போகிறேன்! அத்தகைய மாவீரரைக் கொன்று விட்டீரே!

**துரோ:** நண்பனே! என்னுடைய பாதையைவிட்டு அப்பால் செல்லா விட்டால் மற்றுமொரு வீரனின் உயிர் பலியாகும்! இதுவே நமது இறுதிச் சந்திப்பாகவும் இருக்கலாம் என்பதனால் நமது பழைய தோழமையை ஒரு தடவையாவது புதுப்பித்துக் கொள்ளலாம்!

**துருப:** துரோணா! உமது தோழமை எனக்கு உகந்ததல்ல!

இருவருக்கும் சண்டை மூள்கிறது. பின்னர் வாட் சண்டையிடும்போது துருபதனை துரோணர் கொன்றுவிடுகிறார். தனது நண்பனின் சடலத்துக்கு இறுதி மரியாதை செலுத்துகிறார்.

**—காட்சி மாற்றம்—**

அஸ்தினாபுரம்-திருதராஷ்டிரர் அரண்மனை.

**திருத:** சஞ்சயா! துரோணாச்சாரியார் அவருக்கு அளிக்கப்பட்ட சலுகைகளுக்கெல்லாம் பிரதி உபகாரம் செய்து விட்டார். இரு பெரும் வீரர்களை ஆச்சாரியார் வீழத்தியமை துரியோதனனுக்கு சுபசகுனமே! வாசுதேவனை துரியோதனனின் பாதையிலிருந்து விலக்கிவிட்டால், என் மகனின் எதிர்காலம் பாதுகாப்பாகிவிடும்! 98 புதல்வர்களை இழந்து துன்பத்திலாழ்ந்திருந்த எனக்கு இன்று உண்மையிலேயே பெருமகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆச்சாரியார் அடுத்து யாரைக் கொல்லப் போகிறர் என்பதனைப் பார்த்துக் கூறு!

**—காட்சி மாற்றம்—**

குருச்சேத்திரம்-துரோணருடன் துரியோதனன்.

**துரி:** குருதேவர் அவர்களே! விராட மன்னரும் துருபத மன்னரும் வீழ்த்தப் பட்டதால் மட்டும் நான் திருப்திப் பட்டுவிமாட்டேன் பாண்டவர்கள் மரணத்தையே காண விரும்புகிறேன்!

**துரோ:** அவர்களைக் கொல்வது அத்தகைய சுலாமான காரியமல்ல துரியோதனா!

**துரி:** ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்? தங்களிடம் திவ்யாஸ்திரங்கள் உள்ளனவே! அவர்கள் விழித்திருக்கும்போது கொல்ல முடியாவிட்டால், அவர்கள் தூங்கும் போதாவது கொல்லலாமே!

**துரோ:** அத்தகைய முறைகளைக் கையாள என்னால் முடியாது! தொடர்ந்து போராட என்னை விட்டு விட்டு அப்பால் போய்விடு!

**துரி:** பிதாமகரைப்போல் தான் தாங்களும்-போரில் முழுமனதுடன் ஈடுபடவில்லை என்பதை நான் அறிவேன்! வெற்றியை மனதில் கொண்டுதான் போர்கள் நடக்கின்றன. எனது வெற்றியில் உங்களுக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. எனது 98 சகோதரர்கள் மாண்டு போயினர். ஆனால் பாண்டவர் ஐவரும் இன்றுவரை உயிருடனுள்ளனர்.

**துரோ:** துரியோதனா! நான் போர்வீரன்-யமதர்மன் அல்ல!

துரோணர் தேரைச் செலுத்தி தொடர்ந்து பாண்டவர் அணிகளை அழிக்கிறார்.

★ ★ ★

**அர்ச்:** கேசவா! பார்த்தீர்களா?

**கிருஷ்:** பார்த்தா! எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதானிருக்கிறேன்! இன்று ஆச்சாரியாரைத் தடுக்க எவராலும் முடியாது போலுள்ளதே!

**அர்ச்:** அவரை முறியடிக்காவிட்டால் இன்று போரில் நாம் தோல்வி அடைவோமோ?

**கிருஷ்:** போர்க்களத்துக்கான சகல விதிகளையும் கடைப்பிடித்தால் இன்று ஆச்சாரியாரை வீழ்த்துவது கடினம் என்றுதான் சொல்ல வந்தேன்! விதிகளைக் கடைப்பிடிப்பதுதான் தர்மம்! எனினும் சிறிதளவு விலகிச் செல்வது தவறல்ல பார்த்தா! தர்மத்தின் பாதையிலிருந்து விலகிச் செல்பவர்கள் பாவவாளிகளே! அத்தகையோரை அகற்றுவது கடமை என்பதை ஏற்றுக் கொள்வாய்! இது தர்ம யுத்தம் என்பதனை ஏற்றுக்கொள்கிறாயா?

**அர்ச்:** ஆமாம்...?

**கிருஷ்:** இன்று தர்மத்தின் வெற்றிக்கு இடையூறாக இருப்பவர் துரோணர் என்பதனை அறிவாயா?

**அர்ச்:** அதனையும் ஏற்றுக் கொள்கிறேன்!

**கிருஷ்:** பார்த்தா! தர்மத்துக்கான வெற்றிக்கு இடையூறாகவிருக்கும் துரோணரை தோற்கடிப்பது அவசியமாகும்! ஒன்றை மனதில் வைத்துக் கொள்! தர்மத்துக்கு விரோதியை ஒழிப்பதில் தவறேயில்லை. பிதாமகர் பீஷ்மரை வெற்றி கொள்வதற்கு சிகண்டியையும் ஒரு கருவியாகப் பயன்படுத்துவதற்கு நீ தயங்கவில்லை அல்லவா?

**அர்ச்:** அப்போ நான் என்ன செய்ய வேண்டும் கேசவா!

**கிருஷ்:** ஒரேயொரு வழிதான் உண்டு பார்த்தா! ஆச்சாரியாரின் மகன் அஸ்வத்தாமன் இறந்து விட்டன் என்று துரோணரை நம்ப வைக்க வேண்டும்! மகனின் பிரிவாற்றாமையால் துவண்டு போவார். அனைத்து ஆயுதங்களையும் வீசியெறிந்து விடுவார்!

**அர்ச்:** என்னால் இது முடியாது பரந்தாமா பார்த்தா! இத்தகைய பொய் கூறி அடையும் வெற்றியை நான் விரும்பவில்லை கேசவா!

**கிருஷ்:** வெற்றி தோல்வியைப் பற்றி தீர்மானிப்பது உன் செயலல்லவே! அநீதியை எதிர்த்துப் போரிடுவதே உனது கடமை! எச்செயல்களுக்குமுரிய பயனையும் நிர்ணயிக்க உன்னால் முடியாது. கடமையைச் செய்;

**அர்ச்:** மது சூதனா! சூழ்ச்சி வழியில் போர் புரிய என்னால் முடியாது!

**கிருஷ்:** தர்மராஜா யுதிஷ்டிரா! தர்மத்தை நிலை நாட்ட நீயும் மறுக்கப்போகிறாயா?

**யுதிஷ்:** வாசுதேவா! தர்மத்தை நிலை நிறுத்த வேறு வழி இல்லையானால் அத்தகைய பாபத்தினை ஏற்க நான் ஆயத்தமாக இருக்கிறேன்!

**கிருஷ்:** மைத்துனரே! திருப்பாற்கடலைக் கடைந்த போது அமிர்தம் மட்டுமல்ல; விஷமும் தோன்றியது அந்த விஷத்தை; உண்பதற்கு சிவபெருமானே முன்வந்தார்! புருஷோதத்தமரான இராம பிரானே நேர் வழி தவிர்த்து- மறைந்திருந்தே வாலியை வதம் செய்தார்.

இதேவேளை ஒரு யானையின் பிளறல் ஒலி கேட்கிறது.

**கிருஷ்:** அதோ கேட்கிறதே அந்தப் பிளிறல்.... அந்த யானையின் பெயர் என்ன வென்று தெரியுமா மைத்துனரே?

**பீமன்:** அந்த யானையின் பெயர் அஸ்வத்தாமன்!

கிருஷ்ணன் அர்த்தபுஷ்டியோடு பீமனைப் பார்த்து தலையினை அசைக்க பீமன் தனது கதாயுதத்தினைத் தூக்கிக் கொண்டு போய் அஸ்வத்தாமன் எனும் யானையைக் கொன்று விடுகிறான்.

**பீமன்:** அஸ்வத்தாமனைக் கொன்று விட்டேன்! அஸ்வத்தாமனைக் கொன்று விட்டேன்!

**கிருஷ்:** மைத்துனரே! துரோணாச்சாரியார் இதனை உடனடியாக நம்பமாட்டார். நிதானத்துடன் திடமும் அவசியம்!

துரோணரிடம் சென்று பீமன்....

**பீமன்:** குருதேவர் அவர்களே! அஸ்வத்தாமனை நான் கொன்று விட்டேன்!

துரோணர் யுதிஷ்டிரனிடம் உண்மையை அறியச் செல்கிறார். பாண்டவர்கள் சோகமாக நின்று தலை தாழ்த்தி வணங்குகின்றனர்.

**துரோ:** உங்கள் வணக்கங்கள் எனக்குத் தேவையில்லை! தர்மராஜ யுதிஷ்டிரனே! எனக்கு உண்மை தெரிந்தாக வேண்டும்! என் மகன் அஸ்வத்தாமன் கொலை செய்யப்பட்டானா?

கிருஷ்ணரும் யுதிஷ்டிரரும் ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர். ஆச்சாரியார் அழ ஆரம்பித்து விடுகிறார்.

**துரோ:** என் கேள்விக்கு பதில் கூறு யுதிஷ்டிரா!

**யுதிஷ்:** அஸ்வத்தாமன் இறந்ததுதான். மனிதனா மிருகமா என்பது எனக்குத் தெரியாது!

துரோணர் தொடர்ந்து அழுகிறார்.

**காட்சி மாற்றம்—**

அஸ்தினாபுரி திருதராட்டிரரும் சஞ்சயனும்.

**திருத:** என்ன கூறுகிறாய் சஞ்சயா? யுதிஷ்டிரன் பொய் சொன்னானா? பார்த்தாயா? வாசுதேவ கிருஷ்ணன் என் பிள்ளைகள் அனைவரையும் கெடுத்து விட்டான்! ஆச்சாரியாரின் நிலை என்ன என்பதைப் பார்த்துச் சொல் சஞ்சயா!

**சஞ்ச:** ஆச்சாரியார் தனது ஆயுதங்களை கீழே போட்டு விட்டு துயரத்திலாழ்ந்துள்ளார். பீமன் ஏதோ கூறுகிறான்.

***

**பீமன்:** குருதேவர் அவர்களே! அந்தணரான தாங்கள் உபதேசத்துடன் மட்டும் நின்றிருக்க வேண்டும்! சத்திரியருக்குரிய வேலை தங்களுக்குப் பொருந்தாதே!

**துரோ:** குந்தியின் மைந்தர்களே! இதோ உங்கள் குருவின் ஆயுதங்கள்! இவற்றை தேர்ச்சக்கரத்தின் கீழ் போட்டு அழித்து விடுங்கள். எனது மாணாக்கனே எனது மகனைக் கொன்றான் என்பதை என்னால் நம்ப முடியவில்லை! யுதிஷ்டிரர் கூறியது பொய்யாகாது. எனது மாணாக்கரும் என் புதல்வர்களைப் போன்றவர்களே! பீமன் எனது மாணாக்கனாக இல்லாதிருந்தால் அவனைக் கொன்றிருப்பேன்!

துரோணாச்சாரியார் மிகுந்த மனவருத்தத்துடன் இரதத்திலிருந்து இறங்கி தரையில் இருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த திஷ்டத்துய்மன் எவரும் எதிர்பாராத வேளையில் ஆச்சாரியாரின் தலையை வாளினால் கொய்துவிடுகிறான். அர்ச்சுனன் பலமாகக் கத்திக்கொண்டு முன்பாய்கிறான். ஏனையோர் அர்ச்சுனனைத்தடுக்க முற்படுகின்றனர்.

**அர்ச்:** இல்லை..! என்னைத் தடுக்காதீர்கள்! திஷ்டத்துய்மா! கோழையே! நிராயுதபாணியாகிய எங்கள் குருவை சிரச்சேதம் செய்ய எவ்வாறு துணிந்தாய்! உன்னை நான் மன்னிக்க மாட்டேன்! என்னைத் தடுக்காதீர்கள்.....விடுங்கள்!

பாண்டவர் பாசறையில் அர்ச்சுனன் வாளுடன் விரைவதை கிருஷ்ணர் காண்கிறார்.

**கிருஷ்:** பார்த்தா!

**அர்ச்:** திஷ்டத்துய்மனை நான் கொல்வேன்! மதுசூதனா! அவனை நான் கொல்வேன்!

இதேவேளை திரௌபதியுடன் திஷ்டத்துய்மன் பிரவேசிக்கிறான்.

**திரௌ:** வில்வீரரே! திஷ்டத்துய்மன் புரிந்த குற்றம் என்ன? என்னை வேண்டுமானால் அகற்றிவிடுங்கள்! அஸ்தினாபுரி அரசவையில் தலைமுடியைப் பற்றி இழுத்து துகிலுரியப்பட்டு மானபங்கப்படுத்தப்பட்ட அதே திரௌபதி தான் உங்கள் முன் நிற்கிறேன்! கொலை செய்யப்பட்ட இந்த ஆச்சாரியாரும் அந்த அக்கிரமமான செயல்களை அதே அவையில் பார்த்துக் கொண்டிருந்தவர்தான். நமது புதல்வனான வீர அபிமன்யுவை நிராயுதபாணியாக்கிக் கொன்று வீழ்த்தியவர்களின் படைத்தளபதியாக இருப்பவர்தான் வீழ்த்தப்பட்டிருக்கும் இந்த ஆச்சாரியார்! அவையெல்லாவற்றையும் மறந்துவிட்டீர்களா?

**—காட்சி மாற்றம்—**

துரோணாச்சாரியாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளவந்த பாண்டவர்களை அஸ்வத்தாமன் தடுக்கிறான்.

**அஸ்வ:** கோழைகள் எவரும் என் பிதாவின் சடலத்தினைத் தீண்ட வேண்டாம்! தர்மராஜ யுதிஷ்டிரரே! நான் இறந்து விட்டதாக என் தந்தையிடம் பொய் கூறியவர் நீங்கள்தானே! உங்களை மன்னிக்க மாட்டேன்! என் தந்தையைக் கொன்ற நீங்கள் அனைவரும் இதற்கான தண்டனையை நிச்சயம் பெறுவீர்கள்!

அஸ்வத்தாமன் சிதைக்குத் தீ மூட்டுகிறான். பாண்டவர் வணக்கம் செலுத்திவிட்டுத் திரும்புகின்றனர்.

**—காட்சி மாற்றம்—**

அம்புப்படுக்கையில் கிடக்கும் பீஷ்மரிடம் கர்ணன் வருகிறான்.

**பீஷ்ம:** வா கர்ணா! உனக்கு வெற்றி உண்டாகட்டும் என்று என்னால் வாழ்த்த முடியாது. வேறு எவ்வாறு உன்னை நான் வாழ்த்துவது? நீடூழி வாழ வாழ்த்தட்டுமா?

**கர்ண:** தோற்கப்போகும் படையின் தளபதியான நான் நீடூழி வாழ்வது சாத்தியமா பெரியவரே!

**பீஷ்ம:** அப்போ துரோணாச்சாரியார்....? (பதிலை எதிர்பாராமல் அழுகிறார்) நல்ல ஆத்மாக்களெல்லாம் முன்னதாகவே போய்விடுகிறார்கள்! துரியோதனனின் முடிவைக்காண எவருமே மிஞ்சமாட்டார்கள் போல் தோன்றுகிறதே! நீயே படைத்தளபதி ஆகிவிட்டமையினால் இவ்வுலகை விட்டு நீங்க உனக்கும் காலம் நெருங்கி விட்டது போலும்! நீ அவனுடைய நண்பன் அல்லவா? சத்திரியர்கள் எவரும் ஆசாபாசங்களுக்கு அடிமையாகிவிடலாகாதென அவனிடம் கூறிப்பார்!

கர்ணன் விடைபெற கிருஷ்ணரும் பாண்டவரும் அங்கு வருகின்றனர்.

**அர்ச்:** தேரோட்டி மகன் இங்கு ஏன் வந்தான்?

**கிருஷ்:** (கோபமாக)தான வீரர்கர்ணனை தொடர்ந்து இழிவு படுத்துவது உனக்கு அழகல்ல பார்த்தா! வீரர்கள் இவ்வாறு பேசுவது பொருந்தாது குந்தியின் மைந்தனே! அங்கத்துக்கரசனின் தாயை நான் அறிவேன்! அவர் பெருமதிப்புக்குரியவர் என்பதை நம்பு!

**நகுல்:** கர்ணனின் தாயாரை தாங்கள் அறிவீர்களா?

**கிருஷ்:** நகுலா! தாய்மை எய்திய அனைவரும் போற்றுதலுக்கும் மதிப்புக்கும் உரியவர்களே-! அவர்களில் பேதமில்லை. (கங்கை மைந்தர் அருகினில் வந்ததும்) கங்கை மைந்தரே! இந்த வாசுதேவனின் வணக்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்! எனக்கு தங்கள் ஆசி கிடைக்குமா?

**பீஷ்ம:** இல்லை! தமது வருகையால் நான் வாழ்த்துக்களைப் பெற்றுள்ளேன்; கோகுல நந்தனா! முன்பு கோகுலத்தில் திருடிய வெண்ணையில் கொஞ்சம் உரிசி பார்ப்பதற்குத் தந்து எனது வாழ்வு பூரணத்துவமடைய வழிகாட்டலாகாதா?

**கிருஷ்:** (சிரித்துவிட்டு) வெற்றியும் தோல்வியும் எத்தகைய பணிமுடிவில் கிடைக்கும் பெறுபெறேதவிர இவற்றுக்கு எதுவித பெறுமதியுமில்லை என்பதை, தங்களைத் தவிர வேறு எவர் பூரணமாக உணர முடியும்! முடிவுகளை எவராலும் தீர்மானிக்க முடியாது! தாங்கள் முன்னர் எடுத்துத் கொண்ட பிரதிக்ஞை இன்றுள்ள நிலையினை உருவாக்கும் என்பதனை அன்று தாங்கள் அறிந்திருந்தால் அப்போது தாங்கள் அணையிட்டிருப்பீர்களா?

**பீஷ்ம:** யுதிஷ்டிரா! ஏன் நீங்கள் ஐவரும் தடுமாற்றத்துடன் காணப்படுகிறீர்கள்?

**யுதிஷ்:** பிதாமகர் அவர்களே! மாபெரும் பாபச்செயல் ஒன்று புரிந்துவிட்டோம்!

**பீஷ்ம:** நிராயுதபாணி எவரையும் கொன்றீர்களா? பேசுங்கள்! அரக்கு மாளிகைக் கொடுமையைப் போன்றோ அல்லது திரௌபதிக்கு ஏற்பட்ட மானபங்கம் போன்றோ கொடுமைகளை நிச்சயம் புரிந்திருக்க மாட்டீர்கள்!

**யுதிஷ்:** நான் கூறிய ஒரு பொய்-குருமகான் துரோணாச்சாரியாரின் மரணத்துக்குக் காலாகிவிட்டது பிதாமகர் அவர்களே!

**பீஷ்ம:** பொய்யா...? தர்மராஜனான யுதிஷ்டிரனா பொய் கூறினான்? போய்விடுங்கள்! பொய் கூறியமைக்காக நானே கொன்றிருப்பேன்! முடியவில்லை! தாயே சத்தியவதி..!

**கிருஷ்:** கங்கையின் மைந்தரே! தங்களுக்கு உடன்பாடில்லாத எத்தனையோ சம்பவங்கள் நடந்துள்ளன. இவற்றைக் கணக்கிட்டால் தங்கள் வாழ்க்கையில் மிஞ்சப் போவது எதுவுமே இருக்காது. இந்த ஐவரும் சேர்ந்து போரிட்டாலும் துரோணாச்சாரியாரைத் தோற்கடிக்க முடியுமா? அவரோ தர்மநியாயங்களை ஒதுக்கிவிட்டு திருதராட்டிர மன்னனின் அபிலாசைகளுக்கு ஒத்துழைத்தார்! பாண்டவர்களால் என்ன செய்ய முடியும்? தர்ம யுத்தத்தில் அவர்கள் தோல்வியைத் தழுவினால், துரியோதனன் தன்னுடைய அரக்கு மாளிகை சூழ்ச்சி, திரௌபதியின் மானபங்கம் போன்ற கொடுமைகளை நியாயமானவை-நீதியானவை என்று வரலாறு நம்பும்படி செய்துவிடமாட்டானா?

**பீஷ்ம:** இருப்பினும் பாண்டவர்கள் உம்முடைய துணையைப் பெற்றிருந்தனரே !

**கிருஷ்:** நான் ஆயதம் ஏந்தப் போவதில்லை என்று முன்னரே வாக்களித்து விட்டேனே!

**பீஷ்ம:** எனக்கு எதிராகப் போரிடவும் அன்று துணிந்தீரே! மறந்துபோய்விட்டதா?

**கிருஷ்:** (சிரித்தவாறே) அது ஒரு வகையில் தங்களுடைய வீரத்துக்கு எனது மரியாதையாயிற்றே!

**பீஷ்ம:** உம்முடைய விளையாட்டுத் தனங்களையெல்லாம் கோகுலத்துடன் மறந்து விட்டீர் என்றல்லோ கேள்வியுற்றேன்! உம்முடைய ஆற்றலை எவராலும் ஒதுக்கிவிடமுடியுமா? அல்லது மறுத்துவிடத்தான் இயலுமா மாதவா!

**—காட்சி மாற்றம்—**

கவுரவர் பாசறை-கர்ணன் இரதத்தில் வருகிறான்.

**கர்ண:** காவலனே! மதுரா மன்னர் சல்லியரிடம் நான் வந்திருப்பதாகக்கூறும்!

**சல்லி:** தாமதமானதற்கு மன்னிக்கக் கோருகிறேன் தளபதியாரே!

**கர்ண:** தர்மசங்கடமான நிலைக்குள் என்னைத்தள்ள வேண்டாம் மாமன்னரே! என்னுடைய தேர்ப்பாகனாக நாளை பணியேற்றுப் பெருமைப்படுத்த வேண்டும் என்று கோருகிறேன்! எதிரணியில் வாசுதேவ திருஷ்ணரே தேர்ப்பாகனாக இருக்கிறார்!

**சல்லி:** அர்ச்சுனனின் இலக்குத்தவறாத கணைகளிலிருந்து தங்களை முடியுமானவரை காக்க முயற்சிக்கின்றேன். இதுதவிர ஒரு தேர்ப்பாகனால் வேறு என்னதான் செய்ய முடியும்? விராட நாட்டுப்போரில் அர்ச்சுனன் ஆற்றல் பற்றி தாங்கள் மட்டுமல்ல; கவுர சேனை முழுவதுமே நன்கு அறிந்ததுடன் பெரும் தோல்வியும் கண்டது. பீஷ்மர் முதல் தாங்கள் வரை அர்ச்சுனனின் ஒருவனின் பராக்கிரத்துக்கு எதிராக நின்று பிடிக்க முடியாமற் போய்விடட்து. அது விராட நாட்டுக்காக மட்டுமே உரிய யுத்தம்! ஆனால் இப்போது நடைபெறுவதோ அர்ச்சுனனின் சொந்த யுத்தம் அங்கத்துக்கதிபதியே! அரக்கு மாளிகை அநர்த்தம், திரௌபதியின் மானபங்கம்; மகன் அபிமன்யுவின் அநீதியான கொலை போன்ற கறைபடிந்த ரணங்களால் மறந்துவிட முடியாது பழி உணர்வினால் உந்தப்பட்டு அதிகபல உறுதியுடன் போரிடவருகிறான் அர்ச்சுனன் என்பதை மறக்க வேண்டாம்! இத்தகைய கொடிய ரணங்களைக் கவசமாகப் பூண்டு வரும் அர்ச்சுனனின் மார்பினை பிரம்மாஸ்திரமே பிளக்க முடியாதே!

**—காட்சி மாற்றம்—**

அஸ்தினாபுரம்-திருதராட்டிரர் அரண்மனை.

**திருத:** சஞ்சயா! தேர்ப்பாகனாகச் செல்லும் சல்லியன் ஒருதலைப்பட்சமாக-தனது தகுதியையும் மீறி பழி கூறுதல் சரியல்லவே!

**சஞ்ச:** தகுதி பற்றியோ ஒழுங்கு முறைகள் பற்றியோ கூறுவது இப்போது பொருந்தாது. அபிமன்யுவின் மரணம், துரோணரின் மரணம் ஆகியவை அண்மையில் நடைபெற்றவை. ஆனால்; எப்போதோ பல ஒழுங்கு முறைகள் தகர்த்தெறியப்பட்டுவிட்டன. சந்திர வம்சத்தின் சந்திரனை கிரகண இருள் மூட ஆரம்பித்து விட்டது. அவ்விருள் விஷத்தை உமிழத் தொடங்கிவிட்டது. இந்தக் கொடிய இருள் மறைந்து அஸ்தினாபுரம் மீண்டும் பூரண ஒளியை என்று காணப்போகிறதோ தெரியவில்லை!

**பின்னணிப் பாடல்:**

நீதி நெறிமுறைகள் நேர்மை வழித்தடங்கள்
தீதறியாச் செயற்பணியின் தூய்மை அணி மணிகள்
பாதாளப் படுகுழியில் பாய்ந்து மறைந்ததனால்
வேத வழி விதிமுறா வேதியரைக் காண்பதெங்கே!

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.




படிப்பகம்

Registered as a News Paper at the G.P.O.(PRO/7/95)

அருள் ஜுவலர்ஸ்
436331

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11



அம்மன் ஜுவல்
AMMAN JUWEL
JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11
332033

# உள்ளே-வெளியே




# சாது

காட்டுக்குள் வேட்டைக்குப் போய் பரண் அமைத்து தங்கியிருந்தார்கள் இரண்டுபேர். மோப்பம் பிடித்து இரண்டு சிங்கங்கள் நடத்திய தாக்குதலில் ஒருவர் மடக்கப்பட்டார். பரண் கைப்பற்றப்பட்டது. அந்த திக்....திக் நொடியிலும் இன்னொருவர் பதுங்கி இருந்து 'கிளிக்' செய்த காட்சி இது. இதற்கு என்ன பெயர் வைக்கலாம்? சிங்கப் பாய்ச்சல்!

# கமரா சாகசம்



கமராக்காரர்கள் வித்தியாசமான காட்சிகளை பதிவு செய்யும் விருப்பானவர்களாக இருந்து விட்டால் அவர்கள் ஆபத்தோடு விளையாட வேண்டி ஏற்படும். கனோடும் மெய்மறக் அழகு கவேண்டி வரும். உதாரணத்திற்கு இங்கு 5 படங்கள்.

# கறுப்பு-வெள்ளை



வர்ண … கலர் புகைபடங்களில் கருள் களில் படம்பிடித்தால் மட்டும் காட்… சிகள் அழகாக … இருக்கும் என்… சொன்னது? இந்தப் … உற்றுப் பாருங்க… அசத்தலாக இருக்கிறது தல்லவா! எப்படி? எதை? எந்தக் கோணத்தில்? எடுக்கிறோம் என்பதுதான் அழகான காட்சிக்கு மெருகு!

# தருவது லியோ டெ

அழகே காட்சியானால் கண்ணுக்கு அழகு. முக்கிய திப்பந்தனை. கமராவை கையில் எடுப்பதற்கு முன்னர் கலா ரசனையை நெஞ்சுக்குள் ஆணியடித்து மாட்டிக்கொள்ள வேண்டும். இந்தப் படத்தைச் சுட்டுத் தந்தவரின் கலாரசனை பற்றி எங்களுக்கொரு சந்தேகமும் கிடையாது. உங்களுக்கு?

சிங்கம் கர்ஜித்தால் போதும் குடல் நடுங்கும். இந்த இலட்சணத்தில் பயங்கரமாகப் போஸ் கொடுக்கவைத்து படமெடுப்பது என்றால் இனியில்லையென்றளவுக்கு துணிச்சல் வேண்டும்தானே! எட்டிப் பாருங்கள், சிங்கத்தின் வாயினுள்ளே தாராளமாக ஒரு ஆள் போய்வரலாம் அல்லவா. (போகலாம் வரமுடியாதோ?)

# கண்ணே-கலைமானே!


### சென்றவாரத் தவறு

சென்றவாரம் 20ம் பக்கத்தில் 4 தோடம்பழங்களுக்குப் பதிலாக ஐந்து என்று தவறுதலாக குறிப்பிட்டது என்தவறல்ல. நமது 'புரூப் ரீடர்' தவளையையும் தோடம்பழம் என்று நினைத்து நான் எழுதியதை திருத்தம் செய்து தொலைத்துவிட்டார். எனவே குட்டு அவருக்குத்தான். - லியோ

← அழகை ஆராதிக்கும் கமராக்காரர் 'கிளிக்' செய்த படம் இது. முகம் தெரியாத பெண். ஆனால் குணம் மட்டும் உணர்த்தப்படுகிறது. அதற்கு அடையாளம்தான் பூக்கள். பூ மூலம் பூவையின் குணத்தையும் உணர்த்தியாகிவிட்டது. அதற்கு பூ அர்ச்சனையும் செய்ததாகி விட்டது. கல் ஒன்று மாங்காய் இரண்டு. ரசிக்க முடிகிறதல்லவா படப்பிடிப்பை!



# பெண்ணுக்கென்ன அழகு



கார்மேகக் கூந்தலில் கரும் விஷப் பாம்புகள். அழகோடு ஆபத்தும் இருக்கலாம் என்பதை உணர்த்த இப்படியொரு புகைப்படத்தை சுட்டுத்தந்த கமராக்காரருக்கு முதுகில் ஒரு 'ஷொட்டு'க் கொடுக்கலாம். பயமூட்டுவதற்காக பாவையின் முகத்திலும் மேக்கப் டச்சிங் செய்வதை திருந்தச் செய்தால் களிமண்ணும் சிற்பமாகும். கமரா தரும் காட்சிகளும் கலக்கலாகும்.



… கொழும்பு … தினமுரசு பதிப்பகத்தாரால் … உள்ள சமலை அச்சகத்தில் ஜூலை மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.